www.tamilarangam.net


# தமிழோசை

* உள்ளே.....
* ஸத்யஜித் ரே....
* பறக்கும் பட்டங்கள்
* செவ்வி-கிருஷ்ணமூர்த்தி
* ஈழத்துக் கவிஞர்கள்
* எழுதி... எழுதி....
* சிறுகதை - பக்குவம்

THAMIZHOSAI

ஓசை : 1
ஒலி : 8
ஆங்கிரஸ ஹூ புரட்டாதி மீ 23ந் திகதி (9/22-10-1992) 253 Western Avenue London W3 0PP Tel: 44-(0)81-993 7652 Fax: 44-(0)81-993 8611




## இலங்கையில்
# வெளிநாட்டு தலையீடு இன்றி பிரச்னைக்கு தீர்வு கடினம்

### குமார் பொன்னம்பலம் கருத்து

(நமது நிருபர்)

**இந்தியாவினதோ அல்லது வேறு வெளிநாடுகளினதோ தலையீடு இன்றி இலங்கையில் தமிழர் பிரச்னையை தீர்க்க இயலாது. இல்ங்கை அரசாங்கமோ, தமிழீழ விடுதலைப் புலிகளோ இப்பிரச்னை விரைவில் தீர்க்கப்படவேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருக்கவில்லை.**

**இவ்வாறு லண்டனில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின் தலைவர் திரு குமார் பொன்னம்பலம் 'தமிழோசை'க்கு தெரிவித்தார்.**

தனிப்பட்ட விஜயமொன்னைற மேற்கொண்டு திரு பொன்னம்பலம் லண்டன் வந்திருந்தார். அவர் மேலும் கூறியதாவது:

இப்பிரச்னை விரைவில் தீர்க்கப் படுமென்று நான் நினைக்கவில்லை. இதற்காக நியமிக்கப்பட்ட பாராளு மன்ற தெரிவுக்குழு பிரச்னைக்கு தீர்வு வேண்டும் என்ற விதத்தில் எதனையும் அணுகவில்லை. கடந்த ஆண்டு ஆகஸ்டில் நியமிக்கப்பட்ட இத்தெரிவுக்குழு இன்னமுமே இழு பட்டுச் செல்கிறது. பிரதான கட்சி களான ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இக்குழு முன் இன்னமும் தங்கள் நிலைப்பாட் டைத் தெரிவிக்கவில்லை. இந்நிலை யில் இக்குழு ஒரு தீர்வை முன்வைக் கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. சர்வகட்சி மாநாடு என்பன போன்ற ஒன்றாகவே இதுவும் அமையும். ஆனால் இது இப்படி இழுபட்டுச் செல்வது பலருக்கு சந்தோஷமாக வும், பல விடயங்களை மூடிமறைப் பதற்கு வாய்ப்பாகவும் அமைகிறது.


ஜனாதிபதி பிரேமதாச இவ் வாண்டு இறுதிக்குள் இனப்பிரச்னை யைத் தீர்ப்பேன் என்று சொல்கிறார். எதை வைத்து இவர் இப்படிக் கூறு கின்றார் என்பது தெரியவல்லை. ஆண்டு முடிவில் தீர்ப்பவர் ஏன் இப்போது தீர்க்க முடியாது? பிரேம தாச ஒரு தீர்வைக் காண்பதாக இருந்தால் அது இராணுவத் தீர்வா கத்தான் இருக்கும். அதைத்தான் அவர் கூற முடியும்.

இது தவிர, அரசுக்கும் விடுத லைப் புலிகளுக்குமிடையே இரக சியப் பேச்சு எதுவும் நடைபெறு கிறதா என்பது தெரியவில்லை. தனிநாடுக்காகப் போராடும் புலிகள் எப்படி அரசாங்கத்துடனோ அல்லது சுதந்திரக் கட்சியுடனோ பேசமுடி யும்? அதிலும் ஓர் இனத்தின் எதிர் காலத்தைப் பற்றி இரகசியப் பேச்சு வார்த்தைகள் நிகழ்த்தமுடியாது.


எங்களுடைய பிரச்னையில் இந்தி யாவினுடைய உதவி தவிர்க்கமுடி யாதது என்று கூறுவதும் இன்று பலருக்கு பிடிப்பதில்லை. ஜனாதி பதிக்கு இந்தியாவைப் பிடிக்காததும் இதற்குக் காரணம். இந்தியாவைப் பொறுத்தவரையிலும் இவர்கள் இனியும் முன்னரைப்போல் எங்கள் பிரச்னையில் அக்கறை கொள்வார் களா என்பதும் சந்தேகமே. எப்படி யெனினும் இந்தியாவினதோ அல்லது வேறு வெளிநாடுகளினதோ தலையீடு இன்றி இப்பிரச்னைக்கு தீர்வுகாண்பது இயலாது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு மு.சிவசிதம்பரம் அண்மையில் தெரிவித்திருந்த சமஷ்டி அமைப்பு தொடர்பான ஆலோசனைப்பற்றிக் குறிப்பிடு கையில், 4 அம்சத்திட்டமொன்றை ஏழு தமிழ்க் கட்சிகளின் கூட்டு தற் போது முன்வைத்திருக்கையில் திரு சிவசிதம்பரத்தின் இந்த யோசனை குழப்பத்தையே உண்டாகும் என் றார். தமிழர் கூட்டணியில் திரு தொண்டமானும் ஒரு தலைவராக இருந்தபோது பண்ணாகத்தில் எடுக் கப்பட்ட தீர்மானத்தால் தொண்ட மான் கூட்டணியிலிருந்து வெளியேற நேர்ந்ததை அவர் சுட்டிக்காட் டினார்.

முஸ்லிம்கள் பற்றி குறிப்பிடு கையில் தமிழ்ப் பிரச்னைதான் முஸ்லிம்களின் பிரச்னையும் என்று திரு பொன்னம்பலம் தெரிவித்தார்.



கடந்த ஆண்டு ஜனவரியில், 10 வயதாக இருக்கும் போது சென்னை சங்கீத வித்வ சபையில் மாலை நேரக் கச்சேரி செய்தான் இந்தச் சிறுவன். சுத்தமான சாஸ்திரீய பாரம்பரியத்தில் வந்த புல்லாங்குழல் மன்னர் என்று அவனைக் கொண்டாடினார்கள். மூன்று வயதிலேயே 74 மேளகர்த்தா ராகங்களின் ஸ்வர பேதங்களை கண்டறிந்து விட்டான். 11 வயது வரை அவருடைய சங்கீத ஞானம் முழுவதும் கேள்வி ஞானமே.
இந்த இளம் மேதை சஷாங்கன் சுப்பிரமணியம் லண்டன் பாரதீய வித்ய பவன் மண்டபத்தில் கடந்த மாதம் 26ஆம் தேதி தன் வேணுகானத்தால் மாயம் புரிந்தான்.



புரட்டாதி சனியில் திருப்பதியில் இறங்கிய மாதவனின் மணக்கோலம்

# ஆனையிறவு பாலம் திறக்கப்படும்?

(கொழும்பு நிருபர்)

கண்ணிவெடிகளை அகற்றி ஆனையிறவுப் பாதையை பொது மக்கள் போக்குவரத்துக்கு அநும தித்தால் இராணுவம் அப்பாதையை யாழ்.நகர் மீதான தாக்குதலுக்கு பயன்படுத்தமாட்டாது என்று இராணுவம் உறுதியளிப்பதாக கூட்டுப்படைத் தலைமையக பேச் சாளர் கேணல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை நிருபர் களிடம் அவர் இதைத் தெரிவித்தார்.

ஆனையிறவுப் பாதை விடுத லைப் புலிகளினால் தடைசெய்யப் பட்டதையடுத்து குடாநாட்டிலிருந்து மக்கள் கிளாலி பாதையூடாகவே

(6ம் பக்கம் பார்க்க)

லண்டனிலிருந்து வெளியாகும் அனைத்துலக தமிழர் பத்திரிகை

www.tamilarangam.net

# விரைவில் தீர்வு வேண்டும்

(கொழும்பு)



'சார்க்' அமைப்பின் தலைவர் என்ற முறையில் சார்க் அங்கத்துவ நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்ட ஸ்ரீலங்கா ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாஸ இம்மாதம் 6ஆம் தேதி நாடு திரும்பினார்.

இதன்போது இந்தியாவிற்கான விஜயத்தின் இறுதியில் இலங்கை இந்திய கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை இனப்பிரச்னைக்கு சகல தரப்பினரும் சம்பந்தப்படும் சமரச தீர்வு காண தமது அரசு உறுதி கொண்டிருப்பதை திரு ஆர்.பிரேமதாஸ வலியுறுத்தினார். அதேவேளை ஐக்கிய இலங்கைக்குள், தமிழ் மக்களின் சட்ட பூர்வ அபிலாசைகளை நிறைவேற்ற நீதியான சமத்துவமான தீர்வை தனது மக்களின் முயற்சிகள் மூலம், இலங்கை காணும் என்ற நம்பிக்கையை இந்தியப் பிரதமர் வெளிப்படுத்தினார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மூலம் பயங்கரவாத செயல்களை ஒழிக்கும் பிராந்தியத்தின் செயல் திறனை ஒத்துழைப்புடன் மேற்கொள்ளுவதென்றும் கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்தை நசுக்குவதற்கு 'சார்க்' நாடுகளுடையில் நெருங்கிய ஒத்துழைப்பு இருக்க வேண்டுமென்று திரு ஆர்.பிரேமதாஸ தெரிவித்த கருத்தை ஏற்றுக்கொண்ட இந்தியப் பிரதமர் திரு நரசிம்மராவ் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகளால் பலப்படுத்தி பிராந்திய ரீதியில் ஒத்துழைப்பை ஏற்படுத்த இந்தியா விரும்புகின்றது என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை மக்களின் வழமையான வாழ்க்கையை தொடர்ந்து சீர்குலைத்து இலங்கையின் ஐக்கியம் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக இருந்து வரும் இனப்பிரச்னைக்கு விரைவாக தீர்வு காண வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஸ்ரீலங்கா ஜனாதிபதி புலிகளின் ஆயுதப் போரை கைவிட்டால் தனது அரசு பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கும் என்றும் தேர்தலில் இந்த கட்சிகள் பங்கு பற்றும் உரிமையை அவர்கள் அங்கீகரிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

# நீதியரசர் தம்பையா காலமானார்

(நமது நிருபர்)

இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் திரு எச்.டி.தம்பையா வைத்திய சிகிச்சைக்காக வந்திருந்த வேளையில் இங்கு லண்டனில் இம்மாதம் 6ஆம் தேதி காலமானார். இரு வாரங்களுக்கு முன்னர் அவர் இங்கு வந்திருந்தார்.

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி பழைய மாணவரான திரு தம்பையா 1954ஆம் ஆண்டு சட்டத்துறையுள் பிரவேசித்தார். 1978இல் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டவர், 1984இல் உயர் நீதிமன்றத்துக்கு உயர்த்தப்பட்டார். 1991இல் பிரதம நீதியரசராக நியமனம் பெற்று அதே ஆண்டில் ஓய்வு பெற்றார்.

இவரின் மனைவி ரஜனி. இவர்களின் ஒரே புதல்வி சாவித்திரி விஜயரத்தினம். 66 வயதான திரு தம்பையாவின் பூதவுடல் நியூ குறோலியிலுள்ள சறே, சசெக்ஸ் மயானத்தில் இம்மாதம் 10ஆம் தேதி சனிக்கிழமை காலை 10.15 மணிக்கு நல்லடக்க ஆராதனைகளின் பின் நல்லடக்கம் செய்யப்படும்.

திரு தம்பையா தவிர, திரு என்.நாகலிங்கம், திரு எஸ் சர்வானந்தா ஆகியோர் இலங்கையில் பிரதம நீதியரசர்களாகவிருந்த தமிழர்களாவர்.

# மினி முகாம் தகர்ப்பு

(கொழும்பு)

ஆனையிறவிற்கு கிழக்கே கட்டைக்காடு எனுமிடத்தில் அமைந்திருந்த ஸ்ரீலங்கா இராணுவ மினிமுகாம் ஒன்று இம்மாதம் 2ஆம் தேதி விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்டு பெரும் தொகையான இராணுவ தளபாடங்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இவை சுமார் 10 கோடி ரூபா பெறுமதியானவை என அரசு கூறியுள்ளது.

நள்ளிரவு வேளையில் விடுதலைப் புலிகள் தொடுத்த தாக்குதலில் நிலை குலைந்த இராணுவம் பலத்த இழப்புகளுக்கு முகம் கொடுத்துள்ளது.

சில நிமிட நேரங்களின் பின்னர், இராணுவம் திருப்பித் தாக்கியதில் மூண்ட மோதலில், 23 இராணுவத்தினரும் 13 விடுதலைப்புலிகளும் கொல்லப்பட்டு 6 இராணுவத்தினர் காணாமல் போயுள்ளனர்.

மன்னாரில் இதே சமயம் நடைபெற்றுக் கொண்டிருந்த பாரிய இராணுவ நடவடிக்கையை திசை திருப்ப மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட பெருமளவு ஆயுதங்கள் யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

# மரண அறிவித்தல்

## வை.சி.சி.கு. பிரம்மானந்தா

யாழ்ப்பாணத்தின் பிரபல வர்த்தகரான கந்தர்மடத்தைச் சேர்ந்த திரு வை.சி.சி.கு.பிரம்மானந்தா அவர்கள் 04.10.92அன்று லண்டனில் காலமானார். இவர் நாகேஸ்வரியின் அருமைக் கணவரும் வரதாகார்த்தியின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் 10.10.92 சனிக்கிழமை 1, ADISCOMBE COURT, UXBRIDGE ROAD, HILLINGDON இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணிக்கு அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு GOLDERS GREEN CREMATORIUM இல் பகல் 11.00 - 12.00 மணிக்கிடையில் தகனம் செய்யப்படும். உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

Tel:081- 318 6746 081- 573 6709

# சக்தி விழா


(நமது நிருபர்)

ஹரோ தமிழ்ப்பாடசாலையின் சக்தி விழா இம்மாதம் 3ஆம் தேதி பாடசாலை மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. பெற்றோர்களும் ஆதரவாளர்களும் இதில் பெருமளவில் கலந்து கொண்டனர்.

நடன ஆசிரியை திருமதி சியாமளா ஜோசப், சங்கீத ஆசிரியை திருமதி புவனா இளம்பூரணர், மிருதங்க ஆசிரியர் திரு ஆனந்த நடேசர், வீணை ஆசிரியை திருமதி சிவதாரணி சகாதேவன், வயலின் ஆசிரியர் திரு சிவசங்கர் ஆகியோர் தம் மாணவமாணவியர் மூலம் அளித்த நிகழ்ச்சிகள் ரம்மியமாக இருந்தன.

இதுதவிர, மாணவர்களின் நவராத்திரி பற்றிய விளக்கவுரை, நாடகம் என்பனவும் இடம்பெற்றன. திரு ராஜீ மோகன், திருமதி வேலுப்பிள்ளை ஆகியோர் சக்தி வழிபாடு பற்றி உரையாற்றினார்கள்.

THAMPA
SOLICITORS
16 Welbeck Road West Harrow
Middx HA2 0RW Tel: 081 422 8248
* CONVEYANCING *LITIGATION
* IMMIGRATION MATTERS * LANLORD & TENANT
* LIQUOR LICENCING * PERSONAL INJURY
* WILLS & PROBATE * MATRIMONIAL MATTERS
LEGAL AID WORK UNDERTAKEN

KARATE

LEARN THE WORLDS FINEST ART OF
SHOTOKON KARATE
the easy way
by
sensi s.ganeshalingam
(BLACK BELT NIDAN)
For sport, self defence, confidence and fitness
at
St. John's Community Hall
St. Johns Road, Isleworth
Tuesdays and Fridays
7 p.m. to 8.45 pm
New Club starting on
19TH OCTOBER 92
at
Trinity Centre, East Avenue, East Ham
Mondays & Thursdays 7p.m to 8.45p.m
Open for men & women of all ages
Well expeienced instructors who created championsn in the past
Come along on Training nights or Phone
081-569 9416

தமிழோசை
சந்தா படிவம்

தமிழோசை பத்திரிகையை அஞ்சலில் பெற கீழ்க்காணும் விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்து அதற்கான பணத்தையும் காசோலையாகவோ அல்லது தபால் கட்டளையாகவோ அனுப்பி வைக்கவும்.
(Please mark Cheques or Postal Orders Payable to "THAMIZHOSAI")

Name: ____________________
Address: ____________________
____________________
____________________
____________________
Postcode: ____________________

| | UK/Europe | Other Countrys |
|---|---|---|
| 12 Issues | £ 7.00 | Us $ 20.00 |
| 24 Issues | £ 12.00 | Us $ 40.00 |

PLEASE SEND THIS FORM TO
THAMIZHOSAI
253, WESTERN AVENUE
LONDON W3 0PP
UNITED KINGDOM

For All Your Legal Needs
SRI KANTH & CO
SOLICITORS
N.Balakrishnan L.L.B
S.Srikanthalingam B.A
Assistant
Mrs Kamalika Ratnayake
SRI KANTH & CO
1st Floor
604 High Road
Wembley
Middx HA0 2AF
TEL:081 795 0648
FAX:081 795 0649
MOBILE: 0831 195979



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜெயலலிதா பதவி விலக வேண்டும்

## சுப்பிரமணியம் சுவாமி மகஜர்

(சென்னை)

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்த நடவடிக்கை குழு ஒன்றை ஜனதா கட்சி தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி அமைத்திருக்கிறார். இக்குழுவில் அ.இ.அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் க.ராஜாராம் இடம் பெற்று இருக்கிறார். மற்றும் தமிழக சட்டப்பேரவையின் முன்னாள் தலைவர் பி.எச்.பாண்டியன் மனித உரிமை கட்சி தலைவர் இளைய பெருமாள், முன்னாள் அமைச்சர் வி.வி.சுவாமிநாதன் ஆகியோரும் இக்குழுவில் அங்கம் வகிக்கிறார்கள். இதன் விளைவாக அ.இ.அ.தி.மு.கவின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து க.ராஜாராம் விலக்கப்பட்டார். கட்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அவர் மீது கட்சி இந்த நடவடிக்கையை எடுத்தது. தமிழக ஆளுநரை சந்தித்து



ஜெயலலிதா மீதான புகார் மனு ஒன்றை டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தந்திருக்கிறார். மேலும் இதன் தொடர் நடவடிக்கையாக புது டில்லியில் பிரதமரிடம் இத்தகைய மனு ஒன்று சமர்ப்பிக்கப்பட இருக்கிறது.

'ஜெயலலிதா அரசு பதவி விலக கோரி ஜனதா கட்சி தலைவர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு நான் முழு ஆதரவு அளிக்கிறேன். இந்த நடவடிக்கையில் நானே முன் வந்து ஈடுபடுகிறேன். இதில் யாருடைய தூண்டுதலும் இல்லை. டாக்டர் சுப்பிரமணிய சுவாமி ஜெயலலிதா மீது கூறும் குற்றச் சாட்டுகள் எனக்கு திருப்தி அளிக்கின்றன. குற்றச் சாட்டுகளுக்கு அவரிடம் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன. எனவே நான் அவரை ஆதரிக்க முடிவு செய்தேன் என்ற நிருபர்களிடம் பேசுகையில் க.ராஜாராம் குறிப்பிட்டார்.

# குற்றவாளிகளை திருப்பி அனுப்ப ஒப்பந்தம் கைச்சாத்து!

(நமது நிருபர்)

இந்தியாவும் பிரிட்டனும் குற்றவாளிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டுள்ளன.

கடந்த மாதம் 22ஆம் தேதி உள்நாட்டலுவலகத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் பிரிட்டிஷ் உள்நாட்டு செயலாளர் திரு ஹெனத் கிளார்க்கும் இந்திய உள்நாட்டமைச்சர் திரு எஸ்.பி.சவானும் இதில் கைச்சாத்திட்டனர்.

முக்கியத்துவம் வாய்ந்த இப்புதிய ஒப்பந்தத்தின் கீழ் பிரிவினை, போதைவஸ்து கடத்தல் போன்றவற்றில் ஈடுபடுவோர் நாடு கடத்தப்படுவார்கள். உடைமைகளைப் பறிமுதல் செய்வதற்கும் இந்த பரஸ்பர ஒப்பந்தம் வழிவகுக்கும்.

பிரிட்டன் இனி தீவிரவாதிகளுக்கு புகலிடம் அளிக்கமாட்டாது என்று பிரதமர் திரு ஜோன் மேயர் திரு சவானிடம் தெரிவித்தார். இந்தியாவுக்கு விஜயம் செய்யும்படி திரு சவான் விடுத்த அழைப்பையும் திரு மேயர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

# அனுப்பப்படும் அகதிகள்

(கொழும்பு)

இலங்கையில் வன்முறைகளில் இருந்து தம்முயிரைக் காப்பாற்ற தமிழ் நாட்டில் தஞ்சமடைந்த தமிழ் அகதிகள், சொந்த நாட்டில் தஞ்சம் புக வைக்கும் படலங்கள் தொடர்கின்றன.

3ம் தேதி சனிக்கிழமை, வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 135 குடும்பங்களைச் சேர்ந்த 443 தமிழர்கள் கப்பலில் திருமலை அனுப்பப்பட்டு புகையிரதம் மூலம், வவுனியா அனுப்பி வைக்கப்பட்டனர்.

கொடுக்கப்பட்ட வாக்குறுதிப்படி உரிய நிவாரணங்கள் படிப்படியாக வழங்கப்படும் என்பதன் அடிப்படையில் இக்குடும்பங்கள் சொந்த கிராமங்களுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 45 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 160 பேர் வவுனியாவில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களாதலால் அங்கு அகதி முகாமில் மீண்டும் தஞ்சம்புக வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வகையில் மேலும் தமிழகத்தில் இருந்து வரும் அகதிகளை தங்க வைத்து பராமரிக்கவென வவுனியா எல்லையில் ஆசிக்குளம், சிதம்பரபுரம் கிராமங்களை உள்ளடக்கிய 65 ஏக்கர் நிலப்பரப்பில் பாரிய அகதி முகாம் அமைக்கப்பட்டும் வருகிறது.

ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலய மேற்பார்வையில் அமையும் இவ்வகதி முகாமில் 20ஆயிரம் தமிழர்கள் தஞ்சம்புக வைக்கப்படவுள்ளனர்.

இலங்கையில் ஏற்கனவே உள்ள சுமார் 2 இலட்சம் அகதிகளுடன், சர்வதேச அங்கீகாரத்துடன் தமிழ் நாட்டில் இருந்து சொந்த நாட்டில் அகதிகளாக்கப்படும் படலத்திற்கு இன்னமும் ஒரு லட்சம் தமிழர்கள் தமிழ்நாட்டில் காத்திருக்கின்றனர்.

# 'அழகு பாட்டி ராணி'

(சென்னை)

உலக முதியோர் தினத்தையொட்டி சென்னையில் முதியோர்கள் கலந்து கொண்ட சிறப்பான விழாவொன்று நடைபெற்றது. முதியோர்களுக்கான பல்வேறு விளையாட்டு போட்டிகள் விழாவின் சிறப்பம்சமாக இடம் பெற்றன. மெழுகு வர்த்தி எரிய வைத்தல், பறவைகள் மற்றும் பல்வேறு மிருகங்கள் போல் ஒலி எழுப்புதல், ராணி நடைப்போட்டி, பஸ் ஸ்டாப் போட்டி போன்ற பல போட்டிகளில் தாத்தாக்களும், பாட்டிகளும், மிகவும் உற்சாகமாகக் கலந்து கொண்டார்கள். 'அழகு தாத்தா ராஜா' 'அழகு பாட்டி ராணி' ஆகிய பட்டங்களுக்கான அழகுப் போட்டியும் நடைபெற்றது. இதில் கிறிஸ்தோபர் என்ற எழுபது வயது பெரியவரும், எஸ்தர் என்ற 101 வயது பாட்டியும் பெற்றி பெற்று வாகை சூடினார்கள். அவர்கள் இங்கிலாந்து ராணிமார் மன்னர் போல வேடமணிந்து வந்து அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றனர். சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி காந்தகுமாரி விழாவில் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினர்.

# இராணுவ நடவடிக்கைகள்

(கொழும்பு)

புதன்கிழமை அதிகாலை திடீரென பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவின் கீழ் முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு மாவட்டங்களில் ஏக காலத்தில் இலங்கை அரச படைகள் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தன.

கடந்த சில வாரங்களாக, இம் மாவட்டங்களில் விடுதலைப்புலிகளின் நடமாட்டங்கள் அதிகரித்ததை காரணம் காட்டி இடம்பெற்ற இந் நடவடிக்கைகளில் விமானங்களின் உதவியுடன் பலத்த தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.

முல்லைத்தீவில் சிங்கள குடியேற்ற கிராமங்களின் பாதுகாப்பை முன்னிட்டு எல்லையில் காடுகளை அண்டிய பகுதிகள் கடும் தாக்குதல்களுக்கு இலக்காகின. உயிர்ச் சேதங்கள் அறிவிக்கப்படவில்லை.

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்த பகுதிகள் குறிப்பாக நகர், பலத்த தேடுதல் நடவடிக்கைக்கு இலக்கானது.

# மீண்டும் பாதஜாத்திரை

(சென்னை)

1967ம் ஆண்டு காமராஜர் அவர்களின் ஆசியுடன் குமரி அனந்தன் தலைமையில் கன்னியா குமரியில் இருந்து சென்னைக்கு காங்கிரஸ் காரார்கள் மேற்கொண்ட பாதயாத்திரையின் வெள்ளி விழாவினை, நினைவு கூரும் வகையிலும், தமிழ் நாட்டில் மீண்டும் காமராஜர் ஆட்சியை அமைக்க வேண்டியும், பூரண மது விலக்கு, அனைத்து நதிகளையும் இணைப்பது போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தியும், மறுபடியும் ஒரு பாத யாத்திரையை குமரி அனந்தன் மேற்கொண்டிருக்கிறார். 123 காங்கிரஸார் குமரி அனந்தன் தலைமையில் மகாத்மா காந்தி பிறந்தநாளான அக்டோபர் 2ம் தேதியன்று காலை கன்னியா குமரியிலிருந்து ஒரு பாத யாத்திரையை ஆரம்பித்திருக்கிறார்கள். மத்திய அமைச்சர் அருணாச்சலம் அவர்கள் வாழ்த்துரை வழங்கி குமரி அனந்தனுக்கு கதர் குல்லாய் அணிவித்தார். மொத்தம் 1000 கி.மீட்டர் தூரத்தை கடந்து இப்பாத யாத்திரைக் குழு வருகிற நவம்பர் மாதம் 14ம் தேதி நேரு பிறந்த நாளன்று சென்னையை வந்தடையும்.

# இரவிலும் ஒளிரும் மாமல்லபுரம்

(சென்னை)

சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் உள்ள அழகிய சிற்பங்களை இனி சுற்றுலாப் பயணிகள் இரவு நேரங்களிலும் கண்டு களிக்கலாம். பகலைப் போலவே ஒளி வெள்ளத்தை உமிழும் வகையில் பத்து லட்சம் ரூபாய் செலவில் மாமல்லபுரம் சிற்பங்களுக்கு இப்போது சிறப்பு மின் ஒளி வசதி செய்யப்பட்டிருக்கிறது. மேலும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் 88 லட்சம் ரூபாய் செலவில் நவீன பேருந்து நிலையம் ஒன்றும் அமைக்கப்படுகிறது. அதேபோல் கிழக்கு ராஜ வீதியை நவீனமாக்கவும் இருபது லட்ச ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டு பணிகள் தொடரப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் இந்த சிறப்பு மின்னொளி வசதியை தமிழக அமைச்சர் எஸ்.கண்ணப்பன் துவக்கி வைத்தார்.

# கேட்பிரிட்ஜ் தேர்வு

(நமது நிருபர்)

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் நடாத்தும் க.பொ.த. சாதாரணதர தமிழ் மொழிப் பரீட்சைக்கு 67 மாணவர் லண்டன் தமிழ் அக்காதமி மூலம் விண்ணப்பித்துள்ளனர். வெம்பிளி கொப்லன்ட் உயர் பாடசாலை, அல்பேட்டன் உயர் பாடசாலை, பெட்போட் பிடெனம் மேல் பாடசாலை, லண்டன் தமிழ்க் கழகம், மொழி- கலைகளுக்கான தமிழ் அக்காதமி, ஈஸ்ற்ஹாம் திருவள்ளுவர் பாடசாலை என்பனவற்றிலிருந்து இவர்கள் அக்காதமி மூலம் விண்ணப்பித்திருக்கிறார்கள்.

நவம்பர் 29ஆம் தேதி நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத்தேதி அக்டோபர் 1ஆம் தேதியுடன் முடிவடைந்தபோதும் பிந்திய விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும். பர்ட்சை வெம்பிளி கொப்லன்ட் உயர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

# தமிழறிஞருக்கு விருந்துபசாரம்

(நமது நிருபர்)

தமிழறிஞர் திரு சோ.சிவபாதசுந்தரத்தின் 80வயது நிறைவையொட்டி லண்டன் 'கலாபவனம்' நுண்கலை நிறுவனம் அவருக்கும் அவரது துணைவியாருக்கும் மதியபோசன விருந்து ஒன்றை அளித்தது.

இம்மாதம் 6ஆம் தேதி கற்போட்ரிறினிற்றி மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் டாக்டர் ராஜன் நமசியவாயம், திரு எஸ்.யோகராஜா, டாக்டர் இரத்தினேஸ்வரன், டாக்டர் சிவகுமார், திரு சிறீக்கந்தராசா ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

திரு சிவபாதசுந்தரம் 'கலாபவன'த்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும் அதன் தலைவருமாவார்.



திருமதி சுபத்திரா சிவதாசனும் அவரது மாணவியர் சிலரும்.

சுபத்ரா சிவதாசனின் 'நூபுரகேந்திர' நாட்டிய பாடசாலை அளிக்கும் 'விஷ்ணு அர்ப்பணம்' நாட்டிய நிகழ்ச்சி இம்மாதம் 11ஆம் தேதி ஞாயிறு மாலை 6 மணிக்கு குறொய்டன் பார்க் லேன் அஷ்குறொவற் தியேட்டரில் நடைபெறுகிறது. இலங்கை தெஹிவளை விஷ்ணுமூர்த்தி கோவில் நிதிக்காக இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மன்றத்தில் ஒலித்த பேருரைக் கீற்றுகள்

# எமது ஆட்சி உரிமையைக் கேட்கிறோம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக்கட்சி தேசிய கட்சி என்று தன்னை அழைத்துக் கொள்ளும் உரிமையை இழந்து விட்டது என்று அவர்கள் அப்பொழுது கூறினார்கள். இந்தச் சிங்கள இன வாதத்துக்கு அடிபணிந்து தங்களுடைய தனித்துவத்தை இழந்து விடமாட்டோம் என்று அவர்கள் அன்று கூறினார்கள். ஐக்கிய தேசியக் கட்சியிலேயிலிருந்து அல்பிரெட் தம்பையா போன்ற எல்லோருமே வெளியேறினார்கள் அன்று.

1956ஆம் ஆண்டுத் தேர்தலிலே தமிழ் மக்களுடைய ஆதரவு அற்ற ஒரு கட்சியாக ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் போட்டியிட்டது. சேர்.ஜோன் கொத்தலாவலையின் தலைமையிலே போட்டியிட்ட அந்த நேரத்திலே தான் ஐக்கிய தேசியக் கட்சி எட்டே எட்டு அங்கத்தவர்களுடன் இச்சபைக்குத் திரும்பி வருகின்ற சந்தர்ப்பம் ஏற்பட்டது. பிரதம அமைச்சராக இருந்த ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராகக் கூட வரவில்லையே என்று, அத்தனகல்லைப் பாராளுமன்ற அங்கத்தவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைச் சூசகமாகக் குறிப்பிட்டு, கௌரவ பிரதம அமைச்சரவர்கள் நேற்று இச்சபையிலே பேசினார்கள். ஆனால், 1956ஆம் ஆண்டில் அந்த மாதிரியான ஒரு நிகழ்ச்சி நடந்தேறியது. பிரதம அமைச்சராக இருந்த சேர் ஜோன் கொத்தலாவலை அவர்களால் எதிர்க்கட்சித் தலைவராகக்கூட வரமுடியவில்லை அன்று. அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக வந்தவர் கலாநிதி என்.எம்.பெரேரா. எதிர்க்கட்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட இளைய அங்கத்தவனொருவனாக அன்று நான் வந்தவன் என்ற முறையில் எனக்கு மிக நன்றாக இது தெரியும் என்பதை கூற விரும்புகிறேன். எனவே அன்றும் ஒரு முறை அப்படி நடந்தது. 1956ஆம்

> சத்தியாக்கிரகிகளுக்குத் தோடம்பழச்சாறு கொடுத்து அவர்களை உண்ண வைத்து அன்றைய பிரதமர் திரு பண்டாரநாயக்க இங்கு வந்து சொன்னார், "அந்த பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்" என்று. இனி மேல் அதைத் தாம் செயற்படுத்த முடியாதென்றும் அவர் அறிவித்தார்.

ஆண்டு நடந்த அந்தப் பிரளயத்திலே ஆளும் கட்சி, இருந்த இடம்கூடத் தெரியாமல் மறைக்கப்பட்டு, இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இருப்பதுபோல, எதிர்க்கட்சியிலும் மிகச் சிறிய தொகையினரோடு வந்திருந்ததால், சமசமாசக் கட்சியின் தலைவராக இருந்த கலாநிதி என்.எம்.பெரேரா எதிர்க்கட்சித் தலைவராகவும் அடுத்த இரண்டாவது ஸ்தானத்திலே திரு செல்வநாயகம் அவர்களின் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சி இரண்டாவது பெரிய எதிர்க்கட்சியாகவும் இருந்தது.

## தனிச்சிங்களச் சட்டம்

1956ஆம் ஆண்டிலே சிங்களம் மாத்திரம் தான்ஆட்சிமொழி என்ற சட்டத்தைப் பிரதமர் பண்டாரநாயக்க அவர்கள் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள். அந்தச் சட்டத்திலே தமிழ் உரிமையைப் பற்றிச் சில பகுதிகள் சேர்க்கப்பட்டன. ஆனால், எனக்கும் இங்கேயுள்ள பலருக்கும் பேராசிரியராக இருந்த திரு எவ்.ஆர்.ஜயசூரிய அவர்களும் திரு கே.எம்.பீ.இராசரத்தின அவர்களும் இச்சபைக்கு முன்னால் உள்ள மண்டபத்திலே குளுக்கோஸ் சாப்பிட்டுக்கொண்டு உண்ணாவிரதமிருந்தார்கள். அவர்களுடைய உண்

> திரு அ.அமிர்தலிங்கம் 1978ஆகஸ்ட் 3ஆம் தேதி இலங்கையின் குடியரசு அரசியலமைப்பு தொடர்பாக ஆற்றிய உரையின் இறுதிப் பகுதி இது.
>
> இலங்கைப் பாராளுமன்றத்தில் இடம் பெற்ற முக்கியத்துவம் வாய்ந்த உரைகள் சிலவற்றை அவ்வப்போது இத்தொடரில் தருகின்றோம்.

ணாவிரதத்துக்கு அடிபணிந்து, காலஞ்சென்ற திரு பண்டாரநாயக்க அவர்கள் தமிழ்மொழிக்கு எந்தவிதமான இடமுமளிக்காமல் சிங்களம் மாத்திரம் சட்டத்தை, ஒருவரிச் சட்டமாக, அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். 1956ஆம் ஆண்டு ஆனி மாதம் 5ஆம் தேதி அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தை எதிர்த்து நாம் மிகவும் அமைதியாகச் சத்தியாக்கிரகம் செய்தோம். இன்று ஆட்சி பீடத்திலிருப்பவர்கள் எப்படி முன்னைய அரசாங்கத்தின் காலத்திலே அவர்களை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் செய்ய முற்பட்டார்களோ அந்த விதத்தில் நாமும் சத்தியாக்கிரகம் செய்தோம்.

## முதல் இனவெறி

வெறுமனே, மழையிலே காலி முகக் கடற்கரையிலே பச்சைப் புற்றரையிலே நாம் இருந்தோம். எமக்கு எதிராக முதல்முதலாக இனவெறி கட்டவிழ்த்துவிடப்பட்டது. காடையர்களை ஏவி விட்டார்கள். 300 பேரளவில் நாம் அங்கிருந்தோம். ஆயிரக்கணக்கில் காடையர் வந்தார்கள். எம்மை நாம் வருத்தி, மழையிலேயிலிருந்து எம்மை வருத்துவதன் மூலம் ஆட்சியாளரும் பெரும்பான்மையினமும் எங்களுக்கு நீதி, நியாயம் வழங்கவேண்டும் என்பதை அவர்களுக்கு உணர்த்தலாம் என்று நாம் அங்கே காந்திய வழியிலே சத்தியாக்கிரகம் செய்தோம். கௌரவ சபாநாயகரவர்களே, நான் இவற்றையெல்லாம் ஏன் குறிப்பிடுகிறேனென்றால், இப்பொழுது இங்கு இருப்பவர்கள் எல்லாம் அன்று சின்னப்பிள்ளைகளாக இருந்திருப்பார்கள். இந்தச் சரித்திரம் ஒரு வேளை அவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். வருங்காலத்திலே இவையெல்லாம் தேவைக்காகக் குறிக்கப்படவேண்டுமென்பதற்காக இச்சந்தர்ப்பத்திலே இவற்றை இங்கே கூற விரும்புகிறேன். இவ்வாறு நாம் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட நேரத்திலே கட்டவிழ்த்துவிடப்பட்ட காடையர்கள் எம்மைத் தாக்கினார்கள். என்னுடைய உடைகள் கிழித்தெறியப்பட்டன. யாரோ எறிந்த கல் என்னுடைய மண்டையை பிளந்தது. எனக்கு நெற்றியிலும் தலையிலும் இருகாயங்கள் ஏற்பட்டன. பக்கத்திலிருந்த வவுனியாப் பிரதிநிதி திரு சுந்தரலிங்கம் அவர்களின் கைக்குட்டையினால் எனது தலையிலுள்ள காயத்தைக் கட்டிக் கொண்டு அந்த இரத்தம் தோய்ந்த உடையோடு நான் இச்சபைக்குள் வந்தேன். நான் இச்சபைக்கு வந்த பொழுது அப்பொழுது இருந்த பிரதமருக்கு அது ஒரு நகைப்பாக இருந்தது. அவர் சொன்னார், "Honourable Wounds Of War" என்று. யுத்தத்திற்பட்ட வீரத் தழும்போடு நான் வந்திருக்கின்றேன் என்று அவர் கூறினார்.

அன்று முதல் இருபத்திரண்டு வருடங்களாக இந்தச் சட்டத்தை எதிர்த்து தமிழ் மக்கள் விடாப்பிடியாகக் கிளர்ச்சி செய்து வந்திருக்கிறார்கள். அந்தச் சட்டம் இந்த நாட்டில் தமிழ் தேசிய இனத்தை இரண்டாம் பிரசைகளாக்குகின்ற ஒரு முத்திரை. அதை எதிர்த்து 1956ஆம் ஆண்டு முதல் நாம் எத்தனையோ கிளர்ச்சிகளை நடத்தினோம். 1957ஆம் ஆண்டிலே எங்களோடு ஓர் ஒப்பந்தத்திற்கு வந்தார் அன்றைய பிரதமர் திரு பண்டாரநாயக்க.

## பண்டா - செல்வா ஒப்பந்தம்


அந்த ஒப்பந்த வரலாற்றைத் தாங்கள் அறிந்து இருப்பீர்கள் கௌரவ சபாநாயகர் அவர்களே, 'ஏனெனில் அந்த ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டியை நோக்கி இன்றைய சனாதிபதி தலைமையில் சென்ற யாத்திரையில் தாங்களும் கலந்திருந்தீர்கள் என்று அன்றொரு நாள் சனாதிபதி அவர்கள் சொல்லி நான் அறிந்தேன். அந்த ஒப்பந்தம் எமது முழு அபிலாசைகளையும் திருப்தி செய்யாவிட்டாலும் ஓரளவு அன்றைய சூழ்நிலையில் ஓர் இடைக்கால ஒழுங்காக அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் அதை எதிர்த்து உங்களுடைய பாத யாத்திரை மாத்திரம் இடம்பெறவில்லை. புத்தரகித்ததேரோ தலைமையில் றொஸ் மீட் பிளேசில் அன்றைய பிரதமர் வீட்டிற்கு முன்னால் சத்தியாக்கிரகம் செய்தார்கள் அவருடைய கட்சியினர். இது நடைபெற்றது 1958ஆம் ஆண்டு ஏப்றில் மாதம் 8ஆம் தேதி. எனக்கு இந்தத் தேதிகள் எல்லாம் நல்ல ஞாபகத்திலிருக்கின்றன. அன்று நான் இச்சபையிலே இருந்தேன். அங்கே சத்தியாக்கிரகம் முடிந்து சத்தியாக்கிரகிகளுக்குத் தோடம்பழச்சாறு

> வெறுமனே சட்டங்களை ஆக்குவதனால் மாத்திரம் மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்த முடியாது. சட்டங்கள் சரியான முறையில் அமுல் நடத்தப்படவேண்டும். நான் ஒன்றை இச்சந்தர்ப்பத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தமிழ்மொழி உபயோகம் பற்றிய அரசியல் அமைப்பு விதிகள் அமுல் நடத்தப்படுவதற்கு ஏற்ற துணைவிதிகள் எதுவும் இந்த அரசியல் அமைப்பில் இல்லை.

கொடுத்து அவர்களை உண்ண வைத்து அன்றைய பிரதமர் திரு பண்டாரநாயக்க இங்கு வந்து சொன்னார், "அந்த பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்" என்று. இனி மேல் அதைத் தாம் செயற்படுத்த முடியாதென்றும் அவர் அறிவித்தார்.

## மீண்டும் சட்டமறுப்பு

நாம் மீண்டும் போராட்டத்தில் இறங்க வேண்டிய கட்டம் வந்தது. மீண்டும் நாம் சட்ட மறுப்பில் இறங்கினோம். அந்தச் சட்ட மறுப்பின் பயனாக நாம் சிறைக்கு அனுப்பப்பட்டோம். 1958ஆம் ஆண்டில் இந்த நாட்டில் வகுப்புக் கலவரம் தலைவிரித்தாடியது. இந்த நாட்டில் இன்னொரு 1958ஆம் ஆண்டு இனி மேல் வராது என்று தமிழ் மக்கள் நினைக்கக் கூடிய அளவுக்கு தமிழ் மக்கள் தாக்கப்பட்டார்கள். அது ஒரு புதிய



கதை அல்ல. இன்றைக்குத் தமிழ் இளைஞர்களிற் சிலர் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்கு அன்றைய அந்தப் பின்னணியே காரணமாகும்.

1958ஆம் ஆண்டு வகுப்புக் கலவரத்தில் தாக்கப்பட்டவர்கள் எமது மக்கள். ஆனால், அன்றைய பிரதமர் திரு பண்டாரநாயக்க என்ன செய்தார்? எங்களைப் பிடித்துச் சிறையில் அடைத்தார்.

## விதிகளை ஏட்டிலே போட்டால் மட்டும் போதாது

**- அமிர்தலிங்கம்**

1958ஆம் ஆண்டு ஆனி மாதம் 5ஆம் தேதி இந்தச் சபையிலே பிரதமர் பேசுவதற்கு முன் எனக்கும் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது. கடைசியாகப் பிரதமர் பேசினார் ஒன்பது மணிக்கு மேல். பேசி விட்டு வெளியே சென்ற எங்களில் சிலரைக் கைது செய்து கொண்டு போய் கோல் பேஸ் ஹோட்டலில் தனி அறையில் வைத்தார்கள். வேறு சிலரை அவரவர் வீட்டில் சிறை வைத்தார்கள். 10 நாட்கள் வைத்திருந்துவிட்டு ஸ்ரன்மோ-கிறசன்றிலேயுள்ள ஒரு வீட்டிலே என்னையும் ஏழு பாராளுமன்ற அங்கத்தவர்களையும் அடைத்து வைத்தார்கள். அப்படி அடைத்து வைத்து விட்டுத்தான் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்க தமிழ் மொழி உபயோகச் சட்டத்தை இங்கு நிறைவேற்றினார். அப்பொழுது அவர் எங்களுக்கு "நீங்கள் காவலில் இருந்து கொண்டே விவாதத்தில் கலந்து கொள்வதாக இருந்தால் கலந்து கொள்ளலாம்" என்று சொல்லி அனுப்பினார். "சுதந்திர மனிதர்களாக வருவதாக இருந்தால் வருவோமே தவிர பொலிஸ் காவலிலே வந்து அங்கே பேசிவிட்டு மறுபடியும் பொலிஸ் காவலிலே காவல் கைதிகளாகச் செல்வதாக இருந்தால் அதற்கு ஆயத்தமில்லை" என்று நாங்கள் பதில் கொடுத்தோம்.

## ஹம்லற் நாடகம்

நாங்களில்லாமல் அந்த சட்டம் நிறைவேற்றப்பட்டது. அப்பொழுது இருந்த எதிர்க் கட்சிகள்- ஐக்கிய தேசியக் கட்சி உட்பட, இது டென்மார்க் இளவரசன் இல்லாமல் ஹம்லற் நாடகம் நடக்கிறது- Hamlet without the prince of Denmark என்று கூறி தமிழ்ப் பிரதிநிதிகள் இல்லாத இச்சபையிலே இதை நிறைவேற்றுவது பொருத்தமற்றது என்று கூறி வெளி நடப்புச் செய்தன. ஆளும் கட்சி மாத்திரம் அதை நிறைவேறியது.

பின்னர் வந்த அரசாங்கங்கள் எல்லாம் காலஞ் சென்ற பிரதமர் பண்டாரநாயக்க நிறைவேற்றிய இந்த இரண்டு சட்டங்களிலும் யாரும் தொடக் கூடாது; பரிசுத்தமானவை என்று கூறி அவற்றைத் தொட மறுத்தன. அதற்கு உட்பட்டுதான் எதையும் செய்ய வேண்டும் எனக் கூறின. நாங்கள் இயன்ற அளவு, கிளர்ச்சி செய்தோம். 1961ஆம் ஆண்டு ஒரு பெரிய சத்தியாக்கிரக இயக்கத்தை நடாத்தினோம். என்னளவும் பலாத்காரம் தலைதூக்காத வகையிலே ஒரு மக்கள் இயக்கத்தை நடத்தினோம். இந்த நாட்டின் வடக்கு,கிழக்கு மாகாணங்களிலேயுள்ள ஐந்து கச்சேரிகளுக்கும் முன்னால் நாங்கள் மறியல் செய்தோம். அந்த மறியலிலே இன்று பிரதிக் காணி அமைச்சராக இருக்கின்ற சம்மாந்துறை பிரதிநிதி (ஜனாப் எம்.ஏ. மஜீது) கூடக் கலந்து கொண்டார். இரண்டு மாத காலமாக அந்த ஐந்து கச்சேரிகளின் முன்னால் நாங்கள் வேறு எதுவும் செய்யவில்லை. சபாநாயகரவர்களே, கச்சேரி வாயிலிலே குறுக்கே இருந்தோம். பொலிசார் அடித்தாலென்ன, இராணுவம் வந்து மிரட்டினாலென்ன நாம் அசையா

> ஒரு தமிழ்மகன் அனுராதபுரத்திலோ தென்னிலங்கையிலோ உள்ள ஒரு கச்சேரியில், "எனக்குத் தமிழில் கருமமாற்ற உரிமையுண்டு; எனக்குத் தமிழ்ப் படிவம் தா; தமிழில் நிரப்பித் தரப் போகிறேன்" என்று கூறுகிறான் என்று வைத்துக் கொள்வோம். இற்றைக்கு நாடு இருக்கும் சூழ்நிலையில் அத்தகைய ஒருவர் உயிருடன் வீடு போவாரா என்று சொல்ல முடியாது.

மலிருந்தோம். எனக்கு அடித்ததினால் நல்ல காயம் ஏற்பட்டது. நிதிஅமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்க மிகத்திறமையாக அவசர காலச் சட்டத்தைக் கொண்டு வந்தார். 1961ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 17ஆம் தேதி அவசர காலச் சட்டத்தைக் கொண்டு வந்து எங்களில் 74 பேரை பனாகொட இராணுவ முகாமிலே ஆறு மாத காலம் அடைத்து வைத்தார்கள்.

## டட்லி-செல்வா ஒப்பந்தம்

அதன் பின் தொடர்ந்தும் நாம் எம்மை வருத்தி இந்நாட்டில் எங்கள் மொழி உரிமைக்காக வாதாடினோம். 1965ஆம் ஆண்டிலே ஒரு மாற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. தேர்தலில் கௌரவ டட்லி சேனாநாயக்க அவர்களின் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவு செய்யப்பட்டு கட்சிகளில் பெரும் கட்சியாக பாராளுமன்றத்துக்கு வந்தது. ஆனால், அந்தக் கட்சி தன் சொந்த பலத்தைக் கொண்டு அரசாங்கத்தை அமைக்க முடியாத நிலையில் இருந்தது. அந்த நேரத்திலே எமது கட்சித் தலைவர்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களாகிய டட்லி சேனாநாயக்க அவர்களுக்கும் இன்றைய மாண்புமிகு சனாதிபதியான ஜே.ஆர்.ஜயவர்த்தன அவர்களுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அதன் பலனாக 1965ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24ஆம் தேதி இரண்டு கட்சித் தலைவர்களுக்குமிடையிலே ஓர் ஒப்பந்தம் கையெழுத்தானது. அதாவது 1965ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24ஆம் தேதி கௌரவ டட்லி சேனாநாயக்க அவர்களுக்கும் எங்கள் தலைவர் திருவாளர் செல்வ

(15ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழோசை

லண்டன் அக்டோபர் 09, 1992

# வேந்தர்க்கு வேண்டும் பொழுது

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகள் அமைப்பின் *(South Asian Association for Regional Co-operation- SAARC)* தலைவராக அந்த அமைப்பின் நாடுகளுக்கு விஜயம்செய்த இலங்கை ஜனாதிபதி திரு ஆர்.பிரேமதாச இம்மாதம் முதலாந்தேதி இந்தியாவுக்கும் விஜயம் செய்திருந்தார்.

சம்பிரதாய பூர்வமான இராஜாங்க வரவேற்புகள் அவருக்கு அங்கு அளிக்கப்பட்டன. இந்திய ஜனாதிபதி திரு சங்கர் தயாள் சர்மாவுக்கு இலங்கை வரும்படி சம்பிரதாய பூர்வ அழைப்பொன்றையும் திரு பிரேமதாச விடுத்தார். புதுடில்லியில் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசுகையில், இலங்கை- இந்திய உறவுகள் சுமுகமாகவே இருப்பதாக கூறிய அவர், விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு எந்த விதமான பேச்சுவார்த்தையையும் நடத்தவில்லை என்றும் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழியில் அவர்கள் வராதவரைக்கும் - ஏனைய கட்சிகளையும் அவர்கள் அங்கீகரிக்காத வரைக்கும் அவர்களுடன் பேச்சு நடத்த முடியாது என்றும் கூறினார்.

ஆனால் அதேவேளை கொழும்பில் பத்திரிகையாளர்கள் 'புலிகளுடன் அரசு இரண்டாம் கட்ட பேச்சு நடத்துகிறதா?' என்று கேட்டகேள்விகளுக்கு அமைச்சரவைப் பேச்சாளர் பதில் எதுவும் அளிக்கவில்லை.

இலங்கையில் அரசுக்கும்- புலிகளுக்குமிடையே பேச்சு நடக்கிறதோ நடக்கவில்லையோ ஜனாதிபதி ராஜதந்திரமாகப் பதிலளித்திருக்கிறார். அத்துடன் முன்னாள் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி கொலையில் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வே.பிரபாகரன் தொடர்புபடுத்தப்படுவதும் புலிகளுடனான பேச்சுவார்த்தையும் வெவ்வேறு விடயங்கள் என்றும், உரிய நடைமுறைகள் பின்பற்றப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சில சமயங்களில் இலங்கை- இந்திய உறவில் விரிசல்கள் இருந்தே வந்திருக்கின்றன. அதிலும் திரு.பிரேமதாச இதில் குறிப்பாக பேசப்படுபவர். 1987இல் அவர் பிரதமராக இருந்த வேளை இனப்பிரச்னை தொடர்பாக ஏற்பட்ட இலங்கை- இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானபோது அந்த வைபவத்தை பகிஷ்கரித்தவர்.

ஜனாதிபதியாக வந்ததும் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கைக்குச் சென்ற இந்திய அமைதி காக்கும்படை நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென காலக்கெடு விதித்தவர்.

இதேவேளை, திரு பிரேமதாச இப்போது தலைமை வகிக்கும் 'சார்க்' மாநாடு கொழும்பில் முதலில் திட்டமிட்டபடி நடைபெறாதபடி இந்தியாவும் செய்தது.

ஆக, இப்படிச் சில நிலைமைகள் இருந்தாலும் இலங்கையில் பண்டாரநாயக்க குடும்பத்துக்கும் இந்தியாவில் நேரு குடும்பத்துக்கும் ஒரு தனிப்பட்ட நெருக்கம் இருப்பதாகவும் கருதப்படுவதுண்டு. ஆனால், அரசியல் ரீதியில் இது வினாவுக்குரியதே.


பாகிஸ்தான்- பங்களாதேஷ் யுத்தத்தின்போது பாகிஸ்தான் போர் விமானங்கள் இலங்கையில் தரையிறங்க அனுமதித்தவர் அப்போது பிரதமராகவிருந்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க. அத்துடன் வெளிநாட்டு கொள்கையிலும் சீனாவுடன் நெருக்கமான நட்புறவு கொண்டிருந்தவர் அவர்.

அது எப்படியிருந்தாலும் பேசப்பட்ட இந்த 'நெருக்கத்தால்' நேரு குடும்பத்தவரல்லாதோர் புதுடில்லியில் பதவிக்கு வந்த வேளைகளில் இலங்கையில் ஐக்கிய தேசியக்கட்சி அவர்களுடன் கூடுதல் நெருக்கத்தைக் கொண்டிருந்தது. பிரதமராகவிருந்த திரு மொரார்ஜி தேசாய் கொழும்புக்கு வந்திருந்தபோது பாராளுமன்றத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் திருமதி இந்திரா காந்தியை பகிரங்கமாகவே தாக்கிப் பேசியவர் திரு பிரேமதாச.

ஆக, இவையெல்லாம் போய், இந்தியாவில் இப்போது ஏற்பட்டிருக்கின்ற அரசியல் தலைமை- அது காங்கிரஸ் தலைமை என்றாலும்- வித்தியாசமானது. பிரதமர் திரு நரசிம்மராவ் தென்னாட்டுக்காரர் என்பதிருக்க, தேர்ந்த அரசியல்வாதி. அதிலும் இலங்கையில் இனப்பிரச்னைபற்றி நன்றாக அறிந்தவர். திருமதி இந்திரா காந்தி அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராக இருந்த அவரே 1983இல் கொழும்பில் இனக்கலவரம் வெடித்துப்பரவியபோது திருமதி காந்தியினால் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்.

இந்த மனிதர் பிரதமராக இருக்கின்ற வேளையில் இலங்கை அரசும் இலங்கைத் தமிழர்களும் சர்வதேச நிலைமைகளையும் நாட்டு நிலைமைகளையும் கருத்தில் கொண்டு, இதிலும் ராஜதந்திரமாக, நியாயமான தீர்வொன்றுக்கு முழுமனதோடு முயன்றால் இருபகுதி மக்களுக்குமே அமைதிக்கு வழி பிறக்கலாம்.

# பதவி நூலில் பறக்கும் பட்டங்கள்



பட்டங்களை விற்பவர்கள் மூவர்; பல்கலைக்கழகம், அரசாங்கம், காகிதப் பட்டக் கடைகள். காகிதப் பட்டங்கள் என்று கடைப் பட்டங்களைத் தனியே பிரித்துப் பேசுவது தவறு; எல்லாப் பட்டங்களுமே காகிதப் பட்டங்கள் தானே! அது போலவே, கடைகளையும் இனம் பிரித்துப் பேசுவது தவறு. ஏனென்றால் பல்கலைக்கழகங்களே கடைகள் ஆகிவிட்டன; அவற்றைப் பராமரிக்கும் அரசாங்கம் ஒரு பெரிய கடை அவ்வளவுதான்; வேறு வித்தியாசங்கள் இல்லை.

மேலும் மூன்று துறைப்பட்டங்களில் இரண்டுக்கு நூல், துணை வேண்டும். அரசாங்கப் பதவியினால் பெறும் பட்டங்களுக்கு நூலின் துணை வேண்டாம்; பல்கலைக் கழகப் பட்டங்களுக்கும் பலர் நூல் களைப் படிப்பதில்லை என்பதனால் அதற்கும் 'நூல்' அரும் பெரும் துணையல்ல. ஆக, காற்றில் பறக் கும் காகிதப் பட்டங்களுக்கு மட்டுமே 'நூல்' அவசியம் தேவை. அந்தக் காரணத்தினாலேயே கடைகளில் விற்கும் பட்டங்கள் உயர்ந்தவை எனலாம்.

மேலே சொல்லப்பட்ட மூவரில்- அதாவது மூன்று கடைக்காரர்களில் அரசாங்கம் மொத்தக் கொள்முதல் காரர்; பல்கலைக்கழகங்கள் நல்ல 'ஷோ' ரூம்கள் வைத்திருக்கின்றன; ஆனாலும் என்ன செய்வது, சில்லறைக் கடைக்காரர்களின் பட்டங்கள் மட்டுமே உயரே பறக்கின்றன. இவற்றில் மொத்தக் கொள்முதல் காரராகிய அரசாங்கத்தில் ஏதாவது பதவிகள் கிடைத்தால், 'தாமரைத் திரு' 'தெருப்புழுதித்திரு' என்ற பட்டங்களை வாங்கிக் கொள்ளலாம்; மந்திரி அல்லது முதல் மந்திரி என்ற பதவி வந்தால் அரசாங்கத்தையே நடத்தும் அதிகாரம் கைவசம் வந்துள்ளபடியால் 'டாக்டர்' பட்டத்தை எளிதாகவே வாங்கிக் கொள்ளலாம்- உங்கள் படிப்பு கான்வென்டாகவோ, நர்சரியாக மட்டுமோ இருந்தாலும் பரவாயில்லை. பதவி கையில் இருக்கும்பொழுது பட்டங்களுக்கு என்ன குறைவு? சோம்பேறி சோணாசலம் மந்திரியாகிவிட்டால் டாக்டர், அறிஞர் மாண்புமிகு சோணாசலனார் ஆகி விடுவார்; பெற்ற தகப்பன் கூட அவரை அப்படித்தான் கூப்பிட வேண்டும். தமிழ் நாகரிகம் வளர்ந்து விட்டது ஐயா, வளர்ந்து விட்டது. அயல்நாடுகளில் இருக்கும் உங்களுக்கெல்லாம் இது பற்றி விபரமாகத் தெரிந்திருக்க நியாயமில்லை.

பதவி வந்தால் பட்டம், பணம்- எல்லாம் சரி; ஆனால் சிறந்த நூலாசிரியன் ஆக வேண்டாமா? அது ஒன்றும் கஷ்டமில்லை. எழுதத் தெரிந்தவர்கள் தெரிந்ததை, தெரியாததை, புரியும்படி, புரியாதபடியெல்லாம் எழுதலாம். அச்சடித்துப் பதிப்பித்துத் தர ஆட்கள் இருக்கிறார்கள். அந்தப் புத்தகத்திற்கும் தனியே மாட்டுக்குட்டி, ஆட்டுக் குஞ்சு பலகலைக் கழகங்களிடமிருந்து டாக்டர் பட்டம் பெறலாம். கவலையே வேண்டாம்.

புத்தகம், பதிப்பிப்பது மட்டுமா, ரேடியோவில் அந்த நூல் 'மதிப்புரை' வழங்கப்பெறும். எழுதியவருக்கு வேண்டியவர்களே கதவு இடுக்கில் அகப்பட்டுக் கொண்ட சுண்டெலியின் குரலில் பேசினாலும் அல்லது கர்த்தபத்தைத் தோற்கடிக்கும் முறையில் அலறினாலும் வரி பிசகாமல் எல்லா சங்கதியும் ஒலிபரப்பாகும். ரேடியோ என்ன பெரிய ரேடியோ, தொலைக்காட்சி- அது தான் தூர்தர்ஷன்- மன்னிக்கவும்-தூர்தர்ஷனில் ஒளிபரப்பாகும். அதற்காகத்தானே ஸ்டார் டிவி, ஸோனி டிவி, லூனார் டிவி என்று எது வந்தாலும் அரசாங்கம் ஆகாச ஒளி/ ஒளிபரப்பை இன்னமும் தன் வசத்திலேயே வைத்திருக்கிறது. அதுதான் பதவியின் வசதி; சலுகை, உரிமை, எல்லா மண்ணாங்கட்டியும்! பின்னே என்ன, வானளாவிய அதிகாரம் என்றால் இது கூட இல்லாவிட்டால் எப்படி?

அதிலும் அரசியல்வாதிகளுக்கு, அசலாகவே அதிகம் அலட்டிக் கொள்ளாத அரசியல்வாதிகளுக்கு பல சங்கதிகளில் ஆசை இல்லாவிட்டாலும் அதிகாரிகள் 'ஆட்சியாளர்' என்பதன் பயன்களை அனுபவிக்க நன்றாகவே நேரடியாகவும் மறைமுகமாகவும் சொல்லிக் கொடுக்கிறார்கள். ஓஹோ- ஹோ என்று காக்காய் பிடித்து உயரத்திற்கு- அதி உயரத்திற்குத் தூக்கி விடுகிறார்கள்- மனிதன் கீழே விழும் பொழுது காக்காய்கள் எல்லாம் காணாமல் போயிருக்கும்.

இப்பொழுது சில தூர்தர்ஷன் காக்கைகள் பிரதமர் நரசிம்மராவைக் காக்காய் பிடிப்பதற்காக

## அகராதி

உயரத்திற்கு, வெகு உயரத்திற்குத் தூக்கிச் செல்ல முயற்சிக்கிறார்கள். முன்பு இதே இனக் காக்கைகள் சென்னை தயாரிப்பாளர் ஒருவருக்கு அப்போதைய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் சிபார்சு செய்தார் என்ற விஷயம் நீதிமன்றம் வரை செல்லும் அளவுக்கு நடந்து கொண்டனர். நரசிம்மராவ் சம்மந்தப்பட்ட விஷயம் நீதிமன்றம் செல்லாது எனலாம்; ஆனால் மக்கள் மன்றத்திற்கு வந்து விட்டது.

டெல்லியிலிருந்து வெளியாகும் 'பயனீயர்' என்ற ஆங்கில நாளோடு செப்டெம்பர் 30ஆம் தேதியிட்ட இதழின் முதல் பக்கத்தில் பிரதமர் நரசிம்மராவைத் திருப்திப்படுத்த டெல்லி தூர்தர்ஷன் மேற்கொண்டுள்ள நடவடிக்கை பற்றி விரிவாக எழுதியிருக்கிறது.

அதாவது பிரதமர் நரசிம்மராவ் முன்பு தெலுங்கிலிருந்து இந்திக்கு மொழிபெயர்த்திருந்த ஒரு நாவலை தொலைக்காட்சி ஒளிபரப்புக்காக தூர்தர்ஷன் தேர்ந்திருக்கிறது. இதிலென்ன தவறு என்று கேட்கலாம். கேள்வி நியாயமே.

அதாவது பிரதமர் என்ற காரணத்தினால் நரசிம்மராவ் அறிஞர், எழுத்தாளர், மொழி பெயர்ப்பாளர், தெலுங்கின் தித்திப்பு, இந்தியின் இனிப்பு என்ற பட்டங்களைப் பெறவில்லை. உண்மையிலேயே அறிஞர்; அந்தக் காரணத்தினால் பாவம் அரசியலில் மிகவும் தாமதமாகப் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்- மிகவும் தாமதமாகவே சங்கர் தயாள் சர்மா ஜனாதிபதியானது போல! ஏதோ அதிகம் படித்தவர்களை அரசியலிலிருந்து அடித்துத் துரத்தாமல் இருக்கிறார்களே, அந்த மட்டும் சந்தோஷம்.

ஆனால் இவ்வளவு நாட்கள் நரசிம்மராவின் மொழிபெயர்ப்புத் திறனும் இலக்கிய அறிவும் ஏன் தூர்தர்ஷன் காரர்களுக்குத் தெரியவில்லை? பார்க்கப்போனால் அரசியலில் முழுமூச்சுடன் ஈடுபடுவதற்கு முன்பு அவர் இன்னமும் கூடுதலான இலக்கிய தாகத்துடன் இருந்தாரே அப்பொழுது ஏன் கண்டு கொள்ளவில்லை?


ஒருவேளை அவரது நாவல் அப்பொழுது தூசுபடிந்தபடி இருந்ததா? இல்லையென்று சொல்ல முடியாது. ஏனென்றால் முன்பு இரண்டுமுறை இதே நாவல் பரிசீலனையின்போது ஒதுக்கப்பட்டது; மூன்றாம் தடவையாக இப்பொழுது தேர்வு? நாவல் அதே நாவல், மூல நூலாசிரியரோ, மொழி பெயர்பாளரோ அதை மாற்றி எழுதித் தந்துவிடவில்லை. ஆக, இப்பொழுது என்ன புதுத் தகுதி வந்துவிட்டது?

வராமலா? முன்பு நரசிம்மராவ் பிரதமராக இல்லை; இப்பொழுது பிரதமர்; தூர்தர்ஷன் அதைத்தான் தகுதி என்று நினைப்பது போலத் தெரிகிறது. இன்னொரு காரணம். முன்பு தேர்வுக் குழுவில் அதிகாரிகள் அல்லாதவர்கள் இருந்தார்கள்; இப்பொழுது அதிகாரிகள் இருக்கிறார்கள்; அதிகாரிகளின் மகத்துவமே இப்பொழுது புரிகிறதா?

தூர்தர்ஷனில் இரண்டு வித நிகழ்ச்சிகள் உண்டு; ஒன்று சொந்தத் தயாரிப்பு; மற்றது பிறர் வழங்குவது. முதல் தடவை முதல் பிரிவுக்காக- தூர்தர்ஷன் தயாரிப்புக்காக இந்த மொழி பெயர்ப்பு நாவல் அனுப்பப்பட்டது. அப்பொழுது அது கிடப்பில் போடப்பட்டது. மறுபடியும் 1990-ல் "ஸ்பான்சார்டு" என்று பிறர் வழங்கும் இனத்திற்கான ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது; ராஜீவ் காந்தி, நரசிம்மராவ் எல்லோரும் "வேலையில்லாதவர்கள்" பட்டியலில் இருந்தார்கள். வி.பி.சிங் ஆட்சியில் இருந்தார். சக்கரம் சுழன்றதால் நரசிம்மராவின் மொழி பெயர்ப்பு நாவல் 'ஆமாம் சாமி' அதிகார வர்க்கத்தின் காலடியில் நசுங்கிப்போனது.

இப்பொழுது 'ஸஹஸ்ரஃபன்' (ஆற்றல் ஆயிரத்தெட்டு) என்ற அந்த நாவல் ஒளிபரப்புக்காக ஏற்கப்பட்டிருக்கிறது. இதை விதி என்று சொல்வதா அல்லது விதி விலக்கு என்று சொல்வதா?

முன்பு ஏற்கப்படாதது விதி என்



றால் இப்பொழுது ஏற்கப்பட்டிருப்பது விதிவிலக்கு. எல்லாத் தொலைக்காட்சி நாடகங்களுக்கும் 13 பகுதிகள் என்றால், ஸஹஸ்ரஃபன் நாடகத்திற்கு 18 பகுதிகள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிக்கு சன்மானம் மற்றவைகளுக்கு என்றால் 1.5 லட்சம். இதற்கு மட்டும் 2.75 லட்சம். ஒன்றே கால் லட்ச ரூபாய் கூடுதல். அதுமட்டுமல்ல மொத்தத் தயாரிப்புச் செலவுக்கு ஐம்பது லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

பங்குச் சந்தை ஊழலை விசாரித்துவரும் அதே சிபிஐ இதற்கு முன்பு தூர்தர்ஷன் ஒப்புதல் தந்துள்ள நிகழ்ச்சிகளில் சந்தேகத்திற்கு இடமானவற்றை விசாரித்து வருகிறது. ஆட்சி மாறினால் நாளை இந்த நிகழ்ச்சிக்கான ஒப்புதலும் விசாரணைக்கு வராது என்பது என்ன நிச்சயம்?

எத்தனையோ சிக்கல்களில் மிகவும் நிதானமாக, சாதுர்யமாக, புத்திசாலித்தனமாகச் செயல்பட்டுவரும் நரசிம்மராவ் தூர்தர்ஷன் காக்காய்களின் பிடியிலிருந்து விடுபட்டாக வேண்டும். அவரத நாவல், மொழி பெயர்ப்பு நாவல்

(19ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


# ஸத்யஜித் ரே எனும் கலைஞன்

யமுனா ராஜேந்திரன்

ஸத்யஜித் ரே எனும் கலைஞன் பௌதீகரீதியில் இறந்து விட்டான். கலைஞனாக மனிதநாகரீகம் வாழுந்தோறும் நின்று நிலைப்பான் அம்மாமனிதன்.

தாயின் தாலாட்டுப் பாடலைக் கேட்டுக் கொண்டு கந்தலில் படுத்துத்தூங்கும் குழந்தை 'சாக்கடையில் நிலாக்கண்டு சிரிக்கும்' அழகைச் சொன்ன கலைஞன் அவன்.

உலக மனிதனின் சந்தோஷத்தை, துக்கத்தை, ஆண் பெண்ணுக்கிடையிலான சிக்கல்களை, மனித ஆன்மா



வின் அடியாழத்தில் வாழும் அற்புதங்களை இந்திய சினிமா மொழியில் அவனது தாய்பாஷை வங்காள மொழியில் இந்தியனுக்கும் உலகுக்கும் சொன்ன சர்வதேசீயக் கலைஞன் அவன்.

ஸத்யஜித் ரே இறப்பதற்கு சில நாட்களுக்கு முன்பு அவரது வாழ்நாள் முழுவதின் சினிமா சாதனைகளுக்காக ஆஸ்கார் விருதுக் கமிட்டி ஆஸ்கார் பரிசை அவருக்கு அளித்து தன்னைக் கௌரவித்துக் கொண்டது.

சார்லி சாப்ளின் மாதிரியான திரைப்பட மேதைகளின் வரிசையில் ஸத்யஜித் ரேயை இனங்கண்டது மேற்கத்திய அறிவாளிகள் உலகம். ஜப்பானிய திரைப்பட மேதையின், அகிரா குரசோவாவின் வார்த்தைகளில் 'ஸத்யஜித்ரே இருபதாம் நூற்றாண்டின் சினிமாவின் மாமனிதன்'.

## திரைப்பட ஆசான்

அவர் வாழ்ந்த நாட்டில் அவரது சமகாலத்தின் மிகச் சிறந்த திரைப்படக் கலைஞர்களால் ஆசானாகக் கருதப்பட்டவர். அவர்மீது கடுமையான விமர்சனங்களைக் கொண்டிருந்தவர்கள் கூட ஒரு முழுமையான கலைஞனாக- மனிதாபிமானம் பேணிய கலைஞனாக அவரை மதித்தார்கள்.

உலகின் அனைத்து அற்புதங்களையும் உன்னதங்களையும் ஒதுக்கி வைக்கும் வெகுஜன தமிழ்க் கலாச்சாரம் ரே மாதிரி கலைஞனை ஒரு பிரச்னையாகவே கருதவில்லை. ரேயின் படங்களைப் பற்றி ரேயின் மேதைமை பற்றி அக்கறையுடன் பேசிய தமிழ்ப்பட இயக்குநர்கள் யாரேனும் இருப்பார்கள் என்பது சந்தேகமே.

இந்தியாவின் வறுமையை சர்வதேசீயச் சந்தையில் விற்பவர் என்ற விமர்சனம் ஒருமுறை ஆனந்த விகடன், இதயம் பேசுகிறது மணியனால் முன் வைக்கப்பட்டது. முற்றிலும் அறிவீனமான விமர்சனம் இது.

இந்தியாவின் வறுமை பற்றி, இந்திய வாழ்க்கை முறைபற்றி குறிப்பாக கல்கத்தா நகரத்தின் நெருக்கடியான சேரிகள் பற்றி மேற்கத்தியப் படத்தயாரிப்பாளர்கள் வெளிக்கொணர்ந்த அத்தனை படங்களையும் பற்றி கடுமையான விமர்சனம் கொண்டிருந்தார் ரே.

இந்திய வாழ்க்கை முறையின் ஆன்மாவை, இந்திய மனிதனின் ஆன்மாவை ஒருநாளும் மேற்கத்தியர்கள் புரிந்து கொள்ள முடியாது. புரிந்து கொள்ள முடியாமல் எடுக்கப்பட்ட படங்களே அவை என்பதுவே ரேயின் கருத்து.

இறப்பதற்கு முன்பு கொடுக்கப்பட்ட சில பேட்டிகளில் ஒன்றான



பதர்பாஞ்சாலி

லண்டன் இன்டிபெண்டன்ட் பத்திரிகைப் பேட்டியில் கூட இது பற்றிப் பேசுகிறார் ரே.

வறுமை என்பதும் பட்டினி என்பதும் வறட்சி என்பதும் அதைத் தொடர்ந்து வரும் மனித சோகமும் மூன்றாம் உலக நாடுகளின் பிரச்னை. இந்த மனித சோகங்களுக்கும் துயரங்களுக்கும் இடையில் மானுட அன்பு எவ்வாறு ஜீவனுடன் வாழ்கிறது என்பது தான் கலைஞனின் அக்கறை.

பதேர் பாஞ்சாலியில் வரும் அந்த முதாட்டியைப் பார்த்து எந்த மூன்றாம் உலக மனிதனும் அந்தப் பாட்டியின் முகத்தில் தனது பாட்டியின் அன்பையும் பிடிவாதத்தையும் பெருமிதத்தையும் சோகத்தையுமே காண்பான். இதை இலத்தீன் அமெரிக்க ஆப்ரிக்க மனிதன், மனிதவிடுதலைச் சிந்தாந்தத்தில் நம்பிக்கை கொண்ட ஐரோப்பிய மனிதன் புரிந்து கொள்வான்.

மணியன் மாதிரி ஐரோப்பிய முளையும் இந்திய வைதீக பூஞ்சை ஆன்மாவும் பீடித்த ஆட்களால் இந்த உன்னதங்களை ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது.

ஸத்யஜித் ரேயின் படங்களை சில மாதங்களுக்கு முன்பு ஏறக்குறைய இருபது படங்களை சனல் நான்கு தொலைக்காட்சியிலும் பிபிசி தொலைக்காட்சியிலும் லண்டனில் பார்க்க முடிந்தது. அவரது மிகச் சிறந்த படங்கள் யாவும் இச்சந்தர்ப்பத்தில் திரையிடப்பட்டது. அவரது அபுஸன்சார் (அப்புவின் உலகம்) உலகின் திரைப்பட அற்புதங்கள் எனும் வரிசையில் திரையிடப்பட்டு அதைப்பற்றி விமர்சகர்களின் கலந்துரையாடலும் நிகழ்ந்தது.

பதேர் பாஞ்சாலி, அபராஜிதா, அபு ஸன்சார், தீன் கன்யா, கன்ஜன்ஜங்கா, சாருலதா, ஆரண்யார்தின் ராத்ரி, கரே பய்ரே, ஜனஸத்ரு, சத்ரஞ்சே கிலாரி, கம்பெனி லிமிடேட், ஆஸானி ஸங்கட் போன்ற இத்தனை படங்களையும் ஒரு சேரப் பார்க்க முடிந்தது.

ஸத்யஜித் ரே எனும் மனிதனின் முழு ஆளுமையையும் வெளிக்கொணர்ந்த ஸியாம் பெனிகலின் 'ஸத்யஜித்ரே' எனும் 2 மணிநேர கலந்துரையாடல் டாகுமெண்டரியையும் காணமுடிந்தது.

இந்தப் படங்களைப் பார்த்த சந்தோஷத்தில் மீதியிருக்கும் ரேயின் படங்களையும் பார்த்து விடலாம் என்று சில இந்திய வீடியோ விநியோகக் கடைகளுக்குச் சென்று விசாரித்தேன். இந்தக் கடைகள் தலைமுறை தலைமுறையாக இந்தியப்படங்களை பிரிட்டனில் விநியோகிக்கும் கடைகள் என்று சொன்னார்கள். நான் விசாரித்த இடங்களிலெல்லாம் எனக்குக் கிடைத்த ஒரே பதில் 'யாரிந்த ஸத்யஜித் ரே? என்பது தான்.

இவ்வாறுதான் வாழ்கிறான் லண்டன் இந்தியன். இவ்வாறே வாழ்கிறான் லண்டன் தமிழனும். ஏழாவது மனிதன் எனும் சர்வதேசீய விருது பெற்ற தமிழ்படம் ஒன்று வந்தது கூட இங்கிருக்கும் தமிழனுக்குத் தெரியவில்லை.

## நுட்பமான கருத்துக்கள்

ஸத்யஜித் ரே பற்றி இந்தியாவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் நூற்றுக்கணக்கில் புத்தகங்கள் வந்து விட்டன. அவரைப் பற்றிப் பேசவும் எழுதவும் இன்னும் நூறுநூறு விசயங்கள்.

திரைப்பட ஊடகத்தில் மொழி பற்றி சமகால அரசியல் பற்றி கடவுள் சிந்தனை பற்றி சமகாலக் கலைஞர்கள் பற்றி மிகநுட்பமான கருத்துக்களைக் கொண்டிருந்தவர் ரே.

தனது திரைப்படங்களை வங்காளி மொழியில் தவிர பிற மொழிகளில் தயாரிக்க விரும்பாதவர். மனிதநாகரீகத்தின் ஜீவனுக்கும் கலாச்சாரத்துக்கும் மொழிக்கும் உள்ள உறவைப்பற்றி கறாரான முடிவுகளைக் கொண்டிருந்தார். மனித உணர்வுகளை மிகநுட்பமாக வெளிக் கொணரக்கூடியது தாய் மொழிதான் என்று அவர் கருதினார். ஒரு சின்ன மனித சைகைகூட

## சாக்கடை நிலவின் அழகைச் சொன்னவன்

மொழியின் அர்த்தத்தின் பாற்பட்டது என்று அவர் கருதினார்.

தனக்குத் தெரியாத ஒரு மொழியில் மனித ஆளுமையின் நுட்பத்துடன் பிரச்னைகளைத் தன்னால் விவரிக்க இயலாது என்று அவர் நம்பினார்.

அவர் வேற்று மொழியில் எடுத்த



சாருலதா

இரு படங்களில் ஒன்று 'ஸத்ரஞ்ச் கா கிலாரி' (சதுரங்கம்). இந்தி மொழியில் எடுக்கப்பட்ட இந்தப் படம் தனக்கு மனத்திருப்தி தராத ஒருபடம் என்று குறிப்பிடுகிறார் ரே. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் இந்தியாவின் ஆட்சியதிகாரத்தை மெல்ல மெல்லக் கைப்பற்றிய விவரத்தை விமர்சனக் கண்ணோட்டத்தோடு செல்கிறது இப்படம்.

தன் சமகால இயக்குநர்களான மிருணாள்சென், ஸியாம் பெனிகல், கௌதம் கோஷ், கோவிந்த் நிஹ்லானி போன்றவர்கள் மாதிரி நேரடியான அரசியல் பிரச்னைகளை எடுத்துக்கொண்டு கோபாவேசமான விமர்சனத்தோடு அரசியலைக் கையாண்டவர் அல்ல ரே.

## சமூக மாற்றத்தின் பிரச்னைகள்

சமூக மாற்றத்தின் பிரச்னைகளை மனித உறவுகளுக்கிடையிலான பிரச்னைகளினூடே பார்த்தவர் ரே. ஜனஆரண்யா, பிரதித்வந்தி, ஜனஸத்ரு, கன்ஜன்ஜங்கா போன்ற படங்களில் நக்ஸலிஸம் வேலையில்லாத் திண்டாட்டம் முதலாளித்துவ அமைப்பின் குடும்ப உறவுகளின் சிதைவு மதநிறுவனங்கள் போன்ற பிரச்னைகளை அலசுகிறார் ரே.

இந்தத் தனது தன்மை குறித்த பிறர் விமர்சனம் பற்றிப் பேசும் போது ஸியாம் பெனிகலுடனான தனது உரையாடலிலும் பிற்பாடு இண்டிபென்டன்ட் பத்திரிகையாளருடனான தனது பேட்டியிலும் 'தன்னைச் சுற்றிலும் நடக்கும் சமகாலப் பிரச்னைகள் பற்றி நான் அபிப்பிராயம் சொல்ல வேண்டும்' எனும் நிலைப்பாட்டுக்கு வருகிறார்.

ஜனஸத்ரு எனும் படத்தில் இந்த மாதிரியான வெளிப்படையான விமர்சனம் முன் வைக்கப்படுகிறது. கடவுள் நம்பிக்கை நிறுவன மயப்படுகையில் நடக்கும் சமூக விரோதச் செயல்கள் இதில் அலசப்படுகிறது.

அவரது படங்களில் வரும் பெரும்பாலான பெண்கள் கடவுள் நம்பிக்கை கொண்ட மரபுசார்ந்த பெண்கள்.

ஆயினும் 'மனிதன்தான் கடவுளை உருவாக்கினான்' என்று மிகத் தீவிரமான கருத்துக் கொண்டிருந்தவர் ரே. தனது இறுதிக்கிரியைகளை மதச் சம்பிரதாயப்படி செய்யக் கூடாது என்று தனது குடும்பத்தவர்களுக்குச் சொல்லியிருந்தார் அவர்.

அவரது இறுதிக் கிரியைகள் எந்த விதச் சடங்குகளும் இன்றி உடல் எரியூட்டப்பட்டதில்தான் நிறைவடைந்தது.

சமகாலக் கலைஞர்கள் அனைவருடனும் மிகநெருக்கமான உறவுகளைக் கொண்டிருந்தார் ரே. மிருணாள்சென் ஸியாம் பெனிகல், கோவிந்த் நிஹ்லானி போன்றவர்களுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார்.

## எண்ணங்களுக்கு மதிப்பு

அவர்களது படங்களைப் பார்த்து கருத்துச் சொல்வதை ஒரு கடமையாகக் கொண்டிருந்தார். ஸதி எனும் அற்புதமான படத்தை இயக்கியவரும், ரேயின் ஆரண்யர்தின் ராத்ரி நாயகியுமான அகர்ணா சென் மீது மிகுந்த மரியாதையும் அன்பும் கொண்டிருந்தார். இந்தக் கலைஞர்களின் அபிப்பிராயங்களுக்கு மரியாதை கொடுத்தார்.

உலகில் அளவில் ஜீன் லுக் கோடார்ட், பெடரிகோ பெலின்னி அகிரோ குரசோவா போன்ற மாபெரும் கலைஞர்களால் மதிக்கப்பெற்றவராக இருந்தார். இவர்களை நண்பர்களாகவும் கொண்டிருந்தார்.

> இந்தியாவின் வறுமை பற்றி, இந்திய வாழ்க்கை முறைபற்றி குறிப்பாக கல்கத்தா நகரத்தின் நெருக்கடியான சேரிகள் பற்றி மேற்கத்தியப் படத்தயாரிப்பாளர்கள் வெளிக்கொணர்ந்த அத்தனை படங்களையும் பற்றி கடுமையான விமர்சனம் கொண்டிருந்தார் ரே.

ஸியாம் பெனிகல் சொல்கிறபடி கலைஞன் என்பதற்கான முழுமையான அர்த்ததின்படி ஸ்த்யஜித்ரே ஒரு கலைஞன்.

ரே ஒரு மிகச்சிறந்த ஓவியன். குழந்தைகளுக்கான ஓவியப் பத்திரிகையை தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார். இசைமேதை. பாலமுரளி கிருஷ்ணாவிலிருந்து விலயத் கான் முடிய சென்று தனது இசையில் சரண்புகுந்த இசைக் கலைஞன். தனது படங்களுக்கான இசையமைப்பை தானே மேற்கொண்டார். இன்னும் இன்னும் வெளிக்கொணர தனக்குள் இசை உண்டு சொன்னவர். சிறந்த நாட்டியஅமைப்பாளர். இலக்கிய வாதி.

(16ம் பக்கம் பார்க்க)



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சில முன்னுரைகள் —— 1

# பதினொரு ஈழத்து கவிஞர்கள்

பதிப்பாளர்: க்ரியா வெளியீடு
சென்னை.
ஆகஸ்ட் 1984
தொகுப்பாளர்கள்: எம்.ஏ.நுஃமான்
அ.யேசுராசா

நூலுக்கு பதிப்புரை- முன்னுரை எழுதுவது என்பது ஒரு மரபாகும். பதிப்பாளரால் எழுதப்படுவது பதிப்புரை. பதிபிக்கப்படும் நூலின்- நூலாசிரியரின் முக்கியத்துவம், பதிப்பிப்பதில் ஏற்பட்ட சிரமங்கள்- அநுபவங்கள் என்பன பதிப்புரையில் இடம்பெறும். முன்னுரை நூலாசிரியராலோ அல்லது பிறிதொருவராலோ எழுதப்படும். நூலாசிரிரால் எழுதப்படுமிடத்து அந்நூலை எழுதுவதன் நோக்கம், நூலில் கையாண்டுள்ள விஷயம் பற்றிய நோக்கு- கோட்பாடுகள்- பின்னணி போன்றவை இடம்பெறும்.

முன்னுரை (அணிந்துரை, மதிப்புரை என்றும் குறிப்பதுண்டு) நூலாசிரியரல்லாத பிறிதொருவரால் எழுதப்படுமிடத்து, எழுதுபவர் ஓர் அறிஞராகவோ, விமர்சகராகவோ இருப்பதுவே வழக்கம். அவ்வாறாயின், முன்னுரை பெருமளவில் குறித்த துறை சார்ந்த பின்னணி கோட்பாடு பற்றியவும்- நூலின் பொருள் பற்றியவும்- நூலாசிரியரின் ஆளுமை பற்றியவும் திறனாய்வாகவும் அமையக்கூடும்.

ஆக, முன்னுரையானது, ரசனையைத் தூண்டவும் ஏதுவாகின்றது. சில சமயங்களில் நூலைவிடவும் முன்னுரையே சிறப்பாக அமைந்து விடுவதும் உண்டு. சிறந்ததோர் முன்னுரையும் இலக்கியமாகிவிடுகிறது; நினைவில் நின்றுவிடுகிறது. அவ்வாறான முன்னுரைகள் சில வற்றை வாசகர்களுக்கு இடையிடையே அளிக்க விரும்புகிறோம். வாசகர்களும் தாம் ரசித்து அநுபவித்த முன்னுரைகள் அல்லது நூல் மதிப்புரைகளைப்பற்றி அனுப்பி வைக்கலாம்; தரமானவை பிரசுரிக்கப்படும்.

இந்த இதழில் சென்னை க்ரியா நிறுவனத்தினால் 1984இல் வெளியிடப்பட்ட பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்' என்ற நூலுக்கான முன்னுரையைத் தருகிறோம். நூலின் தொகுப்பாளர்களான எம்.ஏ.நுஃமான், அ.யேசுராசா ஆகியோரினால் எழுதப்பட்டது இம் முன்னுரை.

ஈழத்தில் சிறந்த தமிழ்க் கவிஞர்களில் ஒருவரும் சிறந்த விமர்சகருமான நுஃமான், தமிழகத்திலும் சிறந்த விமர்சகராக அறியப்பட்டவர். 'கவிஞர்' என்ற காலாண்டுக் கவிதை இதழை சில காலம் (1969-70) நடாத்தியதோடு, மஹாகவியின் கவிதைத் தொகுதிகள் சிலவற்றை வெளியிட்டு மஹாகவியின் மேன்மையை உணர்த்தியவர். 'தாத்தாமாரும் பேரர்களும்' (கவிதைத் தொகுப்பு), 'இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியம்' (விமர்சனம்- கூட்டாசிரியர்), 'பாலஸ்தீன கவிதைகள்' (மொழி பெயர்ப்பு), 'பாரதியின் மொழிச் சிந்தனை' என்பன ஈழத்தில் வெளியான இவரது நூல்கள். 'அழியா நிழல்கள்' (கவிதை), 'மழை நாட்கள் வரும்' (கவிதை), 'திறனாய்வுக் கட்டுரைகள்' (விமர்சனம்), மார்க்சிய திறனாய்வுக் கட்டுரைகள்' (விமர்சனம்) என்பன தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டவை.

தமிழ் இலக்கிய விமர்சகர்களுள் ஒருவராக தமிழகத்திலும் இவர் கணிக்கப்படுவதை இந்த திறனாய்வு நூல்கள் உணர்த்தும்.

கல்முனையில் 1944இல் பிறந்த நுஃமான் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் மொழியியலில் எம்.ஏ.பட்டமும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கலாநிதி பட்டமும் பெற்றவர். யாழ் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணி புரிந்தவர், இப்போது பேராதனை பல்கலைக்கழகத்தில் பணிபுரிகிறார்.

1960 முதல் கவிதைகளும் சிறுகதைகளும் எழுதிவரும் அ.யேசுராசா, இலக்கியம், நாடகம், திரைப்படம், ஓவியம் பற்றிச் சிறப்பான விமர்சனங்கள் பல எழுதியுள்ளார்.

1975 முதல் '90 வரை வெளிவந்த 'அலை' என்னும் கலை, இலக்கிய காலாண்டு இதழில் இணை ஆசிரியராக இருந்தவர். யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'திசை' என்ற வாரப்பத்திரிகையின் உதவி ஆசிரியராகவுமிருந்தார்.

இவரின் சிறுகதைத் தொகுதி ஒன்றும், கவிதைத் தொகுதி ஒன்றும் வெளிவந்துள்ளன.

ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் சில முக்கியமான போக்குகளைப் பிரதிபலிக்கும் பதினொரு கவிஞர்களின் 55 கவிதைகளைக் கொண்டது இத்தொகுதி. 1960 முதல் இன்று வரையுள்ள சுமார் இருபது ஆண்டு காலத்தில் எழுதப்பட்ட கவிதைகள் இவை. மஹாகவி முதல் சேரன் (கவியரசன்) வரை ஐந்து தலைமுறைக் கவிஞர்களின் படைப்புகள் இத்தொகுதியில் அடங்கியுள்ளன. அவ்வகையில் இருபது ஆண்டுகளையும் ஐந்து தலைமுறைகளையும் இத்தொகுப்பு உள்ளடக்கிறது எனலாம்.

ஈழத்திலே இன்று நூற்றுக்கணக்கானோர் கவிதை எழுதி வருகின்றனர். அவர்கள் எல்லோரையும் பிரதிபலிக்கும் கவிதைத்தொகுதி ஒன்றைத் தருவது சாத்தியமான காரியம் அல்ல. அது எமது நோக்கமும் அல்ல. ஏ.அல்வஹஸ் என்பவர் தொகுத்து பதினாறு பதிப்புகள் கண்ட 'புதிய கவிதை' (The New Poetry) என்னும் ஆங்கிலக் கவிதைத் தொகுதிக்கு அவர் எழுதிய முன்னுரையில் வரும் ஒரு கூற்றை அடியொற்றிச் சொல்வதானால் இது ஒரு தனிப்பட்ட தொகுப்பு (This is a personal anthology) எனலாம். இன்று ஈழத்திலே எழுதும் எல்லாவகையான கவிஞர்களையும்- எழுதப்படும் எல்லாவகையான கவிதைகளையும் இத்தொகுப்பு பிரதிபலிக்கிறது என்று நாம் கூற மாட்டோம். மிகப் பிரபலமான ஈழத்துக் கவிஞர்கள் பலர் இத்தொகுப்பில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. எமது ரசனைக்கேற்ப, இன்றைய ஈழத்துக் கவிதையின் வெவ்வேறு தலைமுறைகளைப் பிரதிபலிக்கும் மிக முக்கியமான கவிஞர்கள் என்று நாம் கருதும் சிலரை, முதன்மையாகப் பிற நாட்டினர்க்கு அறிமுகப்படுத்துவதே இத்தொகுப்பின் நோக்கமாகும். இதன் மூலம் இன்றைய ஈழத்துக் கவிதையின் வளமான சில பண்புகளை கிரகித்துக் கொள்ளக்கூடும் என்பது எமது நம்பிக்கை. இத்தகைய ஒரு தொகுப்பிலே வேறு இன்னார் இன்னாரையும் சேர்த்துக் கொண்டிருக்கலாம் என்று சிலர் ஆலோசனைகள் கூறக்கூடும். அது தவறாகாது. ஆயினும், ஈழத்துக் கவிதையில் பரிச்சயமும், இலக்கியக் கூர்உணர்வும், விமர்சனச் சம நிலையும் உள்ள எவரும் இங்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட கவிஞர்களுள் யாரையேனும் தவிர்த்திருக்கலாம் என்று கூறமாட்டார்கள் என்றே நம்புகின்றோம்.

### நவீன தமிழ்க் கவிதை

ஈழத்திலே நவீன தமிழ்க் கவிதைக்குச் சுமார் நாற்பது ஆண்டு கால வரலாறு உண்டு. 1940களிலிருந்துதான் இங்கு நவீன தமிழ்க் கவிதை- அதன் முழு அர்த்தத்தில்- தோன்றி வளரத்தொடங்கியது. அன்றில் இருந்து இன்று வரையுள்ள இந்த நாற்பது ஆண்டுகளில் ஐந்து தலைமுறைக் கவிஞர்களை நாம் இங்கு இனங்காண்கிறோம். இச்சிறு அறிமுகத்திலே இந்த ஐந்து தலைமுறைக் கவிஞர்களையும் அவர்களது கவிதைப் போக்குகளையும் பற்றி விரிவாக மதிப்பிடுவது சாத்தியமல்ல. ஆயினும் இத்தொகுப்பில் இடம்பெறும் பதினொரு கவிஞர்களும் எவ்வெத் தலைமுறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்பதை அறிந்து கொள்வது பயனுடையதாக அமையும்.

கவிதைத்துறையில் பிரவேசித்த காலத்தைக் கொண்டே கவிஞர்களின் தலைமுறை கணிக்கப்படுகின்றது. ஆயினும், ஒரு தலைமுறையைச் சேர்ந்த கவிஞர் அந்தத் தலைமுறைக்குள்ளேயே முடங்கிவிடுவதாகக் கருதக்கூடாது. பொதுவாக, தான் எழுதத் தொடங்கிய காலப்பகுதியிலன்றி அதை அடுத்துவரும் காலப்பகுதியிலேயே ஒரு படைப்பாளி முதிர்ச்சியடைவதை நாம் அவதானிக்கிறோம். அதேவேளை தான் எழுதத் தொடங்கிய காலகட்டத்தின் முத்திரைகள் அவனுடன் தொடர்ந்து வருவதும் தவிர்க்க முடியாதது.

இவ்வகையிலே, 1940களில் உருவாகிய ஈழத்து நவீன கவிதையின் முதலாவது தலைமுறையைச் சேர்ந்தவர் மஹாகவி. ஆயினும், 1971இல் மரணிக்கும் வரை சுமார் முப்பது ஆண்டுகள் இடையறாது அவர் கவிதைகள் எழுதிவந்தார். 1950களில் முதிர்ச்சியடைந்து 1960களில் தனது உச்ச நிலையை அடைந்தவர் அவர். முருகையனும் நீலாவணனும் 1950களில் உருவாகிய இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்தவர்கள். 1975இல் மரணிக்கும் வரை நீலாவணன் தேக்க மற்றுக் கவிதை எழுதிவந்தார். முருகையன் இன்றுவரை தொடர்ந்து எழுதி வருபவர். 50களிலும் 60களிலும் மஹாகவி, முருகையன், நீலாவணன் ஆகிய மூவருமே ஈழத்தின் பிரதான மூத்த கவிஞர்களாக விளங்கினர். மு.பொன்னம்பலம், எம்.ஏ.நுஃமான், சண்முகம் சிவலிங்கம், தா.இராமலிங்கம் ஆகியோர் 1960களின் ஆரம்பத்தில் கவிதைத்துறையில் பிரவேசித்தவர்கள். இவர்கள் மூன்றாவது தலைமுறையினர். இன்றும் தொடர்ந்து எழுதி வருபவர்கள். சி.சிவசேகரம், அ.யேசுராசா, வ.ஐ.ச.ஜெயபாலன் ஆகியோர் 1970களின் தொடக்கத்தில் அல்லது 1960களின் பிற்பகுதியில் கவிதைத்துறையில் பிரவேசித்தவர்கள். நான்காவது தலைமுறையினர் இவர்கள். 1970களின் பிற்பகுதியிலே ஏராளமான இளைஞர்கள் கவிதை எழுதத் தொடங்கினர். இவர்களுள் பத்துப் பதினைந்து பேராவது குறிப்பிடத் தகுந்த கவிதைகள் எழுதி வருகின்றனர். இவர்களே ஐந்தாவது தலைமுறையினர்.சேரன் இத்தலைமுறையில் முதன்மையான இடம் வகிக்கின்றார்.

### மனப்பாங்கின் வெளிப்பாடு

தலைமுறைப் பகுப்பு வெறும் காலரீதியானது மட்டுமல்ல. இவர்கள் எழுதத் தொடங்கிய காலப் பகுதியில் நிலவிய கவிதை பற்றிய நோக்குகளும், சமூக அரசியல் சக்திகளும் இவர்களது கவிதைப் போக்குகளில் கணிசமான பாதிப்பைச் செலுத்தி இருக்கின்றன என்பதையும் நாம் அவதானிக்கலாம். உருவ அம்சத்தை மட்டும் எடுத்துக் கொண்டு நோக்கினால் முதல் இரு தலைமுறைகளையும் சேர்ந்த மஹாகவி, முருகையன், நீலாவணன் ஆகியோர் செய்யுள் வழிக் கவிஞர்களே. தொடக்ககாலத்தில் யாப்போசைக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதிய இவர்கள் பிற்காலத்தில் பேச்சோசைக்கு முக்கியத்துவம் கொடுத்து தற்காலத் தேவைக்கேற்ப மரபுவழிச் செய்யுளை நவீனப்படுத்தியவர்கள். ஆயினும், செய்யுளுக்குப் புறம்பான ஊடகத்தில் கவிதை இயற்றப்பட முடியும் என்பதில் இவர்களுக்கு நம்பிக்கை இருந்ததில்லை. அதுமட்டுமன்றி இவர்கள் அதற்கு எதிரானவர்களும் கூட. மஹாகவி, நீலாவணன் ஆகியோர் செய்யுளுக்குப் புறம்பான கவிதை முயற்சிகளை எதிர்த்துக் கவிதைகள் எழுதியுள்ளனர். முருகையன் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இது இவர்களது தொடக்க காலத்தில் உருவான மனப்பாங்கின் வெளிப்பாடே எனலாம்.

இந்த உருவ அம்சத்தைப் பொறுத்தவரை மூன்றாவது தலைமுறையினரிடையே அதிக நெகிழ்ச்சி காணப்படுகின்றது. எம்.ஏ.நுஃமான் தனது கவிதைகளுக்குச் செய்யுளையே ஊடகமாகக் கொள்ளும் போதிலும் செய்யுள் மட்டுமே கவிதையின் ஊடகமல்ல என்ற கருத்தை வலியுறுத்தி வருபவர். மு.பொன்னம்பலம், சண்முகம் சிவலிங்கம் ஆகியோர் செய்யுள்களையும் வசனத்தையும் தேவைக்கேற்ப தங்கள் கவிதையின் ஊடகமாகப் பயன்படுத்துபவர்கள். தா.இராமலிங்கம் ஆரம்பதிலிருந்தே மரபுவழிச் செய்யுளை நிராகரித்து வந்துள்ளார். ஆயினும், தன்கவிதைகளில் கூடிய அளவு ஓத்திசைக்கோலங்களை அமைத்துக் கொள்பவர் அவர். பல்வேறு வகையான செய்யுளடிகள் அவரது கவிதையில் கலந்து வருவதும் உண்டு.

நான்காவது, ஐந்தாவது தலைமுறையினரிடம், சிலர் விதிவிலக்காக, செய்யுளை முற்றாகக் கைவிட்ட நிலையினைக் காண்கின்றோம். ஆயினும், அதிக நெகிழ்ச்சியுடைய செய்யுள் வடிவமான 'அகவல்' இவர்களுட் சிலரின் சில கவிதைகளில் முழுமையாகவும் (சிவசேகரம், ஜெயபாலன்), சிலரின் சில கவிதைகளில் இடைப் பிறவரலாகவும் (யேசுராசா, சேரன்) வரக்காணலாம். ஆக, கடந்த நாற்பது ஆண்டுகளில் செய்யுள்பற்றிய மனப்பாங்கு நெகிழ்ச்சியுற்று வந்திருப்பதையே இவர்கள் மூலம் நாம் உணர்கின்றோம்.

கவிதையின் ஊடகத்தில் மட்டுமன்றி அதன் வெளிப்பாட்டு முறையிலும் ஒவ்வொரு தலைமுறையினரிடையும் நுட்பமான வேறுபாடுகள் இருப்பதையும் நாம் அவதானிக்கலாம். உதாரணமாக,ஒரே பொருளைப் (சாதிக் கொடுமை) பற்றிய மஹாகவியின் 'தேரும் திங்களும்' சேரனின் 'மயான காண்டம்' ஆகியவற்றின் வெளிப்பாட்டு முறையை ஒப்புநோக்கலாம். அவ்வக் கவிஞருக்கே உரிய தனித்துவமான வெளிப்பாட்டு முறையை அவை காட்டும் அதேவேளை அவரவர் காலத்துக்கே உரிய சில பொதுப்பண்புகளை அவை கொண்டிருப்பதையும் கூர்ந்து நோக்குவோர் உணரலாம்.

### கவிதைப் பாணிகள்

இலக்கியக் கூர்உணர்வு உடையவர்கள் இத்தொகுதியில் இடம் பெறும் பதினொரு கவிஞர்களிடமும் வெவ்வேறு விதமான கவிதைப் பாணியை இனங்காண முடியுமென்று நம்புகிறோம். இது இக் கவிஞர்களின் தனித்துவமாகும். ஈழத்து நவீன கவிதை இத்தகைய தனித்துவமான ஆளுமைகளாலேயே வளம் பெற்றுள்ளது. மஹாகவி யதார்த்த நெறிநின்று, மனிதனின் தன்னுணர்வுக்கு- அவனது ஆற்றலுக்கு அதிக அழுத்தம் கொடுப்பவர். காட்சிப் படிமங்களினூடு அதைக் கவிதையில் வார்ப்பவர். இதிகாசக் கதையான அகலிகைக்கு அவர் கொடுக்கும் புதிய விளக்கத்தில் கூட நாம் இதைக் காணலாம்.

(14ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அக்டோபர் 11ம் திகதி

# தமிழோசையின்

# மாபெரும் விளையாட்டுப் போட்டி

அக்டோபர் 11ம் திகதி

இடம்:

**வில்ஸ்டன் ஸ்போர்ட்ஸ் சென்ரர்**

WILLESDEN SPORTS CENTRE, DONNINGTON ROAD, WILLESDEN, LONDON NW10

**காலம்: அக்டோபர் 11ம் திகதி காலை 10 மணி முதல் மாலை 6 மணி**

**5 வயது முதல் 80 வயது வரை அனைவரும் பங்கு பற்றலாம்**

* ஓட்டப் போட்டிகள்
  100 M, 200M, 400M, 800M, 1500M
* தடை ஓட்டம்
* அஞ்சல் ஓட்டம்
  4 x 100 M / 4 x 400M
* கயிறடித்தோடல்
* நீளம் பாய்தல்
* பந்தெறிதல்
* கராத்தே



* குண்டெறிதல்
* சங்கீதக் கதிரை
* மூன்று கால் ஓட்டம்
  (தம்பதிகளுக்கு மட்டும்)
* சமநிலை ஓட்டம்
  (பெண்களுக்கு மட்டும்)
* விநோத உடை
* கயிறிழுத்தல் போட்டி
  (11 பேர் கொண்ட குழுகளுக்கு மட்டும்)

* மிதிவண்டி மெதுவாக ஓட்டும் போட்டி *

* தலையணைச்சண்டை *

**மாலை 6 மணி முதல் 8 மணி வரை**

**பரிசளிப்பு விழா நடைபெறும்**

மதிய உணவு, சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், மதுபானம் ஆகியன பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டிருக்கிறது

பார்வையாளர் பிரவேசக் கட்டணம்

**£3**

www.tamilarangam.net

# கேள்வி ஞானம் கலைகளுக்கு அவசியம்

## காரைக்குடி கிருஷ்ணமூர்த்தியுடன் செவ்வி

-மாலி-

## நடனத்துக்கு மிருதங்கம் வாசிப்பதில் ஒரு தனி பாணி

நீங்கள் ஆரம்பத்தில் நினைத்தபடியே, நடனத்துக்கு வாசிப்பதால் இசைக்கச்சேரிகளுக்கு வாசிப்பதில் அது பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறதா?

நடனத்துக்கு வாசிக்கும்போது புதிய ஒரு முறையை நான் கையாண்டேன். அதாவது, இரண்டையும் கலந்து வாசித்தேன். அது, ஒரு தனி வகையாகிவிட்டது. என்னுடைய அந்த முறையை இன்று சிலர் பின்பற்றுகிறார்கள்.

இசையிலும் நடனத்திலும் வெவ்வேறு வித்வான்களுக்கு- கலைஞர் களுக்கு அதாவது, தனித்தனி பாணியையுடையவர்களுக்கு வாசிக்கின்றீர்கள். அந்த அநுபவம் எப்படி?

சாதாரணமாக நாம் கற்கின்றபோது ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று கற்கிறோம். பின்னர் நமக்கு விபரம் தெரிகிறபோது நம்முடைய அறிவிலே ஒன்றும் ஒன்றும் இரண்டு. ஒன்றேமுக்காலும் காலும் இரண்டு. ஒன்றரையும் அரையும் இரண்டு. முக்காலும் ஒன்றேகாலும் இரண்டு. இப்படியெல்லாம் தெரிந்துகொள்கிறோம். அப்படியே, அடிப்படையை நாம் சரியாக கற்றுக்கொண்டபின்னர் ஓரளவுக்கு பழக்கம்- அநுபவம் ஏற்படுகின்றபோது 'இது வந்தால் இதுவரும்; இப்படி வந்தால் இப்படி வரும்' அப்படியென்று எதிர்பார்த்து நாம் வாசிப்போம். நடனத்துக்குத்தான் ஒத்திகை பார்ப்பதுண்டு. பாட்டுக் கச்சேரிகளுக்கு ஒத்திகையே பார்ப்பதில்லை. நடனத்துக்கும் கூட ஒத்திகை பார்த்தாலும் எல்லாக் கலைஞர்களும் அதையேதான் மேடையிலே ஆடுவார்கள் என்பதில்லை. இப்போ, பத்மா சுப்ரமண்யம் இருக்கிறார்.நடனத்துக்கு வாசிக்கத் தெரிந்தால் மாத்திரம் பத்மாவின் நடனத்துக்கு வாசித்துவிட முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். எப்படியெனில், சங்கீதத்துக்கு வாசித்த அநுபவம்- சங்கீத ஞானம், அதுவுமிருந்தால்தான் பத்மாவுக்கு வாசிக்க முடியும். ஏனெனில், பத்மாவுக்கு நல்ல சங்கீத ஞானம் அதனால், மேடையிலே இன்றைக்கு செய்கின்ற மாதிரி நாளைக்கு செய்யமாட்டார். சிலபேர் சங்கீதத்திலும் அப்படித்தான். எம்.எல். வசந்தகுமாரி இருந்தார். அவருடைய கச்சேரிக்கும், அவருடைய மகள் ஸ்ரீவித்யாவின் நடனத்துக்கும் பலதடவை நான் வாசித்திருக்கிறேன். எம்.எல்.வி.இனுடைய கற்பனை ஞானம் இருக்கிறது பாருங்கள், பிரமாதம்.

1973இல் என்னுடைய கல்யாண வரவேற்பு வைபவத்திலும் எம்.எல்.வி.தான் பாடினார். அது ஆவணி மாதம். அந்த மாதத்தில் மாத்திரம் ஒரு பத்து கச்சேரி அவருடைய கச்சேரி கேட்டிருப்பேன். அத்தனையிலும் தோடிதான் பிரதானமாகப் பாடினார். வரவேற்பு வைபவத்திலும் 'என்ன ராகம்' பாடட்டும்' என்று கேட்டார் எம்.எல்.வி. எனக்கு தோடி, பூர்வி கல்யாணி இரண்டும் ரொம்ப பிடித்தமானவை. 'தோடி பாடுங்கள்' என்றேன். பாடினார். நான் கேட்ட அந்த அத்தனை கச்சேரியிலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான தோடி! அதேமாதிரிதான் பத்மா நடனமும், நான் சொன்னேனில்லையா ஒன்றேகாலும் முக்காலும் இரண்டு என்று. அப்படியெல்லாம் பிரித்து விடுவார். அதற்கு சங்கீத ஞானம் இருந்தால்தான் அப்படி வாசிக்க முடியும். இதுபோலவே, சங்கீத கச்சேரிகளிலும் புல்லாங்குழல் ரமணி, ரீ.என்.கிருஷ்ணன், மண்டலின் சிறிநிவாஸ் போன்றோருக்கு வாசிக்கையில் அநுபவித்து வாசிக்கின்றோம். பொதுவாக பாட்டைவிட இசைக்கருவிகளுக்கு மிருதங்கம் வாசிக்கின்றபோது இந்த சங்கீத ஞானம்- பாட்டு ஞானம் சற்று அதிகமாகவே வேண்டும். அப்போதுதான் அந்த கருவியை கெடுத்து விடாமல் வாசிக்கமுடியும். ஏனெனில், மிருதங்கத்தைவிட இவை மென்மையான வாத்தியங்கள். கட்டுப்படுத்தி வாசிப்பதற்கு பாட்டு ஞானம் நன்றாக வேண்டும்.





நடனத்துக்கு வாசிக்கும்போது புதிய ஒரு முறையை நான் கையாண்டேன்.

நடனத்துக்கு வாசிக்கத் தெரிந்தால் மாத்திரம் பத்மாவின் நடனத்துக்கு வாசித்துவிட முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். எப்படியெனில், சங்கீதத்துக்கு வாசித்த அநுபவம்- சங்கீத ஞானம். அதுவுமிருந்தால்தான் பத்மாவுக்கு வாசிக்க முடியும்.

பொதுவாக பாட்டைவிட இசைக் கருவிகளுக்கு மிருதங்கம் வாசிக்கின்றபோது இந்த சங்கீத ஞானம்- பாட்டு ஞானம் சற்று அதிகமாகவே வேண்டும்.

மிருதங்கத்திலே தஞ்சாவூர் பாணி, புதுக்கோட்டை பாணி என்று இரண்டு முக்கிய

(18ம் பக்கம் பார்க்க)

'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே'

-காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி யிடம் அவதானித்த அபூர்வ சத்தி இது.

வித்துவம் எல்லோரிடமுமே இருக்கிறதா? அல்லது அந்த வித்துவம் உள்ளவர்களை நயன பரிசத்தால் கண்டுபிடித்துவிடுகிறாரா?

லண்டனுக்கு வந்து சுமார் இரண்டு ஆண்டுகளாகிறபோது இந்த மிருதங்க மேதை உணர்த்துவது இது.



நாட்டுக்கோட்டை செட்டியார்களின் செட்டிநாட்டின் தலைநகர் காரைக்குடி. பெரும்பாலும் பர்மாவிலும் பின்னர் மலேயாவிலும் வாணிபம் செய்த இச்செட்டிமார், காரைக்குடியையடுத்த தங்கள் கிராமங்களை வளம்படுத்துவதிலும் தங்கள் செல்வத்தில் கணிசமான பகுதியை செலவிட்டார்கள். சமய, சமூக வைபவங்களில்- இல்லங்களில் நடைபெறுகின்ற திருமணங்களில்- 61ஆவது பிறந்த நாள்களில், சிறந்த இசைக்கலைஞர்களை- நடன கலைஞர்களை அழைத்து நிகழ்ச்சியமைப்பார்கள். அப்படியான நிகழ்ச்சிகளை அமைப்பது அநேகமாக ஓர் அந்தஸ்தின் வெளிப்பாடாகவுமிருந்தது.

-அப்படி, அந்த காரைக்குடியிலே சிறந்த- புகழ்பெற்ற இசைக்கலைஞர்கள், 'காரைக்குடி சகோதரர்கள்' என்றுஅழைக்கப்பட்ட- பிரசித்தி பெற்ற வீணை மேதைகளான சுப்பராம ஐயர், சாம்பசிவ ஐயர் சகோதரர்கள்.

தஞ்சாவூர்ப் பாணி, மைசூர் பாணி, ஆந்திரா பாணி என்று அமையும் வீணை வாசிப்பின் பிரதான பாணிகளிலே வாய்ப்பாட்டைப் போன்றதான தஞ்சாவூர்ப் பாணியில், காரைக்குடி பாணி என்றும் ஒன்றை ஏற்படுத்தியவர்கள் இவர்கள். சுப்பராம ஐயர் வீணையை நிலைக்குத்தாகவே வைத்து வாசிப்பார். அவர்களின் ராக ஆலாபனைக்கும் தானத்துக்கும் பிரசித்திபெற்ற இவர்கள், பல்லவி வாசிப்பதிலும் அந்தக்காலத்தில் மிகுந்த பிரபல்யத்தை பெற்றிருந்தார்கள். 2,4,8களை சவுக்கத்தில் கூட இவர்கள் வாசிப்பார்கள். தக்ஷிணாமூர்த்திபிள்ளை மிருதங்கம்.

-ஆக, இந்த வித்வ பரம்பரையில் வந்தவர்தான் கிருஷ்ணமூர்த்தி. காரைக்குடி சகோதரர்களின் பேரர்; சுப்பராம ஐயரின் ஐந்து புதல்வியரில் மூத்த புதல்வியின் புதல்வர்.

சுப்பராம ஐயர் இடையிலேயே காலமாகிவிட, சாம்பசிவ ஐயர் பின்னர் ருக்மிணி அருண்டேலின் அழைப்பில் கலாக்ஷேத்திராவின் அதிபராக இருந்தார். பிரபலமான பல வித்வான்களைப் போலவே திரு கிருஷ்ணமூர்த்தியின் வாழ்விலும் பல சம்பவங்கள் குறிப்பிடத்தக்கவை; சுவாரஷ்யமானவை. ஐந்து வயதாக இருக்கையில் ஒருநாள் சின்ன தாத்தா சாம்பசிவ ஐயர் வீட்டுக்கு பெற்றோருடன் சென்றிருந்தார். பூசையை முடித்து சாப்பிட்டபின்னர்,ஓய்வாக படுக்கையில் சாய்ந்து கொண்டே மிருதங்கம் ஒன்றை மடியில் வைத்து வாசித்துக்கொண்டிருந்தார் சாம்பசிவ ஐயர். இவர்கள் கிளம்பவும், சிறுவனான கிருஷ்ணமூர்த்தியை அழைத்து அணைத்துக்கொண்டு "உனக்கு என்னவேணும் சொல்லு பார்க்கலாம்" என்றார் தாத்தா.

உடனே, "எனக்கு இந்த மிருதங்கம் வேணும்" என்று வாங்கிவந்து அதிலிருந்துதான் ஆரம்பமானது இந்த வித்தை.

ஓரளவுக்கு நடை வாசிக்க கற்றுக்கொண்டிருந்தபோது சிற்றன்னையின் புதல்வியான ராஜேஸ்வரி பத்மநாபனின் வீணைக் கச்சேரிக்கு மதுரை திருப்பட்டி சத்திரம் தியாகராஜ உற்சவம் ஒன்றில் வாசித்தார். ராஜேஸ்வரி இன்று கலாக்ஷேத்திராவில் காரைக்குடி பாணியின் காவலராக விளங்குபவர்.

-தியாகராஜ உற்சவத்தில் அடுத்த கச்சேரி மழவராயனென்டல் சுப்பராம பாகவதர். அந்நாள்களில் பெரிய வித்வான்; 1942இல் சங்கீத கலாநிதி பட்டம் பெற்றவர். பக்கவாத்தியங்கள் சௌடையா பிடில், முருகபூபதி மிருதங்கம்.

ராஜேஸ்வரி பத்மநாபனின் வீணைக்கு வாசித்த சிறுவனின்மிருதங்கம் முருகபூபதியை ஈர்த்தது; குருவாக ஆட்கொண்டார்!

பாலக்காடு மணிஐயர், பழநி சுப்பிரமணியபிள்ளை, முருகபூபதி இம்மூவரும் அக்காலத்தில் மிருதங்க 'மும்மூர்த்திகளா'க திகழ்ந்தவர்கள். அந்த குருகுல வாச காலத்தில் 12 வயதாக இருக்கும் போது, மயிலாப்பூர் தியாகராஜ வித்வ சமாஜத்தின் ஆராதனையில் ஒருவருக்கு வாசித்துக் கொண்டிருந்தார், கிருஷ்ணமூர்த்தி.

-'யாரிந்தப் பையன்' என்று விசாரித்த அங்கிருந்த ஜி.என்.பாலசுப்பிரமணியம், அடுத்தமாதம் கல்யாணக் கச்சேரி ஒன்றில் தனக்கு வாசிக்கும்படி கேட்டார். நம்பமுடியவில்லை. 'தன்னால் வாசிக்க இயலுமா' என்று வாத்தியாரிடம் கேட்டார். "ஆம்; வாசி" என்றார் முருகபூபதி.

ஆனால், ஒரே ஒரு 'கன்டிஷன்'-

"அப்பாவிடம் சொல்லி பான்டு காற்சட்டைக்குப் பதிலாக ஒரு வேட்டி வாங்கிக் கட்டிக்கொண்டு வந்துவிடு" என்றார் ஜி.என்.பி.

சிவில் சேவிஸ் அதிகாரி ஒருவரின் வீட்டில் ஜாம் ஜாம் என்று பெரிய கல்யாணம். ஜி.என்.பி.க்கு காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி மிருதங்கம். வயலின்- லால்குடி ஜெயராமன்.

-தன்னுடைய இந்த "அரங்கேற்றத்துக்கு' தன்னுடைய தந்தையாருக்கு ஏற்பட்ட செலவு ஒரு வேஷ்டிதான் என்றார் கிருஷ்ணமூர்த்தி!

தாத்தா சாம்பசிவ ஐயர் கலாக்ஷேத்திராவில் அதிபராக இருக்கையில் அங்கு நடைபெறும் 'பஞ்சமி' கச்சேரிகளில் எம்.டி.இராமநாதன், ரமணி போன்றவர்களுக்கு கெல்லாம்வாசித்துக்கொண்டிருந்தார். ருக்மிணி அருண்டேல் அவரை அங்கேயே ஆசிரியராக சேர்த்துவிட எண்ணினார்.

ஆனால் நாட்டியத்துக்கு வாசித்தால் 'கை கெட்டுவிடும்' என்று மறுத்துவிட்டார் கிருஷ்ணமூர்த்தி. எனினும் 3ஆண்டுகள் கழித்து 1959 செப்டம்பரில் ருக்மிணி அருண்டேல் வென்றார். அவருடைய தீர்க்க தரிசனம்,நடனத்துக்கான மிருதங்க வாசிப்பில் ஒரு புதிய மரபு- கிருஷ்ணமூர்த்தி பாணி- என்று ஒன்று உருவானது.

14 ஆண்டுகள் கலாக்ஷேத்திராவில் அவர் பணியாற்றினார். இக்காலத்தில் அவர் வாசித்திருக்காத முன்னணி கலைஞர்கள் நடன, இசை, வாத்திய துறையில் இல்லை என்றே சொல்லலாம். 1973இல் சிங்கப்பூர் 'இந்தியன் பைன் ஆட்ஸ்' நியமனம் பெற்றுச் சென்றவர், 1990இல் லண்டன் வந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பக்குவம்

60களின் பிற்பகுதிகளில் எழுத்துலகில் கால்பதித்து இன்றுவரை எழுதிவரும் ஈழத்து சிறந்த தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்கள் மிகச்சிலரில் ஒருவர் சட்டநாதன். பிரசுரிப்பு நோக்கற்ற இவரது கதைகள் சமூக யதார்த்தங்களைச் சித்தரிக்கும் அதேவேளை, கலாபூர்வமாகவும் அமைவது அவரின் வெற்றிக்கு காரணம். இவரின் சிறுகதைகள் சில காதல்ரசம் கொண்டனவாகவும் இருக்கும். சொற்சிக்கனமும் செய்நேர்த்தியான வசன அமைப்பும் காணப்படும். 'மாற்றம்'- இவரது முதல் சிறுகதைத் தொகுதி, 10 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்தது. இரண்டாவது தொகுதி இவ்வாண்டின் தொடக்கத்தில் வெளியானது.

பட்டதாரி ஆசிரியரான திரு க.சட்டநாதன் 'வீரகேசரி' அலுவலகத்திலும் சில காலம் பணியாற்றியவர்.

'பக்குவம்' 1989இல் 'திசை'யில் வெளியானது.

## க.சட்டநாதன்

சிறுகதை

எவ்வளவு முன்னெச்சரிக்கையுடன் இருந்தும் அந்தத் தவறு நடந்து விடுகிறது. சைக்கிளைப் பூட்டப் போன போதுதான் அதை அவன் அவதானித்தான்.

சைக்கிளில் பூட்டில்லை.

அவனது வாகனம் மிகவும் பழையது. றலி. எழுபத்திரெண்டாம் ஆண்டு நூற்றி நாற்பது ரூபாய்க்கு வாங்கியது.

'பழசு' என்றால் திருட்டுப் போகாதா என்ன? பயம் காரணமாக அவனாகவே ஒரு பூட்டை- ஒன்றரையடிச் சங்கிலி, அதே அளவிலான சிவப்பு இறப்பர் ஹோர்ஸ், பழைய பாட்லொக் ஆகியன கொண்டு- தயார் செய்து கொண்டான்.

அந்தப் பூட்டு சைக்கிளுக்காகத் தயாரிக்கப்பட்டது. என்றாலும், வீட் டில் அவனது மனைவி பல தேவைகளுக்கு அதனைப் பயன்படுத்திக் கொண்டாள்.

இரவு வேளைகளில் கோழிக்கூடு பூட்ட- முன் கேற் ஆமைப்பூட்டு கைபிசகாக எங்காவது மாறி வைக்கப்பட்டுவிட்டால்- கேற்றைப் பூட்ட என்று அது அவளுக்குப் பயன்பட்டது.

இரவுகூட, கோழிக்கூடு பூட்ட அவள் எடுத்தது இவனுக்கு ஞாபகம் வந்தது.

மனைவியை மனதால் வைதபடியே செய்வதறியாது விழித்தவனுக்கு, பொறிதட்டியது போல் அந்த யோசனை தோற்றியது.

'பக்கத்திலை..... ஆற்ரையன் வீட்டிலை சைக்கிளைப் போட்டால் பத்திரமாய்க் கிடக்கும்....'

சைக்கிளை உருட்டியபடி பிரதான வீதிக்கு வந்தான். அவனது மனசுக்குப் பிடித்தமாதிரி வீடு எதுவுமே இல்லாதது போலத் தோன்றியது. ஒரு கணம் தயங்கியவன், அந்தச் சிறிய வீட்டை எட்டிப் பார்த்தான். ஒருவரும் இல்லை. யோசனை ஏது மற்றவனாய் சைக்கிளை உள்ளே உருட்டினான்.

அப்பொழுது;

அவள், அந்தப் பெண்குழந்தை- ஒன்பது அல்லது பத்து வயது இருக்கும்- எதிரே வந்தாள். அவள் கறுப்பாயிருந்தாள். கையும் காலும் சுள்ளி சுள்ளியாயிருந்தன. முகத்தில் மட்டும் ஒரு திரட்சி, களை, கண்கள் பெரிதாய், சதாசிரித்தபடி இருந்தன. இவனை மிகுந்த பற்றுதலோடு பார்த்தாள்.

முதற்பார்வையிலேயே அவளை இவனுக்குப் பிடித்துப் போய் விட்டது.

அழிந்து போன சிவப்புப்புள்ளிச் சீத்தைச் சட்டை போட்டிருந்தாள்.

'என்ன?' என்பது போல அவள் மிகுந்த கனிவுடன் இவனைப் பார்த்தாள்.

"சைக்கிளுக்குப் பூட்டில்லை.... அதுதான்...இதிலை. விட்டிட்டுப் போகலாமா...? பக்கத்திலை செத்த வீடு போக வேணும்...."

சரி என்பதற்கு அடையாளமாகத் தலையை மட்டும் ஆட்டினாள்; அந்தக் குட்டி இளவரசி.

"வீட்டிலை பெரியாக்கள்....?"

"அம்மா கடைக்குப் போயிட்டா...."

அவள் அம்மா என்றது எஜமானியையா? பெற்ற தாயையா...? அவனுக்குக் குழப்பமாக இருந்தது. கேட்கவும் துணிவு கொள்ளாதவனாய், சைக்கிளை வீட்டின் கிழக்குச் சுவரோரமாய் சீற் சீமேந்தில் உரசாதவாகில் பக்குவமாய் விட்டு விட்டு நகர்ந்தான்.

சாவீட்டில், சொந்தபந்தங்களை விட பரந்தாமனின் சக ஆசிரியர்களும் அவனிடம் கற்ற மாணவ மாணவியருமே நிறைய இருந்தார்கள்.

இப்படி ஒரு அகாலமுடிவு அவனுக்கு வந்தது இவனுக்குக் கவலையாக இருந்தது.

'முப்பத்தொருவயதில் சா வருவது எவ்வளவு கொடுமை...அவனுக்கும் ஈஸ்வரிக்கும் இடையே எவ்வளவு நெருக்கமான உறவு தளிர் கொண்டது... திருமணம்கூட இரண்டொரு மாதத்தில் என்றிருந்ததே... எல்லாமே அவனளவில் ஏன் பொய்த்துப் போய்விட்டன.....'

'அவனது ஆர்வம், சிரத்தை, மாணவர்களின் தன்மைக்கேற்ப கற்பிக்கும் பக்குவம், எல்லாமே ஒரு துப்பாக்கி ரவையின் முன்னால் அர்த்தமிழந்து போவதென்றால்.....'

குரொஸ் ஃவ்யரிங்கில் தான் அவனுக்கு இந்த முடிவு வந்தது என்பது பலரது அபிப்பிராயம். 'இல்லை.... இல்லை.... ஏதோ தொடர்பாம் அதனால் தான்' என்ற குசுகுசுப்பும் இருந்தது.

'எதுவோ...? என்ன காரணமோ...? அவனது மரணம் தவிர்க்க முடியாததாகிவிட்டது... துயரம் தருவதாக இருக்கிறது.'

தலைவாசலில்- சற்று உள்ளே, பெட்டியுள் அவன் நெடுங்கிடையாய்க் கிடந்தான். அவனைப் பார்த்ததும் நெஞ்சிலும் முகத்திலும் பட்டெனயாரோ பலமாக அறைந்தது போல் ஓர் உணர்வு இவனுள் படர்ந்தது. சக மனிதன் என்ற அளவில், அந்த மரணத்தின் கொடுமை இவனையும் பற்றிக் கொண்டது. இவன் கலக்கமுற்றவனாய் அவனது உடலைப் பார்த்த கையோடு வெளியே வந்து உட்கார்ந்து கொண்டான். இவன் வெளியே வந்த சில நிமிடங்களுக்குள்ளாகவே அவனது இறுதி ஊர்வலம் ஆரம்பமாகியது.


சுடலை வரை போவதா விடுவதா என்று இரு மனப்பட்டபோது, பசுபதிதான் இவனை இழுத்துக் கொண்டு போனான்.

'"இரத்த வெடிலும் பிணவாடையும் தான் இந்த மண்ணின் விதியாகி விடுமோ...? இயல்பு தப்பிய இந்த வாழ்வு எத்தனை காலம் நீடிக்கப் போகிறது...'

மதியம் திரும்பிய வேளையில் எங்கோ தூரத்தில் வானொலியில் பூபாளம்!

'இது என்ன அபத்தம்... எல்லாமே ஒழுங்கற்று தலைதடு மாறியதான நிலை ஏன்...? இயல்வும் இசைவும் பிறழ்ந்த இந்த வாழ்வு ஒழுங்குபடுவது எப்போது...? எல் லாமே தூரத்துக் கனவாய் ஆகிவிடுமோ....'

பிரதானவீதியில் ஏறியதும் இவனுக்குச் சைக்கிளின் ஞாபகம் வந்தது. அந்தச் சிறிய வீட்டின் பக்கம் பார்வை சென்றது. சைக்கிள் விட்ட இடத்தில் அப்படியே பத்திரமாக இருந்தது.



இந்தத் துயரங்களிடையே சைக்கிள் பற்றிய நினைப்பு இவனை வெட்கமுறச் செய்தது.

நீலவானமும், கருங்கடலும், பூமியும் தழுவி நின்ற பெரு வெளியில் தான் அந்தச் சுடலை இருந்தது.

பரந்தாமனின் உடலைத் தீ நாக்குகள் தழுவியபோது இவனது தேகம் லேசாக நடுங்கியது. கண்கள் பனித்தன. உள்ளத்து உணர்வுகள் அனைத்துமே உறைந்து போனதான நிலை. இவன் பசுபதியைப் பார்த்தான். அவன் யாருடனோ கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தான்.

'பசுபதியை ஏன் எதுவும் தொடவில்லை!'

சுடலையை விட்டு வெளியே வந்த போது மழை பிடித்துக் கொண்டது. இவன் பசுபதியின் குடையினுள் ஒதுங்கிக் கொண்டான்.

"பாஸிங் கிளவுட்ஸ் மச்சான்... மழைவிட்டிடும்..."

'இந்த வாழ்வு... இதன் அர்த்தம் எல்லாமே நகரும் முகில் கூட்டம் தானா?,

மரணம், வாழ்வு பற்றிய விசாரம் தொற்றிக் கொண்டது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது.

பசுபதி களைப்பற்று சளசளத்தபடி வந்தான். அப்படி எல்லாம் இவனால் இருக்கமுடியவில்லை. சிறகொடிந்தது போல மனசு படபடப்பற்று இருந்தது. இந்த ஒடுக்கம் மனசுக்கு இதமாயிருந்தது.

மழை விட்டதும் கிழக்கு வானில் பொட்டுப் பொட்டாய் நீலவானம் தெரிந்தது. வானம் எவ்வளவு விரைவாக நிர்மலமாகிவிட்டது.

மனசின் அழுத்தங்கள் யாவும் லேசானது போல அவன் உணர்ந்தான்.

பிரதான வீதிக்கு வந்ததும் அவன் பசுபதியிடம் விடைபெற்றுக் கொண்டான்.

சைக்கிள் ஞாபகம் வந்தது.

'காற்றுக் கீற்றுப் போய்க்கிடக்குமோ......? அந்தப் பிள்ளை..... அவளது தம்பி..... வால்வ்ரியூப்பைத் தொட்டுக்கிட்டுப் பார்த்து.....'

ஏதோ கனவு கலைந்தது போலவும், மீண்டும் இயல்பான சூழலில் காலூன்றியது போலவும் அவனுக்கு இருந்தது.

சோர்வு நீங்கிய பாடாய் இல்லை. சைக்கிள் வைத்த வீட்டை அடைந்த போது அங்கு அவனுக்கு அதிசயம் காத்திருந்தது.

சைக்கிள் மழையில் நனையாதபடிக்கு பக்குவமாய் 'ஸன் சேட்டின்' கீழ் முன்புறமாக எடுத்து வைக்கப் பட்டிருந்தது.

'யாருடைய வேலை இது... அந்தக் குழந்தைதான் எடுத்துவைத்திருப்பாளோ... சிரமமாக இருந்திருக்குமே...சைக்கிளை எடுக்கும் போது எதிர்ப்பக்கமாகச் சரிந்து அடிகிடிபட்டிருந்தால்... அல்லது உருட்டும் போது உடம்பில் உரசல் ஏதாவது....'

இவன் சைக்கிளை எடுத்தபோது, ஈரக்கையை தனது சட்டையில் துடைத்தபடி ஓடிவந்தாள்.

"மழை பெய்தது அது தான்..."

"மழை பெய்தால் என்னம்மா...? உனக்குக்கஷ்டமா இருந்திருக்குமே...."

"கஷ்டமா... எனக்கா..?," அவள் உதடு நெகிழச் சிரித்தாள்.

உடைந்து போன உள்ளம் நிரவல் பெற்றுப் பரவசம் கொள்ள, அவளை வாஞ்சையுடன் பார்த்தான்.

வாழ்வின் அர்த்தமே அவள் போலவும், உயிர்ப்பசையின் தொடர்ச்சியை ஒரு சுடராய் அவள் தாங்கி நிற்பது போலவும் அவனுக்குத் தோன்றியது.

நன்றிப் பெருக்குடன், செல்லமாக அவளது தலையை வருடியபடி இவன் விடை பெற்றுக் கொண்டான்.

இவன் கேற்றைத் திறந்து சைக்கிளை எடுத்த போது சைக்கிள் கேற்றுடன் அடிபட்டுக் கொண்டது.

"கவனம்... பார்த்தெடுங்க.... காலிலை அடிபடப்போகுது...."

திரும்பிப் பார்த்தான். கன்னங்குழியச் சிரித்தபடி அவள் நின்றாள்.

வெளியே வந்த பின்புதான் குழந்தையின் பெயரைக் கேட்காமல் விட்டது மனதில் பட்டது.

'எதுவுமே... தாமதமாய்த் தான் உங்களுக்கு.....'

மனைவி அடிக்கடி கூறுவது ஞாபகம் வந்தது.

கொழும்புத்துறைப் பக்கம் வந்தால், மீளவும் ஒருமுறை இந்தக் குழந்தையைப் பார்க்கவேணும், பேரைக் கேட்க வேணும்....' என்றெல்லாம் அவனுக்குத் தோன்றியது.

மனம் பரவசம் கொண்டு சிறகு விரித்ததான உணர்வு. பரந்தாமனின் மரணம் தந்த உளைச்சல் சிறுகச் சிறுக நீங்கியதான நிலையில் எல்லாமே அவனுக்கு அழகாக இருந்தன.

அவனுக்கு முன்பாக, எதிரே வந்து அவனைக் கடந்து சைக்கிளில் சென்ற பெண் பிள்ளையின் லாகவம். சுமக்க முடியாத சுமையைச் சுமந்து செல்லும் சிறுவனின் முகம் காட்டும் முதிர்ச்சி. தோளோடுதோள் கைபோட்டு சைக்கிகளில் சமாந்தரமாய் உலாபோகும் சீருடை அணிந்த கல்லூரி மாணவர்களின் குதூகலம். பஸ்ரியன் சந்தியில் திரும்பிய பஸ்ஸில், கணமே தெரிந்து மறைந்த அந்தப் பெயர் தெரியாத, எங்கோ எப்பொழுதோ பார்த்துப் பிரியப்பட்ட அழகியின் முகம். எல்லாமே அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தன.

உலகத்தின் அழகுகள் அனைத்தை

(17ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உலக அரங்கில் இவ்வார அரசியல் கண்ணோட்டம்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

நாணயத்தின் பெறுமதியை உலக சந்தையில் நலிவடையச் செய்திருக்கின்றன. பிரிட்டிஷ் பயணிகள் வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லும் பயணிகள் காசோலைகள் பிரிட்டிஷ் ஸ்டேலிங் பவுண்ட் நாணயத்தில் இருந்தால் அவற்றை காசாக மாற்றவோ ஏற்றுக்கொள்ளவோ பல வெளிநாடுகளில் பல வர்த்தக நிறுவினங்கள் மறுத்து வருவதாக தெரிகிறது. பயணக் காசோலைகள் அமெரிக்க டாலர்களில் எழுதப்பட்டிருந்தால் மட்டுமே அவற்றை வெளிநாட்டினர் ஏற்றுக் கொள்கிறார்களாம்.

ஜேர்மனியின் பொருளாதாரக் கொள்கைகளினால், ஜேர்மன் மத்தியவங்கி ஆளுநரின் அநாகரிகமான வார்த்தைகளினால் நிதித்துறையில் ஒரு நடுக்கம் ஏற்பட்டது. நாணயச் சந்தையில் பிரிட்டிஷ் ஸ்டேலிங் பவுண்ட் நாயணத்தின் பெறுமதி சுமார் 10 சத விகிதத்தால் குறைந்துள்ளது. இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டோர் இங்கிலாந்திலிருந்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பணம் அனுப்பி வந்த இலங்கை மக்கள்- இந்திய மக்கள். இந்தியாவில் 60 ரூபாவாக இருந்த ஸ்டேலிங் பவுண்ட் இப்போது 48 ரூபாவாக பெறுமதி குறைந்திருக்கிறது. இலங்கையில் இந்தியாவில் உள்ள குடும்பத்தினர் இனி குறைந்த பெறுமதியையே பெறுவார்கள். பி.ஸி.ஸி.ஐ வங்கியின் தில்லுமுல்லுகளினால் தமது சேமிப்புகளை இழந்ததும் பிரிட்டிஷ் ஆசிய மக்கள் தான்.

# மகாராணியின் அழகு

ஆண்டொன்றுக்கு சுமார் 80 லட்சம் ஸ்டேலிங் பவுண்களை சம்பளமாகப் பெறுகிறார் பிரிட்டிஷ் பேரரசியார். இது வருமானவரி கழிக்கப்படாத முழுமையான சம்பளம்! இதே போல அவரது குடும்பத்தில் 10 பேருக்கு இலவச சம்பளம் -வருமானவரியே இல்லாத சம்பளம்- ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. பொதுமக்களின் பணத்திலிருந்து இவ்வளவு சம்பளத்தை வாங்கும் அரச குடும்பத்தினர் என்ன வேலை பார்க்கிறார்கள்? சம்பளங்கள் வழங்கப்படல் அவசியந்தானா? என்றெல்லாம் கேள்விகள் இப்போது எழுந்திருக்கின்றன. இதற்குக் காரணம் பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் மீது பிரிட்டிஷ் பொதுமக்களுக்கு எழுந்துள்ள ஓர் அவமரியாதை. கடந்த ஒருவருட காலமாக அரச குடும்பத்தினர் ஒருவர்பின் ஒருவராக தமது படுக்கையறைச் சங்கதிகளை சந்திக்கு கொண்டுவந்தார்கள். நாட்டிற்கே உதாரணமாகத் திகழ வேண்டியவர்கள் மக்களின் அருவருப்பைச் சம்பாதித்தார்கள்.

இளவரசி ஆன் அவர்களின் விவாகரத்து, இளவரசி டயானாவின் பல தற்கொலை முயற்சிகளை விபரித்த புத்தக வெளியீடு, இளவரசர் சார்ள்ஸ் பற்றிய கிசுகிசு செய்திகள், இளவரசர் ஆண்றூவின் மனைவி அமெரிக்காவில் இடுப்புக்கு மேல் நிர்வாணக் கோலத்தில் ஒரு கோடீஸ்வரக் காதலனை முத்தமிடும் புகைப்படம் பிரிட்டிஷ் பத்திரிகைகளில் பிரசுரம் இப்படி அடுக்கடுக்காக செய்திகள் வந்தால் பிரிட்டிஷ் மக்கள் பொறுமை இழக்காமல் என்ன செய்வார்கள்? நாட்டிலே இப்போது பொருளாதார நெருகடி. பல தொழிலாளர்கள் வேலைகளை இழந்திருக்கிறார்கள். சிலர் வீடு வாசல்களை இழந்திருக்கிறார்கள். கடைகளில் வியாபாரமே நடப்பதில்லை! நாயணத்தின் பெறுமதி வீழ்ச்சி! இப்படியான சூழ்நிலையில் அரசகுடும்பத்தின் நடத்தையும் அவர்கள் பெறும் லட்சக் கணக்கான 'ஓசிச்' சம்பளமும் மக்கள் ஆத்திரத்தை கிளறியிருக்கிறது.

இன்று இலவச சம்பளம் பெறும் அரசகுடும்பத்தினர் 11 பேர். இந்த எண்ணிக்கையை 4 பேராக குறைக்க பிரதமர் மேஜர் ஆலோசனை செய்து வந்தார். ஆனால் மகாராணியார் முந்திக்கொண்டு விட்டார். மக்களின் மனமறிந்து நடப்பதுதானே மன்னனுக்கு அழகு?

இளவரசி ஆன், இளவரசி மார்கிரெட், இளவரசர் எட்வர்ட், இளவரசி அலிஸ் ஆகியோரின் சம்பளங்களை நிறுத்தும்படி மகாராணியார் பிரதமரை கேட்டிருக்கிறார். ஆனாலும் மகாராணியார் தொடர்ந்தும் சம்பளம் பெறுவார். அவரது கணவர் தொடர்ந்தும் வருடம்தோறும் மூன்றரை லட்சம் பவுண் சம்பளம் பெறுவார். மகாராணியின் தாயாருக்கு ஆண்டு தோறும் தரப்படும் ஆறரை லட்சம் பவுணும், இளவரசர் ஆன்றூவுக்கு தரப்படும் இரண்டரை லட்சம் பவுணும் தொடர்ந்து வழங்கப்படும்.

அடுத்த விஷயம், சம்பளத்தின் மீது என்னையும் உங்களையும் போல அரசகுடும்பத்தினர் செலுத்த வேண்டிய 'வரி'. பண்டைய காலங்களில் வருமானம் மிகமிகக் குறைவாக இருந்த அந்த நாட்களிலேயே கூட பிரிட்டிஷ் மன்னர்கள் வரி செலுத்தியிருக்கிறார்கள். இன்று கூட ஸ்பெயின் மன்னர், பெல்ஜியன் மன்னர்,சுவீடனின் மன்னர், எல்லோருமே வரி செலுத்துகிறார்கள். இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? எனவே பிரிட்டிஷ் மகாராணியும் தமது வருமானத்தில் சம்பளத்தில் 'வரி' செலுத்த வேண்டும் என்று பிரதமர் மேஜர் விரும்புகிறார். அவரது அமைச்சரவையில் பலரும் இவ்வாறே கருதுகிறார்கள்.

பிரதமர் செய்ய வேண்டியதெல்லாம் "மாட்சிமை தங்கிய மகாராணியாருக்கு,....நீங்கள் இனி வருமானவரி செலுத்த வேண்டும்..." என்று கேட்டு ஒரு கடிதத்தை அனுப்புவதுதான். பிரிட்டஷ் அரசியல்சாசனப் பேரரசி என்ற முறையில்- பிரதம அமைச்சரின் ஆலோசனையை ஏற்றுக்கட்டுப்பட்டு நடத்தல் மகாராணியின் கடமை. அப்படியானால் கடந்த 50 வருடங்களாக கட்டாத வரிக்கு என்ன நடக்கும்? பழைய வரி மட்டுமே சுமார் 200 மில்லியன் பவுண் இருக்கும். மகாராணியிடம் இன்று இருக்கும் சொத்தின் பெறுமதியே 100 மில்லியன்தான்! வரிகட்டப் பணம் இல்லாதவர்களை வங்குரோத்து ஆக்குவது (BANKRUPT) பிரிட்டிஷ் வருமானவரித் திணைக்களத்தின் வழக்கம்! அப்படியானால்......



குற்றாலம் ஆர்.நாகராஜனின் இசை விருந்து!

லண்டன் தமிழ்க் கழகத்தின் ஆதரவில் இம்மாதம் 6ஆம் தேதி றைஸ்லிப் வின்ஸ்டன் சேர்ச்சில் மண்டபத்தில் நடைபெற்றது. திருமதி கலைவாணி இந்திரகுமார் வயலின்; திரு காரைக்குடி கிருஷ்ணமூர்த்தி மிருதங்கம்; திரு பாஸ்கரன் ஸ்ரீகரம் கடம்; திரு பீற்றர் லொக்கெற் தபேலா.

# தனித்துவமான தமிழ்ப் பெண் அமைச்சர்

இலங்கையின் கல்வித்துறையில் ராஜாங்க அமைச்சராக இப்போது பணிபுரிபவர் ஸ்ரீமதி ராசமனோஹரி புலேந்திரன் அவர்கள். அரசாங்கக் கட்சியின் துணைக் கொறடாவாகவும் நியமிக்கப்பட்டுள்ள இவர் வன்னி மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர். செப்டெம்பர் நடுப்பகுதியில் சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் நடத்தப்பட்ட கலாச்சார- மற்றும் கல்வித்துறை மகாநாட்டில் கலந்து கொள்ள தமது அமைச்சுப் பரிவாரங்களுடன் ஜெனிவா சென்ற இவர், கடந்த வாரம் இங்கு லண்டனிலும் சில தினங்கள் தங்கினார். அப்போது அவரை நேரில் சந்தித்துப்பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது.

"...ஒரு தேவாலயத்து கன்னியாஸ்திரியாக செல்லவிரும்பினேன். ஆனால் இறைவன் நினைத்தது வேறு. திருமணமாகி குழந்தைகள் பிறந்தன. என் ஒரே புதல்வியையும் கணவரையும் சொற்பகால இடைவெளிக்குள் இழந்தேன். அரசியலில் இறங்கவில்லை; இறக்கப்பட்டேன். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக 10 வருடங்களுக்கு முன் தெரியப்பட்டேன். கல்வித்துறையின் ராஜாங்க அமைச்சராக இரண்டு வருடங்களுக்கு முன் நியமிக்கப்பட்டேன்..." என்று அடக்கமாக விளக்கினார் ஸ்ரீமதி ராசமனோகரி அம்மையார்.



ராஜமனோகரி

"இசை என்றால்- பாடல்களைக் கேட்டு ரசிப்பது என்றால் அன்றும் இன்றும் எனக்கு மிகவும் விருப்பம். உங்கள் இலங்கை வானொலி நாட்களில் கூட நீங்கள் தயாரித்தளித்த இசை நிகழ்ச்சிகளை கேட்டு ரசித்திருக்கிறேன்!..." என்று அமைச்சர் குறிப்பிட்டதும் எனக்கு வியப்பாயிருந்தது!

இசைத்துறையில் தன்னால் பூர்த்தி செய்ய முடியாமல் போன ஆசைகளை இப்போது தன் இரு புதல்வியர் மூலம் பூர்த்தி செய்ய முற்படுவதாக அவர் குறிப்பிட்டார். கொழும்பில் மகளிர் கல்லூரி ஒன்றில் கல்விபயிலும் இவரது புதல்வியர் அபிராமியும் துர்க்காவும், பரத நாட்டியம், வீணை, வாய்ப்பாட்டு இவற்றை திறமை மிக்க, பாண்டித்யம் பெற்ற கலைஞர்களிடம் பயின்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வடபுலத்தைச் சேர்ந்த தமிழ்ப் பெண்மணி ஒருவர் இலங்கை அரசாங்கத்தில் ராஜாங்க அமைச்சர் பதவி வகிப்பது இது முதற்தடவை என்று நினைக்கிறேன்.

# கத்தோலிக்க பணியகம்

(நமது நிருபர்)

லண்டனில் தமிழ் கத்தோலிக்க பணியகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 26ஆம் தேதி இதன் அங்குரார்ப்பண வைபவம் கிளப்பம் கொமன் புனித மேரி ஆலய மண்டபத்தில் நடைபெற்றது.

பிரிட்டனில் வாழும் தமிழ்க் கத்தோலிக்கர்களின் நீண்டகால அயரா முயற்சியினால் இப்பணியகத்துக்கான அங்கீகாரம் இங்கிலாந்தின் கத்தோலிக்க உயர் பீடத்தினால் இப்போது வழங்கப்பட்டுள்ளது. வேற்று நாடுகளுக்கு புலம்பெயர்ந்த மக்கள் தங்கள் சமய வழிபாடுகளை தம் சொந்த மொழியில் நடாத்துவது உகந்ததென்றும் தங்கள் மொழி பேசும் குருக்களையே ஆன்மீக இயக்குநராக கொள்ள வேண்டும் என்றும் திருமறை இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் கூட்டாக வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம விருந்தினராக ஆயர் ட்ரிப் அழைக்கப்பட்டிருந்தார்.



வண.பிதா தேவராஜன் அடிகளார் தமிழ் சம்பிரதாய முறைப்படி தமிழ் கத்தோலிக்க பணியக அங்குரார்ப்பண வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.



பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஆயர் ட்ரிப் அடிகளாரும் வண.பிதா இம்மானுவல் அடிகளாரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பதினொரு ஈழத்து

(9ம் பக்கத் தொடர்ச்சி)

அகலிகை கல்லாவது யாருடைய சாபத்தினாலுமல்ல. தன்னுணர்வின் விழிப்பினால்தான். இந்திரன் மேனியெல்லாம் புண் உண்டாவது யாருடைய சாபத்தினாலுமில்லை; தன் பொல்லாமையின் நோண்டுதலால்தான். அகலிகையைப் போல் மிக இறுக்கமான காட்சிப் படிமங்களை அவரது கவிதைகள் எல்லாவற்றிலும் காணலாம். இப்படிமங்களினூடு வாசகனை ஓர் உணர்வுச் சூழலுக்குள் கொண்டு போவது மஹாகவியின் பாணி.

முருகையனின் பாணி இதிலிருந்து வேறானது. கருத்து அல்லது சிந்தனை வெளிப்பாடுதான் அவரது கவிதையின் பிரதான அம்சமாகும். விஞ்ஞானத்துக்குரிய பொதுமைப்படுத்தும் சிந்தனைமுறையை இவரது பெரும்பாலான கவிதைகளில் காணலாம். முருகையனின் கவிதைகள் வாசகனை ஓர் அறிவுச் சூழலுக்குள் கொண்டு செல்வன. நீலாவணனிடம் இரு எதிர்நிலைப்பட்ட (Contrasting) போக்குகளைக் காணலாம். ஒன்று, மஹாகவியிடம் காணப்படும் யதார்த்த நெறி. மற்றது, மரபு சார்ந்த ஆன்மீகக் குறியீட்டு நெறி. அவரது 'பாவம் வாத்தியார்'லும் பனிப்பாலையிலும் இவ்விரு எதிர்நிலைகளைக் காணலாம்.

மூன்றாம், நான்காம், ஐந்தாம் தலைமுறைகளைச் சேர்ந்தவர்களுட் பெரும்பாலோர் மார்க்சீயச் சார்பு நிலையாளர்கள். ஆயினும், இவர்கள் மார்க்சீயத்தை உள்வாங்கிக் கொண்ட முறையிலும் அதை வெளிப்படுத்தும் முறையிலும் ஆளுக்கு ஆள் வெவ்வேறு அளவில் வேறுபடுகின்றனர். அதுவே அவர்களது தனித்துவம். மு.பொன்னம்பலத்தை இங்கு தனியாகக் குறிப்பிட வேண்டும். ஈழத்துக் கவிதையிலே அவர் வேறு ஒரு போக்கைப் பிரதிபலிக்கின்றார். மு.தளையசிங்கம் முன்வைத்த மார்க்சியத்தை நிராகரித்து மார்க்சியத்துக்கப்பால் தேடும் ஆன்மிகப் போக்கு அவருடையது. கவிதையில் யதார்த்தத்தை விட ஆத்மார்த்தத்தை வலியுறுத்துபவர் அவர். அவரது அகவெளி சமிக்ஞைகள் இதை நன்கு புலப்படுத்தும். இராமலிங்கமும் ஆன்மீக நோக்குடையவரே. ஆயினும் சமூக யதார்த்தத்தில் அவரது கால்கள் நன்கு பதிந்துள்ளன.

தற்காலத் தமிழகக் கவிதைகளிலே இத்தகைய தனித்துவ வேறுபாடுகளை நாம் அபூர்வமாகவே காண்கின்றோம். பாரதி, பாரதிதாசனிடம் காணப்பட்டது போன்ற அல்லது கு.ப.ரா., பிச்சமூர்த்தி போன்றவர்களிடம் காணப்பட்டது போன்ற துலக்கமான ஆளுமை வேறுபாடுகளை இன்றையத் தமிழகக் கவிஞர்கள் வெளிப்படுத்தவில்லை. பொதுவாகச் சொல்வதானால் 'எழுத்து' மரபினர், 'வானம்பாடி' மரபினர் என இரு மரபினரையே நாம் அங்கு காண்கின்றோம். குழுத் தனித்துவத்துக்குள் தனித்தனி ஆளுமைகள் பெரிதும் மறைந்து போய்விட்டன என்றே தோன்றுகின்றது. ஈழத்திலே இத்தகைய குழு மரபுகளை அவதானிக்க முடியவில்லை. தனி ஆளுமைகளே பிரகாசிக்கின்றன.

## பொதுப் பண்பு

இத்தொகுப்பில் இடம்பெறும் பதினொரு கவிஞர்களும் வெவ்வேறு அளவில் தங்களுக்கென்ற தனித்துவமான பாணிகளைக் கொண்டுள்ளனர் என்று கூறும் அதேவேளை அவர்களிடம் காணப்படும் சில அடிப்படையான பொதுப் பண்புகளையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதில் முதன்மையானது அவர்களின் சமூகச் சார்பாகும். ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் பிரதான பண்பே அதன் சமூகச் சார்புதான். கவிதைகள் சமூக, அரசியல் பிரச்னைகள் தொடர்பான கவிஞனின் பார்வையை, அனுபவத்தை, சமூக நிலைப்பட்ட சிந்தனைகளை வெளிப்படுத்துவதையே நாம் இங்கு சமூகச்சார்பு என்று கருதுகின்றோம். இதிலே சமகாலப் பிரக்ஞை முக்கியமானது. மஹாகவி கூறியுள்ளது போல்

இன்றைய காலத் திருக்கும் மனிதர்கள்
இன்றைய காலத் தியங்கும் நோக்குகள்
இன்றைய காலத் திழுப்புகள் எதிர்ப்புகள்
இன்றைய காலத் திக்கட்டுக்கள்

முதலியவையே ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் பிரதான பொருளாய் அமைந்துள்ளன. மஹாகவி, முருகையன், நீலாவணன் முதலிய முன்னோடிகள்- இவர்களது நோக்கும் போக்கும் வெவ்வேறாய் இருப்பினும்- சமூகச் சார்பினை ஈழத்துக் கவிதையின் பிரதான பண்பாக நிலைநிறுத்தினர். இவர்களை அடுத்த தலைமுறைகளில் உருவாகிய மார்க்சிய தத்துவசார்புடைய கவிஞர்களும் மார்க்சிய எதிர்ப்புக் கவிஞர்களும் கூட கவிதையின் சமூகச் சார்புக்கு மிகுந்த அழுத்தம் கொடுத்தனர். வாழ்க்கை, சமூகம் பற்றிய ஓர் ஆழமான பார்வையை அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். பொருள் அடிப்படையில் இவர்களின் கவிதைகளைப் பாகுபடுத்துவது இவற்றின் சமூகச் சார்பை மிகை எளிமைப்படுத்துவதாக அமைந்து விடலாம். எனினும், சாதியமைப்பு, வர்க்க முரண்பாடு, இன ஒடுக்குமுறை போன்றவற்றுக்கு இன்றைய ஈழத்துக் கவிஞர்கள் எவ்வாறு முகம் கொடுத்துள்ளனர் என்பதை இத்தொகுப்பில் உள்ள பெரும்பாலான கவிதைகள் புலப்படுத்துகின்றன என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இன்றைய ஈழத்துக் கவிதை பிரதானமாகச் சமூகச் சார்புடையது என்று நாம் கூறும்போது அது முற்றிலும் தனிமனிதச் சார்பற்றது என்று பொருளாகாது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சமூகச் சார்பையும் தனிமனிதச் சார்பையும் வேறுபடுத்தி நோக்கவும் முடியாது. கவிதை முழுமொத்தமான வாழ்க்கை அனுபவ வெளிப்பாடுதான். கவிஞன் சமூக மனிதனாக இருக்கும் அதேவேளை தனிமனிதனாகவும் இருக்கின்றான். இவ்விரட்டைத் தன்மை ஒன்றை ஒன்று பாதிப்பது; ஒன்றில் ஒன்று தங்கி இருப்பது; கவிஞனும் ஒரு சமூகமனிதன் என்ற வகையிலே தனக்கும் சமூகத்துக்கும் பொதுவான சமூக, அரசியல் பிரச்னைகளால் பாதிக்கப்பட்டு அதற்கு முகம் கொடுக்கின்றான். அதே வேளை அவன் ஒரு தனிமனிதன் என்ற வகையிலே அவனுக்கென்று தனிப்பட்ட (Personal) அனுபவங்களும் பிரச்னைகளும் உண்டு. அவற்றுக்கும் அவன் கவிதை வடிவம் கொடுக்கின்றான். இவ்வகையிலே இன்றைய ஈழத்துக் கவிதைகளில் கவிஞர்களின் தனிமனிதச் சார்பான வெளிப்பாடுகளையும் காண்கின்றோம். இத்தொகுப்பிலும் அத்தகைய சில கவிதைகளைக் காணலாம். ஆயினும், இன்றைய ஈழத்துக் கவிதைகளில் சமூகச் சார்பே ஆதிக்கம் செலுத்தும் (Dominant) அம்சம் எனல் தவறாகாது.

சமகாலத் தமிழகக் கவிதையுடன் ஒப்புநோக்குகையில் இது எதிர்நிலையானது என்று தோன்றுகிறது. தமிழகக் கவிதை பிரதானமாக அதீத தனிமனிதச் சார்பானது; பெரிதும் உள்நோக்கானது. எழுத்து காலகட்டத்திலிருந்து இப்பண்பு தொடர்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. தருமு சிவராமு, நகுலன் போன்றோர் இதன் துருவ முனைகள் எனலாம். (சிவராமு ஈழத்தவர் எனினும் அவரது இலக்கிய வாழ்வு தமிழகத்துக்கே உரியது.) வானம் பாடிக் குழுவினரே அங்கு கவிதைக்கு ஒரு சமூகச் சார்பைக் கொடுக்க முயன்றனர். ஆயினும் புனைவியல் பாங்கே(Romanticism) அவர்களிடம் மேலோங்கிக் காணப்படுகின்றது எனலாம்.



'பண்ணும் பரதமும்'- மேற்கு லண்டன் தமிழ்ப்பாடசாலை அளிக்கும் நாட்டிய நிகழ்ச்சி இம்மாதம் 17ஆம் தேதி மாலை 6.30 மணிக்கு அக்டன் நகர மண்டபத்தில் நடைபெறுகிறது. பட்டம் பெற்ற நர்த்தகிகள் பலர் ஒன்றிணைந்து அளிக்கும் ஒரு நிகழ்ச்சி இது.

ஈழத்து நவீன தமிழ்க் கவிதைகளின் பிறிதொரு முக்கிய பண்பு அதன் ஸ்தூலத் தன்மையாகும் (Concreteness). திட்டவட்டமானதாக, நேரடியான பொருட் புலப்பாடு உடையதாகக் கவிதைகள் அமைவதையே நாம் ஸ்தூலத் தன்மை என்று குறிப்பிடுகின்றோம். ஸ்தூலமான கவிதைகள் எளிதில் புரிந்துகொள்ளத் தக்கவையாகவும், வாசகனது உணர்வில் நேரடியாகத் தைக்கக்கூடியவையாகவும் உள்ளன. இத்தகைய கவிதைகள் கவிஞன் தனக்குத் தானே பேசிக்கொள்பவையாக அமைவதில்லை. அவை வாசகனுடன் பேசுகின்றன. கவிஞனின் அனுபவத்தை அவனது உணர்வை எளிதில் வாசகனுக்குள்ளும் இறக்கிவிடுகின்றன. இதனால் கவிஞனுக்கும் வாசகனுக்கும் இடையே எளிமையான, அதேவேளை வலிமையான செய்திப் பரிமாற்ற சாதனமாகவும் அவை அமைந்து விடுகின்றன. பெரும்பாலான கவிதைகள் உண்மையான, அன்றாட வாழ்க்கை அனுபவத்துடன் உறவுடனவையாக இருப்பதும், அன்றாட வழக்கில் உள்ள இயல்பான மொழியமைப்பைப் பயன்படுத்துவதும் இதன் காரணமாகலாம். ஆயினும் 'இருண்மை'ப்பண்புடைய (Obscurity) அல்லது இலகுவில் பிடிபடாத் தன்மையுடைய கவிதைகள் இங்கு எழுதப்படாமலும் இல்லை. இத்தொகுப்பிலுள்ள நீலாவணனின் பனிப்பாலை, சண்முகம் சிவலிங்கத்தின் வெளியார் வருகை ஆகிய கவிதைகளை இதற்கு உதாரணமாகத் தரலாம். ஆயினும், இத்தகைய வெளிப்பாட்டு முறைகள் ஈழத்துக் கவிதைகளில் ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகின்றன.

மறுதலையில் இன்றையத் தமிழகக் கவிதை பெரும்பாலும் சூக்குமமானது (Abstract) எனலாம். பிடிபடாத்தன்மை அல்லது இருண்மை இவற்றின் பொதுப் பண்பாகக் காணப்படுகின்றது. கவிதை மொழியிலே தற்போக்கான அம்சங்களை (Idiosyncratic features)- தனியாளுக்குரிய (Private) குறியீடுகள், படிமங்கள் போன்றவற்றை- அதிகம் கையாள்வது இதன் முக்கிய காரணம் எனலாம். அதீத தனிமனிதவாதமும், அகநோக்கும் இதனை நிர்ணயிக்கின்றன போலும். சமூகச் சார்புடைய அல்லது புறநோக்கான கவிதைகள் எழுதும் வானம்பாடிக் குழுவினர் கூட, சிலர் விதிவிலக்காக, இத்தகைய மொழிக் கூறுகளையே பயன்படுத்துகின்றனர். சற்று டாம்பீகமான மொழிப்பயன்பாட்டினால் செயற்கையான அல்லது சாதாரண வழக்கில் இருந்து முற்றிலும் வேறான மொழிநடை ஒன்றையும் உருவாக்குகின்றனர். இவை அவர்களது கவிதைகளுக்கும் ஒரு சூக்குமத் தன்மையைக் கொடுத்து விடுகின்றன. ஆனால், ஈழத்துப் பிடிபடாக் கவிதைகள் கூட இயல்பான மொழி நடையிலேயே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கூறுவதன் மூலம் இன்றையத் தமிழகக் கவிதை முழுவதுமே சூக்குமமானது என்று நாம் கருதுவதாகக் கொள்ளக்கூடாது. ஆனால் அதுவே ஆதிக்கப்பண்பு எனல் தவறாகாது.

இந்தச் சிறு அறிமுகத்தில் சமகால ஈழத்துக் கவிதையையும் தமிழகக் கவிதையையும் ஒப்புநோக்கி ஆராய்வது எமது நோக்கமல்ல. எனினும் இன்றைய ஈழத்துக் கவிதையின் தனித்துவமான சில அம்சங்களை இனங்கண்டு கொள்வதற்கு இத்தகைய சில குறிப்புகள் பயன்படக் கூடும் என்றே கருதுகின்றோம். ஆனால், இரண்டு கவிதைப் போக்குகளிலும் எது சிறந்தது என்று மதிப்பிட நாம் முன்வரவில்லை. இரண்டும் வேறுபட்ட போக்குகள் என்பதைப் புரிந்து கொண்டால் இப்போதைக்குப் போதுமானது.

இத்தொகுப்பிலே ஒவ்வொரு கவிஞரது படைப்பாக ஐந்து கவிதைகள் மட்டுமே தரப்பட்டுள்ளன. இவைதான் அவ்வக் கவிஞர்களின் சிறந்த படைப்புகள் என்று கருதத் தேவையில்லை. முடிந்தவரை ஒவ்வொரு கவிஞரதும் பன்முகப்பட்ட கவிதைப் போக்கை எடுத்துக்காட்டும் வகையிலேயே வெவ்வேறு வகையான கவிதைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. 1960க்கு முன்னர் எழுதத் தொடங்கியவர்களிடம் இருந்தும் 60க்குப் பின்னர் அவர்கள் எழுதிய கவிதைகளே இத்தொகுப்பில் தரப்பட்டுள்ளன. அவ்வகையிலே கடந்த இருபது ஆண்டு காலத்தில் ஐந்து தலைமுறைகளைச் சேர்ந்த ஈழத்துக் கவிஞர்கள் பதினொருவரின் பன்முகப்பட்ட கவித்துவ வெளிப்பாடுகளின் ஒரு சிறு பகுதியையே இத்தொகுப்பு உள்ளடக்குகின்றது. இன்றைய ஈழத்துக் கவிதையை அறிந்துகொள்ள விரும்புவோருக்கு இது ஒரு நுழைவாயிலாக அமையும் என்பது எமது நம்பிக்கை.

# இசைப் பேரறிஞர்



(சென்னை)

தமிழ் இசைச் சங்கம் ஆண்டுதோறும் சிறந்த இசைக்கலைஞர்களுக்கு 'இசைப் பேரறிஞர்' என்ற சிறப்புப் பட்டம் அளித்து கௌரவித்து வருகிறது. டிசம்பர் மாதம் நடைபெறும் இசைவிழாவின் போது இந்தப் பட்டம் வழங்கப்படும். இந்த ஆண்டு இசைப் பேரறிஞர் பட்டம் பிரபல இசைக் கலைஞர் கே.ஜே.ஜேசுதாசுக்கு வழங்கப்பட விருக்கிறது.

# நவாப் ராஜமாணிக்கம் நினைவு விழா

(சென்னை)

தமிழகத்தில் மிகப்பெரிய நாடகக் கம்பெனியை வைத்து தொடர்ந்து 40 ஆண்டுகள் நாடகங்களை பிரமாண்டமான செட் அமைப்புகளுடன் நடத்தி "நாடக சக்கரவர்த்தி" என்று பெயர் பெற்றவர், நவாப் ராஜமாணிக்கம்பிள்ளை. தேசபிதா மகாத்மா காந்தி பார்த்த ஒரே தமிழ் நாடகம் நவாப் ராஜமாணிக்கத்தின் "நந்தனார்" நாடகம் ஆகும். நாடக உலகில் மாபெரும் சாதனை புரிந்த நவாப் ராஜமாணிக்கத்துக்கு நினைவு விழா சென்னையில் நடைபெற இருக்கிறது. இதற்காக நடிகர் எம்.என்.நம்பியார் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஆர்.எஸ்.மனோகர் செயலாளராகவும், டி.கே.மாரியப்பன் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



www.tamilarangam.net

www.tamilarangam.net

# மன்றத்தில் ஒலித்த......

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நாயகம் அவர்களுக்குமிடையிலே ஒப்பந்தம் கையெழுத்தானது.

உண்மையிலே அந்த ஒப்பந்தத்தை எழுத்திலே போட்டு இரு தலைவர்களும் கையெழுத்திட வேண்டுமென்று கூறியவர் இன்றை சனாதிபதி திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தன அவர்கள். டொக்டர் எம்.வீ.பீ.பீரிஸ் அவர்களுடைய வீட்டிலே நாம் சந்தித்து இந்த பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். அந்த ஒப்பந்தத்திலே தமிழ்மொழி உரிமையைப் பற்றிச் ட்ட விதிகளைக் கொண்டு வருவதுக்கும் தமிழிலே இலங்கை முழுவதிலும் கருமம் ஆற்றுகின்ற உரிமைக்கு வழிவகுப்பதற்கும் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து பிரதமர் திரு டட்லி சேனநாயக்க அவர்களின் தலைமையிலான தேசிய அரசாங்கத்திலே நாமும் சேர்ந்தோம். அந்த அரசாங்கம் 1966ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் தேதி தமிழ்மொழி உபயோகம் பற்றிய சட்டவிதிகளை இச் சபையிலே கொண்டு வந்தது. அதை இந்தச் சபையிலே சமர்ப்பித்து பேசியவர் இன்று சனாதிபாதியாக இருக்கின்ற திரு ஜே.ஆர்.ஜயவர்த்தன அவர்கள்தான்.

## அமுலுக்கு வராத சட்டவிதிகள்

ஆனால் அப்பொழுது எதிர்க் கட்சியிலே இருந்தவர்கள் அதை எதிர்த்து ஒரு ஊர்வலத்தை நடத்தினார்கள். அப்பொழுது கொள்ளுப்பிட்டியிலே பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவேண்டியேற்பட்டது. அதனால் ரதனசார தேரோ என்ற பௌத்த பிக்கு உயிரிழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அந்த நெருக்கடிக்கு மத்தியிலும் அந்த அரசாங்கம் அச்சட்ட விதிகளை நிறைவேற்றியது அன்று. ஆனால், 1966ஆம் ஆண்டு அவ்வளவு நெருக்கடியிலே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்ட விதிகள், இற்றை வரை அமுலுக்குக் கொண்டவரப்படவில்லை என்பதை நான் இங்கே மிகவும் துக்கத்துடனும்

> 1958ஆம் ஆண்டில் இந்த நாட்டில் வதப்புக் கலவரம் தலைவிரித்தாடியது. இந்த நாட்டில் இன்னொரு 1958ஆம் ஆண்டு இனி மேல் வாராது என்று தமிழ் மக்கள் நினைக்கக் கூடிய அளவுக்த தமிழ் மக்கள் தாக்கப்பட்டார்கள். அது ஒரு புதிய கதை அல்ல. இன்றைக் தத் தமிழ் இளைஞர்களிற் சிலர் தீவிரமாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதற்த அன்றைய அந்தப் பின்னணியே கரான மாதம்.

வேதனையுடனும் கூறி வைக்க விரும்புகிறேன். 12 வருடங்களாக அவை செயலற்றிருந்தன. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மாறி, மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் அத்தனகல்லை அங்கத்தவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் தலைமையிலே 1970ம் ஆண்டு ஆட்சி பீடமேறியதும் அந்தச் சட்டவிதிகள் செல்லுபடியற்றவை என்று கூறிவிட்டார்கள். மிகவும் கஷ்டத்தின் மத்தியிலே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்ட விதிகள் 12 வருடங்கள் செயற்படுத்தப்படவில்லை. இவ்வளவு காலத்துக்குப் பின்னர் இப்பொழுது இந்த அரசியல் அமைப்பிலே தமிழ்மொழி உரிமை பற்றிச் சில விதிகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

கௌரவ சபாநாயகரவர்களே, இவ் விதிகளை ஏட்டிலே போட்டு விட்டால் மட்டும் போதும் என்று யாரும் நினைத்துவிட முடியாது. எமது அனுபவம் அதற்கு மாறாக இருக்கிறது. "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது" என்று தமிழிலே ஒரு பழமொழி இருக்கிறது. வெறுமனே சட்டங்களை ஆக்குவதனால் மாத்திரம் மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்த முடியாது. சட்டங்கள் சரியான முறையில் அமுல் நடத்தப்படவேண்டும். நான் ஒன்றை இச்சந்தர்ப்பத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். தமிழ்மொழி உபயோகம் பற்றிய அரசியல் அமைப்பு விதிகள் அமுல் நடத்தப்படுவதற்கு ஏற்ற துணைவிதிகள் எதுவும் இந்த அரசியல் அமைப்பில் இல்லை. உதாரணமாக உத்தியோக மொழி, நிர்வாக மொழி பற்றிய சட்டத்தை நடத்த வேண்டியவர்கள் உத்தியோகத்தர்கள். தமிழில் கருமமாற்றும் உரிமை உண்டு என்று சட்டத்தில் எழுதி வைத்து விட்டால் போதாது. காரியாலயத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்குத் தமிழ் தெரிந்திருக்க வேண்டும். காரியாலய ஊழியருக்குத் தமிழ்மொழி தெரிந்தால்தான் அதை அவர்களால் நிறைவேற்ற முடியும். ஆனால், அரசியல் அமைப்பிலே எந்த உத்தியோகத்தரையும் தமிழ்மொழியைக் கற்குமாறு கேட்பதற்கு எந்தவிதமான விதியும் இல்லை. அதற்கு மாறாக தமிழ்மொழி மூலம் தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர் உத்தியோக மொழியாகிய சிங்களத்தைக் கற்க வற்புறுத்தி அரசியல் அமைப்பிலே விதி இடம் பெற்றிருக்கிறது. எந்த உத்தியோகத்தரும் தமிழ் தெரிந்திருக்க வேண்டும் என்று கேட்க விதி இல்லாத இடத்து யார் இந்தச் சட்டத்தை அமுல் நடத்தப் போகிறார்கள்? உண்மையில் நடைமுறையில் இது உயிர் அற்ற ஒரு சட்டமாக இருக்கும் ஆபத்து உண்டென்பதைக் கடந்தகால அனுபவத்தைக் கொண்டு எமது மக்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

## கற்பனை அல்ல

கௌரவ சபாநாயகர் அவர்களே, இதை நாம் மிகவும் பொறுப்பு உணர்ச்சியோடு, இந்த நாட்டில் நாம் அடைந்த வேதனைதரும் அனுபவத்தைக் கொண்டு கூறுகிறோம். ஒரு தமிழ்மகன் அனுராதபுரத்திலோ தென்னிலங்கையிலோ உள்ள ஒரு கச்சேரியில், "எனக்குத் தமிழில் கருமமாற்ற உரிமையுண்டு; எனக்குத் தமிழ்ப் படிவம் தா; தமிழில் நிரப்பித் தரப்போகிறேன்" என்று கூறுகிறான் என்று வைத்துக் கொள்வோம். இற்றைக்கு நாடு இருக்கும் சூழ்நிலையில் அத்தகைய ஒருவர் உயிருடன் வீடு போவாரா என்று சொல்லமுடியாது. இது வெறும் கற்பனைஅல்ல. அதனால்தான் நான் கூறுகிறேன் ஏட்டிலே ஒரு சில உரிமைகளை எழுதி வைத்தால் மட்டும் போதாது என்று. இவ்வளவு காலமும் தனிச் சிங்களக் கொள்கையை எதிர்த்துப் போராடியதன் விளைவாக இந்த அரசியல் அமைப்பிலே ஓரளவு பலன் அளிக்கப்பட்டிருந்தாலும் இதனால் மாத்திரம் எமது மொழி உரிமை ஊர்ஜிதப்படுத்தப்பட்டதாக இல்லை. அதுமாத்திரமல்ல; இந்த அரசியல் அமைப்பை நீதி சமத்துவம் என்ற தத்துவ அடிப்டையில் ஆக்கி இருப்பதாகக் கௌரவ பிரதமர் கூறினார். நான் கேட்கிறேன், சமத்துவம் எங்கே இருக்கிறது? இந்த அரசியலமைப்பிலே 18ஆவது விதி கூறுகிறது, இலங்கையின் உத்தியோக மொழியாக சிங்களம் இருக்கும், என்று. 9ஆவது விதி கூறுகிறது, இலங்கைக் குடியரசு பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளிக்கும். அதற்கேற்ப, பௌத்த சாசனத்தை பாதுகாத்து பேணுவது அரசின் க்டமையாகும் அதேவேளை, விதிகள் 10, 14இல் வழங்கப்பட்ட உரிமைகள் ஏனைய மதங்களுக்கு உறுதியளிக்கப்படும். விதிகள் 10இன் கீழும் 14(ஈ) யின் கீழும் மற்றைய மதத்தவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற உரிமை, தத்தம் மதங்களை அனுஷ்டிக்கின்ற உரிமை அரசாங்கத்தால் பேணி வளர்க்கப்படுகின்ற உரிமை. அந்த உரிமை மற்றைய மதங்களுக்கு இல்லை. கிறிஸ்தவ மதத்துக்கு அந்த உரிமை இல்லை. சைவ மதத்துக்கு இல்லை. இஸ்லாமிய மதத்துக்கு இல்லை. எங்கே இருக்கிறது சமத்துவம்?

## எது சமத்துவம்?

சிங்களமொழி மாத்திரம் அரசாங்க மொழி. தமிழ் மொழி ஒரு தேசிய மொழி. சில உரிமைகளுக்கு மாத்திரம் உபயோகிக்கப்படுகிற மொழி. சமத்துவம் என்று கூறும்பொழுது எண்ணிக்கையில் சமத்துவத்தை நான் குறிப்பிடவில்லை. ஆனால் நிலையிலே குணத்திலே, பண்பிலே சமத்துவத்தைத் தான் நான் குறிப்பிடுகிறேன். அந்தச் சமத்துவம் எங்கே இருக்கிறது?

நேற்றைய தினம் கௌரவ பிரதமர் அவர்கள் பேசும்பொழுது ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற தேசியக்கொடிக்கு ஒரு திருத்தத்தைக் கொண்டு வரும் எண்ணத்தை கூறினார்கள். அந்தக் கொடியின் நாலு மூலைகளிலும் அரசிலை இடம் பெற வேண்டுமென்ற வற்புறுத்தலினால் அதற்கு அரசாங்கம் செவி சாய்த்து அந்தக் கொடியை அந்த வகையிலே மாற்ற இருப்பதாக அவர் எடுத்துக் கூறினார். அரசிலை அங்கே இடம்பெற வேண்டுமென்ற கோரிக்கைக்கு அடிப்படைக் காரணம் என்ன? பௌத்த மதத்தோடு தொடர்புடைய, பௌத்த மதத்தின் ஒரு சின்னமாகிய அரசிலை அந்தக் கொடியிலே இடம்பெற வேண்டுமென்ற அந்தக் கோரிக்கை தான் இங்கே இடம் பெற்றிருக்கிறது. அப்படியானால் எங்கே சமத்துவம்? பெரும்பான்மை மதத்தினர், பெரும்பான்மை மொழியைப் பேசுவோர் எதைக் கேட்டாலும் அதற்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற நிலை இருந்தால் சமத்துவம் எங்கே இருக்கிறது என்று தான் நான் கேட்கிறேன்.

கௌரவ பிரதமர் அவர்கள் சமத்துவம் நீதி ஆகியவற்றின் அடிப்படையிலேதான் தான் இயங்குவதாக் குறிப்பிட்டார்கள். ஆனால், சமத்துவம் இடம்பெறவில்லை என்பதைக் காட்டத்தான் நான் இவற்றைக் குறிப்பிட நேரிட்டது. இந்த நாட்டிலேயுள்ள பல்வேறு மதங்களுக் கிடையில் சமத்துவம் இல்லை. இந்த நாட்டிலேயுள்ள பல்வேறு மொழிகள் இனங்களுக்கிடையில் சமத்துவம் இல்லை என்பதைக் காட்டத்தான் நான் இவற்றை எடுத்துக் கூறினேன்.

கௌரவ சபாநாயகரவர்களே, ஆளும் கட்சி தன்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலே இந்த நாட்டில் தமிழ் மக்களைப் பாதிக்கின்ற பிரச்னைகள் சிலவற்றை இனங்கண்டு குறிப்பிட்டிருக்கிறது. அவற்றிலே ஒன்று, முக்கியமாகக் குடியேற்றம் பற்றியது. பாரம்பரியமாக ஒரு மொழியைப் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்ற பிரதேசத்திலே வேற்றுமொழி மக்களைத் திட்டமிட்டுக் குடியேற்றி அங்கே வாழ்கிற மக்களைச் சிறுபான்மையினராக்கி அவர்களுக்கு அரசியலுரிமை, வேறு பாதுகாப்பு இல்லாத ஒரு நிலை ஏற்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைத்தான் 1956ஆம் ஆண்டுக்கு முன்னர் தொடக்கம் நாங்கள் முன்வைத்து வந்தோம். இதையொட்டிக் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்க அவர்களோடு எங்கள் தலைவர் செய்த ஒப்பந்தத்தில் சில தெளிவான முடிவுகளுக்கு வந்தோம். 1957ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26ஆம் தேதி கையெழுத்தான அந்த ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்னவென்றால், "குடியேற்றத்திட்டங்களைப் பொறுத்தவரையில் பிரதேச சபைகளின் அதிகாரம் அப்பிரதேசத்தில் யாருக்கு காணிகளை வழங்குவது என்பதைத் தீர்மானிப்பதோடு அத்திட்டங்களில் பணிபுரிவதற்கான உத்தியோகத்தர்களை தெரிவுசெய்யும் அதிகாரத்தையும் கொண்டிருக்கும்.கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தற்போது நிருவகிக்கப்படும் பகுதிகள் தொடர்பாக கவனஞ்செலுத்தப்படல் வேண்டும்" இதுதான் அந்த ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டது. அதன் பின் அதையொட்டி ஏற்பட்ட ஒரு கிளர்ச்சியின் காரணமாக அதிலே சில மாற்றங்கள் செய்த நேரத்தில் காலஞ்சென்ற பண்டாரநாயக்க அவர்கள் 16.8.57இல் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதிலே அவர் எந்த நீதியான அரசாங்கமும் இந்த விஷயத்தில் கைக்கொள்ள வேண்டிய ஓர் அடிப்படைக் கொள்கையைத் தெளிவுறுத்தினார்.

"குடியேற்றத் திட்டம் என்பது வடக்கு கிழக்கு மாகாணங்களை சிங்கள பெரும்பான்மை பிரதேசமாக மாற்றுவதற்கோ அல்லது வேறு ஏதாவது விதத்தில் தமிழ் பேசும் மக்களை பாதிப்படையச் செய்வதற்கோ ஒரு கருவியாக பயன்படுத்தப்படக்கூடாது". இது 16.8.57இல் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்க அவர்கள் ஏற்றுக் கொண்ட ஒரு கொள்கை. ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களான கௌரவ டட்ளி சேனாநாயக்க அவர்களும் கௌரவ ஜே.ஆர். ஜயவர்த்தன அவர்களும் 1965ஆம் ஆண்டு திருவாளர் செல்வநாயகம் அவர்களோடு எழுதிய ஒப்பந்தத்தில் இதை ஏற்றுக்கொண்டனர். இதை இங்கு பின்வரிசை உறுப்பினர்கள் அறிவதற்காக வாசித்துக்காட்ட விரும்புகிறேன். வடக்கு,கிழக்கு மாகாணங்களில் குடியேற்றத்திட்டங்களின்கீழ் காணிகளை வழங்குகையில் கீழ்க்காணும் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று திரு டட்லி சேனநாயக்க மேலும் ஒப்புக்கொண்டார்:

(1). வடக்கு, கிழக்கு மாகாண காணிகள், காணி அற்ற அப்பிரதேசத்தவர்களுக்கே முதலில் வழங்கப்படவேண்டும்.

(2). இரண்டாவதாக, வடக்கு கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும்;

(3). மூன்றாவதாக, இலங்கையின் ஏனைய பிரசைகளுக்கும், அதிலும் ஏனைய பகுதிகளில் வசிக்கும் தமிழ் பிரசைக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இதுதான் கௌரவ டட்லி சேனாநாயக்க அவர்களும் திருவாளர் செல்வநாயகம் அவர்களும் குடியேற்றத்தைப்பற்றி 1965ஆம் ஆண்டு ஒப்புக்கொண்ட கையெழுத்திட்ட உடன்படிக்கை. ஆனபடியால் இந்த நாட்டிலேயுள்ள இருபெரும் கட்சிகளின் தலைவர்களும் ஏற்றுக் கொண்ட அடிப்படையை மறந்த விடயங்கள் நடைபெற்றுவருவதாலேதான் இந்த நாட்டிலே தமிழ்பேசும் மக்கள் இன்று மிகவும் வேதனையடைந்த நிலையில் இருக்கிறார்கள். இந்த நாட்டின் எந்தப் பகுதியிலும், எந்த இடத்திலும் தாம் பயமின்றி, எந்தவிதமான தாக்குதலிலிருந்தும் தப்பித் தஞ்சம் புகுந்து வாழ ஒரு பகுதி தமக்கு இல்லாமல் போய் விடுமோ என்ற ஏக்கம் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனாலேதான் அரசாங்கம் தேர்தல் விஞ்ஞாபனத்திலே இந்தக் குடியேற்றம் பற்றித் தமிழ்பேசும் மக்கள் மனதிலே இருக்கின்ற அச்சம் தீர்க்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறது. ஆனால் அந்த அச்சத்தைத் தீர்ப்பதற்கான வழிவகைகளையோ அந்த அச்சத்தைத் தீர்ப்பதற்கான எந்த விதமான திட்டங்களையோ இந்த அரசியலமைப்பிலே காண முடியாமலிருக்கிறது. அதற்கு அடிப்படையாக இருக்க வேண்டிய எந்த அம்சமும் இங்கே இடம்பெறாதது மிகவும் வேதனையைத் தருகின்றதென்பதை இங்கே கூறிவைக்க விரும்புகிறேன்.

கௌரவ சபாநாயகரவர்களே, இந்த அரசியலமைப்பிலேயுள்ள வேறு பல விடயங்களை எடுத்துக்கூற வேண்டியிருந்தாலும் அடிப்படை உரிமைகள் பற்றிய விடயங்களையும் ஏனைய விடயங்களையும் ஆங்கிலத்திலே பேசுகின்றபொழுது எடுத்துக்கூற விரும்புகிறேன். எனது தமிழ்ப் பேச்சை முடிக்கு முன்னர் நான் கூற விரும்புவது ஒன்றே ஒன்றுதான். தமக்குக் கிடைத்த மக்கள் கட்டளையின் பிரகாரம் இந்த யாப்பை யாத்துள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது. எம்மைப் பொறுத்தவரையிலே எமக்குக் கிடைத்த எமது மக்களின் கட்டளையின் அடிப்படையிலே இந்த அரசியல் யாப்பை ஏற்றுக் கொள்ளவோ இந்த அரசியல் யாப்பை நிறைவேற்ற உடந்தையாக இருக்கவோ எமக்கு உரிமையில்லை. இந்த யாப்பு எமது மக்களைக் கட்டுப்படுத்தக் கூடியதல்ல. நான் ஆரம்பத்திலே கூறியது போல இன்றைக்கு நடைமுறையிலே இருக்கின்ற அரசியல் யாப்பு எப்படி எமது மக்களுடைய சம்மதத்தோடு கொண்டுவரப்படாத காரணத்தால் எம்மைக் கட்டுப்படுத்தாது என்று நாம் நீதிமன்றத்திலே வாதாடினோமோ அதே போல இந்த அரசியல் யாப்பைப் பொறுத்த வரையிலும் எமது நிலையை நான் தெளிவாக எடுத்துக்கூற கடமைப் பட்டவனாக இருக்கின்றேன்.

இந்த யாப்பிலே சில சில விடயங்கள்-உதாரணமாக குடியுரிமை விடயத்திலே பதிவுப் பிரசைக்கும் வம்சாவளிப் பிரசைக்குமுள்ள வித்தியாசம் போன்றவை நீக்கப்பட்டதை நான் குறைத்துக் கூறவில்லை. ஆனால், எமது அடிப்படை நிலை மாற்றப்படவில்லை. இந்த நாட்டிலே இரு தேசிய இனத்தினர் வாழ்ந்து வருகிறார்கள். பரம்பரையாக வாழ்ந்து வருகின்றனர். அந்நிய ஆதிக்கத்தின் கீழ் நாம் அடிமைப் பட்டு இருந்த நேரத்திலே தனித் தனியாக அடிமைப்பட்டோம். இந்த நாட்டிலே தமிழ் மக்களுடைய அரசை 1619ஆம் ஆண்டிலே தனியாகத்தான் போர்த்துக்கீசர் வெற்றி கொண்டார்கள். அதற்கு அவர்கள் கூறிய காரணம், அவர்களினால் இங்கே தாக்கப்பட்டுக் கொண்டிருந்த கண்டி மன்னனுக்கு உதவியாக இந்தியாவிலேயிருந்து படைகள் வருவதற்கு யாழ்ப்பாண அரசன் உதவி செய்கிறான் என்பது.

இவ்வாறு தாக்கி அவனை வெற்றி கொண்டார்கள். போத்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தர் யுத்த முனையிலே எமது ஆட்சியைக் கைப்பற்றினார்கள். ஒல்லாந்தரிடமிருந்து ஆங்கிலேயர் 1796ஆம் ஆண்டு யுத்தத்தினால் எமது பிரதேசத்தின் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். ஆங்கிலேயர்தான் முதல் முதலாக 1833ஆம் ஆண்டிலே இந்நாட்டிலே தமிழ் பேசும் மக்களுடைய பிரதேசங்களை- வடக்கு, கிழக்குப் பிரதேசங்களை -ஒரே நிருவாகத்தின்கீழ் கொண்டு வந்தார்கள். ஆங்கிலேயர் எம்மை ஒரே நிர்வாகத்தின்கீழ் அடிமைத் தளையின் கீழ் கொண்டு வந்ததால் எமது தனி உரிமை அழிந்து ஒழிந்துபோய்விடவில்லை. நாட்டிற்குக் கிடைத்த சுதந்திரம் எமக்கும் கிடைத்திருக்க வேண்டும். அதற்குப் பதிலாக ஜனநாயகத்தின் பேரால் பெரும்பான்மை என்ற போர்வையில் ஒரு பகுதி மக்களின் கையிலே அரசியல் அதிகாரம் சென்றடைய அவர்கள் தயவில் தங்கி இருப்பவர்களாக எவ்வித உரிமையுமற்றவர்களாக தமிழ் தேசிய இனம் ஆக்கப்பட்டிருக்கிறது. தமிழ் தேசிய இனம் புதிதாக எதையும் கேட்கவில்லை. தமக்கு உரித்தான ஆட்சி உரிமையைத்தான் தமிழ் தேசிய இனம் கேட்கிறது. எமது பாரம்பரிய பிரதேசத்தில் எமது மக்கள் வாழ்ந்து வந்த பூமியில் எம்மை நாம் தொடர்ந்தும் ஆள நாம் சுதந்திரம் உள்ள மக்களாக வாழ உள்ள உரிமையைத்தான் நாம் கேட்டு நிற்கின்றோம். அதற்கு உத்தரவாதம் இந்த அரசியல் அமைப்பிலே இல்லை. அதனால்தான் இந்த அரசியல் அமைப்பை நாம் ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம்.

அது மாத்திரமல்ல எமது மக்கள் ஒரு தேசிய இனத்திற்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமது சுயநிர்ணய உரிமையை உபயோகித்து தம்மைத்தாம் ஆளவும் ஒரு சுதந்திர தமிழ் ஈழத்தை நிறுவவும் வேண்டுமென்று எமக்குக் கட்டளை இட்டிருக்கிறார்கள். அந்தக் கட்டளைப்படி பணிபுரிவது எமது கடமை. இந்த நிலையை நான் மிகத் தெளிவாக இங்கு எடுத்துக் கூறுகிறேன்.

(முற்றும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# சொற்சதுரங்கம் 6

தொகுத்தவர் : ஜனா

அக்டோபர் 23ந் திகதிக்கு முன் கிடைக்கும் விடைகளில் முதலாவதாக எடுக்கப்படும் சரியான விடைக்குப் பரிசு 60 பவுண்டுகள்

(சொற்சதுரங்கம்-5க்கும் எந்த ஒரு வாசகரும் சரியான விடையளிக் காததனால் சொற்சதுரங்கம்-6க்கானபரிசுஅதிகரிக்கப்பட்டுள்ளது.)



உங்கள் முகவரி

பெயர் :......................................................

முகவரி :......................................................

......................................................

......................................................

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி

சொற்சதுரங்கம்-6

**THAMIZHOSAI**
253 WESTERN AVENUE
LONDON W3 0PP

*இடமிருந்து வலம்:*

1. நானிலம் போற்றும் நவராத்திரி நாயகி.(5)
3. பண்டசாலை.(6)
7. அறியாமை என்பதற்கு வள்ளுவன் வழங்கும் சொல்.(3) (தலைகீழ்)
8. துளி.(3)
10. தலை ஆயர் எண்ணரும் பெண்ணை போன்று- மூலம்: நாலடியார்.(2)
11. வாசவர் விற்பது- மூலம்: சிலப்பதிகாரம்.(6)
14. அறிவிலும், உருவத்திலும், ஆராய்ந்து கற்ற கல்வியிலும் செறிவினை உடையவனாக விளங்குபவனே இதைச் செய்யலாம்.(2)
15. வெண்பா.(3)
16. அழகிய நளினத்திற்கு அழகிய சொல்.(5)
18. கயவாய் என்று சிலம்பும், பொன்னி புனல் நாடு பெயர் போனது என்று தமிழ் மூதாட்டியும் கூறியது.(3)
19. அங்காடி.(2) (தலைகீழ்)
20. திருவற்றவர் செய்வது.(3)
21. நால்வகை படைகளில் ஒன்று.(2)
22. பலம் பொருந்திய.(2) (தலைகீழ்)
23. செருக்குள்ளவர்.(3)
25. அவ்வினம் சார்ந்தவர்க்கு.(5)
28. அங்கி என்றது நளவெண்பா- நாம் ஒரு எழுத்தால் குறிப்பிடுகிறோம்.(1)
29. "செல்வத்துட் செல்வம்" என்றார் வள்ளுவப்பெருந்தகை.(3)
30. பண்டிகைக் கால பதார்த்தம்.
31. சோகரசத்தை பிரதிபலிக்கும் ராகம்.(3)
32. எல்லாம் இசைந்து விட்டது என்பதைக் குறிக்கும் சொல்.(2)
33. கமம் சார்ந்த.(3)
34. ஆட்டுவணிகர் என்று கூறுகிறது சிலப்பதிகாரம்.(8)
36. வடமதுரை மைந்தனை தூயபெருநீர் யமுனை துறைவனை அழைப்பது ஆண்டாள் அரங்கத்தில்!.(3) (தலைகீழ்)



தமிழ்க் கத்தோலிக்க பணியக அங்குரார்ப்பண வைபவத்தில் தீபநடனம் ஆடும் சிறுமியர்

*மேலிருந்து கீழ்:*

1. திவ்விய பிரபந்த முதலாயிரம்.(8)
2. வலஞ் செயாக் கழியும் இலஞ்சி மன்றமும்- என்பதில் இலஞ்சி குறிப்பிடுவது.(2)
3. பண்டிகைக்கால பதார்த்தம்.(3)
4. ஒரு ராஜா ராணியிடம் இருநோக்கு இவளுண் கண் உள்ளது என்று வள்ளுவர் வாக்கை கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடுகிறார்.(4)
5. தொழிலாற்றும் உழவர்களின் தொழிலை- நெய்தல் அனையேம்! என்றது குறுந்தொகை.(3)
6. சார்ந்தவை.(2) (தலைகீழ்)
9. தலைமுறை.(3)
10. நாடே உரிமையுடையர்.(6)
12. தாழ் பணிதல்.(3)
13. திருவற்றவர் செய்யும் தொழிலில் ஒருவகை.(4) (தலைகீழ்)
14. எப்போதும் விழிப்பாயிருத்தல்.(4)
17. சோனகருக்கு இலக்கியப்பெயர்.(4)
18. இந்த மலர்களில் இருந்து உதிர்ந்த மகரந்தப் பொடிகளின் மீது படுத்து உறங்கும் எருமைகளின் கால் குளம்புகள் பொன்னை உரைக்கின்ற கல்லைப்போல் தோன்றுமாம்.(3)
23. முழு எலும்பைத் தரித்தவனைக் குறிப்பிடுகிறார் தமிழ் மூதாட்டி.(5)
24. முன் செய்தவை செயல்களாகின்றன.(4) (தலைகீழ்)
25. கிடைத்தற்கரிய.(2)
26. பொறிக்கு இன்னொரு இலக்கிய சொல்.(2)
27. வெய்யிலிலும் மழையிலும் மாளிகையிலும் அம்பலத்திலும் திறந்திருப்பது!.(2)
29. தாம் கேள்வியுற்ற மறைவான செய்திகளை பிறருக்குச் சுமந்து சென்று எடுத்துச் சொல்லும் செயல்.(3)
31. பல்லுக்கு இலக்கியச் சொல்.(2)
32. கல்யாண.(2)
33. அருகல்புல் பேர் போனது இதற்காக!.(2)
36. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் மனிதனுக்கு இதுவாகும்.(2) (தலைகீழ்)

## சொற்சதுரங்கம்-5 விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ | ளை | யா | ப | தி | | கோ | த | ண் | ட | சா | லை |
| ரு | | க | | ற | து | | ண் | | வ | ல் | லி |
| வி | சு | ம் | பு | | ப் | | ணி | அ | | வை | ஆ |
| ரு | | | ற | | பா | வ | ல | ன் | | | |
| ங் | | அ | ங் | ஙி | ய | | வு | றி | ண | ண் | ஙு |
| து | ற | ங் | தா | ர் | | மா | | ல் | | ப | னி |
| | | த | ர் | ம | ம் | | ரு | | அ | | க் |
| வ | ண் | ண | | ல | | வி | செ | ரு | பி | ம் | கொ |
| | க | ன் | ன | ம் | | ண் | | | மா | ட | ம் |
| வி | ல் | | த் | | வை | ண | | ம் | ன | த | ப |
| ல் | த | டி | வ | | ல | வ | ன் | | ம் | | ர் |
| க | மு | கு | | | க | ர் | வ | ம் | | பா | |

## ஸத்யஜித் ரே....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

ஆழமான மனிதாபிமானமும் அழகியலும் இணைந்ததுதான் இவரது படங்கள் என்கிறார் ஸியாம் பெனிகல்.

தாகூருக்கு அடுத்து இவர் மரணத்துக்குப் பின்னும் வங்காள மக்கள் அனாதைகள் ஆகாமல் தப்பித்திருக்கிறார்கள் என்றால் அதன் காரணம் அன்னை தெரசா இன்னும் உயிரோடுஇருக்கிறார் என்பது தான் என்கிறார் ஒரு விமர்சகர். கலைஞன் மட்டுமல்ல முழுமனிதனும் ரே.

ரேயை தனிப்பட்ட முறையில் தனக்குப் பிடித்தபடம் என்ன என்று கேட்கப்பட்ட போது 'சாருலதா' என்று சொன்னார்.

ஸத்யஜித் ரேயின் வாழ்க்கைச் சரிதத்தை எழுதிய ஆன்ட்ரு ராபின்சன்' எல்லாக் காலத்துக்குமான உலகின் மிகச் சிறந்த இருபது படங்களில் ஒரு படமாகச் சாருலதா திகழும்' என்கிறார்.

சாருலதா ஒரு குழந்தையில்லாத பெண்ணின் உலகம் குறித்த படம். வீடும் உலகமும் என்கிற மற்றொரு படத்தில் வரும் பெண்ணைப் போலவே குழந்தையில்லாத ஒரு பெண்ணைப் பற்றிய படம் இது.

இரண்டு படங்களுமே மகாகவி ரவீந்திரநாத் தாகூரின் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்ட திரைப்படங்கள்.

ஸத்யஜித் ரே பற்றி இக்பால் மசூத் எனும் திரைப்பட விமர்சகர் சொல்லும் போது இவ்வாறு சொல்கிறார்:

"ஸத்யஜித் ரேயை விட்டால் அவருக்கு அப்பால் தாகூர், காந்தி, சி.வி.ராமன் போன்றவர்களைத் தவிர வேறு எவரையும் என்னா[l] குறிப்பிட முடியவில்லை"

ஸத்யஜித் ரே தாகூரின் [illegible] கொண்ட தீராத காதலால் ரவீந்[illegible] நாத் தாகூரைப்பற்றி ஒரு டா[illegible] மெண் டரிப்படம் தயாாரித்திரு[illegible] கிறார். அவரது மற்றுமொரு குறிப்பிடத்தக்க டாக்குமெண்டரி நாட்டிய மேதை பாலசரஸ்வதியைப் பற்றின 'பாலா' எனும் படம்.

இந்தக் கட்டுரையில் அவரின் திரைப்படங்கள் பற்றிய விமர்சனமோ அறிமுகமோ நாம் செய்யவில்லை. அது மிகமிக நுட்பமான உன்னதமான ஒரு அனுபவம்.

அவரது மறைவு குறித்த சந்தர்ப்பத்தில் கோவிந்த் நிஹ்லானி சொன்னவார்த்தைகள்: "ஒரு திரைப்படத் தயாரிப் பாளள், இயக்குநர் எனும் அளவில் எனது உணர்வின் பரிணாமத்தை இவரது திரைப்படங்கள் தொடர்ந்து ஆளுமை செய்து வரும். நான் நினைக்கிறேன்: என்னளவில் ரேயின் படங்கள் என்பது அற்புதமான அழகியல் உணர்ச்சிக்கும் கலை ஒருமைக்கும் எடுத்துக் காட்டாக நிற்பவை...

... இவரது மனிதநேய தரிசனம் மற்றும் இவரது மிகநுட்பமான இசைத்தன்மை பொருந்திய பாணியானது முழுக்கவும் இந்திய சினிமாவில் தனித்தன்மை வாய்ந்த தொன்றாகும். மேலும் தனித்தன்மை வாய்ந்த விஷயம் என்னவென்றால் எந்தபிற இந்திய சினிமா இயக்குனரும் இவ்வவளவு அற்புதமான திரைப்படச் சாதனைகளைச் சிருஷ்டித்ததில்லை.

இவரது திரைப்படங்கள் உலக முழுமையிலும் அங்கீகரிக்கப்படுவதும் அனைத்து நாடுகளிலும் அம்மனிதன் கௌரவிக்கப்படுவதும், சினிமாவானது மொழி மற்றும் கலாச்சார எல்லைகளைத் தாண்டிச் செல்லவல்லது என்பதற்கு ஆதாரமாகும்."

கோவிந்த் நிஹ்லானி ஆக்ரோஷ், அர்த் ஸத்யா, தமஸ் போன்ற படங்களைத் தந்த இடதுசாரி இந்திய சினிமா இயக்குனர் ஆவார்.

1921 மே 2ஆம் நாள் கல்கத்தாவில் பிறந்து வங்காள மறுமலர்ச்சி யுகத்தின் கலைஞனான தாகூரின் சாந்தி நிகேதன் சூழலில் வளர்ந்து சர்வ தேசியக்கலைஞனாக வாழும் ஸத்யஜித் ரே எனும் மாபெரும் யுகமனிதனின் இதயம் 1992 ஏப்ரல் 23ஆம் நாள் 5.32லிருந்து 5.45க்குள் சிந்திப்பதை நிறுத்திக்கொண்டது.

ரே மூன்றாம் உலகின் ஜீவனுள்ள கலைஞன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் ராசிபலன் எப்படி?

**சோமசன்மா**

இங்கு தரப்படும் பலன்கள் சந்திரலக்கின கோசார பலன்கள். கோசாரபலன் என்பது ஒருவர் பிறந்த சமயத்தில் சந்திரன் எந்த ராசியில் இருந்தாரோ அந்த ராசியை முதலாக வைத்து, இப்பொழுது மற்றைய கிரகங்கள் எங்தெந்த வீட்டில் இருக்கிறார்கள் என்பதை வைத்துக் கணித்துப் பலன் சொல்வதாகும். உதாரணமாக, நீங்கள் பிறக்கும்போது அசுவினி நட்சத்திரம் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் சந்திரன் மேட ராசியில் இருக்கவேண்டும்.

ஒவ்வொரு கிரகமும் எத்தனையாவது வீட்டில் இருக்கிறார் என்பதை அறிந்து, அதன்படி பலன் சொல்ல வேண்டும்.

உங்களில் சிலருக்கு சந்திர லக்கினம் தெரியாமலிருக்கலாம். நட்சத்திரம் மாத்திரம் தெரியலாம். அப்படியானால், உங்கள் நட்சத்திரத்துக்குரிய ராசியைப் பின்வரும் அட்டவணை மூலம் தெரிந்துகொள்ளலாம்.

அசுவினி, பரணி,
கார்த்திகை முதல் கால்...................................................**மேடம்**
கார்த்திகை பின் முக்கால், ரோகிணி,
மிருகசீரிடம் முன்னரை...................................................**இடபம்**
மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை,
புனர்பூசம்
முன்முக்கால்...................................................**மிதுனம்**
புனர்பூசத்து நாலாங்கால்,பூசம்,
ஆயிலியம்...................................................**கர்க்கடகம்**
மகம், பூரம், உத்தரத்து
முதற்கால்...................................................**சிங்கம்**
உத்தரத்து பின்முக்கால், அத்தம்,
சித்திரை
முன்னரை...................................................**கன்னி**
சித்திரையின் பின்னரை, சுவாதி,
விசாகத்து முன்முக்கால்...................................................**துலாம்**
விசாகம் நாலாங்கால்,
அனுஷம்,
கேட்டை...................................................**விருச்சிகம்**
மூலம், பூராடம்,
உத்தராடத்து முதல்
கால்...................................................**தனு**
உத்தராடத்து பின்முக்கால், திருவோணம்,
அவிட்டத்து முன்னரை...................................................**மகரம்**
அவிட்டத்துப் பின்னரை, சதயம்,
பூரட்டாதி
முன்முக்கால்...................................................**கும்பம்**
பூரட்டாதி நாலாங்கால், உத்தரட்டாதி,
ரேவதி...................................................**மீனம்**



## மேடம்

திடீரென ஏற்படும் சரீர சுகவீனத்தைப்பற்றிக் கவலை வேண்டாம். எதிர் பாராத சில புதியவர்களின் உறவுதான் தீராத கவலையைத் தரும். அப்படியானவர்களைத் தவிர்க்கவும். இருந்தபோதும் எவரோ ஒரு நல்ல மனிதரும் உதவிக்கு வரக்கூடும். சகோதரர் வழியில் சில சலுகைகளை எதிர்பார்க்கலாம்.

அதிஷ்ட எண்.5



## இடபம்

வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் அதிக லாபத்தை எதிர்பார்த்தால் ஏமாற்றம்தான். உத்தியோகத்திலுள்ளவர்கள் லாபமடைவார்கள் என்று தெரிகிறது. பொதுவாக இந்த ராசிக்குரியவர்கள் லாபத்தையடையாவிட்டாலும் மன நிம்மதியும் பெறுவார்கள். பிரயாணம் இந்த நாட்களில் ஏற்றதல்ல என்று தெரிகிறது.

அதிஷ்ட எண்.6



## மிதுனம்

சாதாரண வியாதிகளிலொன்று தலையைப் பிடிக்கும் அல்லது வயிற்றைப் பிடிக்கும். இதில் வயிற்றைப் பிடிப்பதுதான் எதிர்பாராத விபரீதங்களை உண்டாக்கும் என்று சொல்வார்கள். இந்த ராசிக்காரர் எச்சரிக்கையாயிருப்பது நல்லது. பண வருவாய் குன்றக்கூடும். கால நிலை அப்படியென்று சமாதானப் படுத்திக் கொள்ளலாம். எதற்கும் தைரியத்தைக் கைவிட வேண்டியதில்லை.

அதிஷ்ட எண்.3



## கர்க்கடகம்

மணமுடித்த பகுதியிலிருந்து தேவையற்ற குறைகள் வாக்குவாதங்கள் சில குடும்பங்களில் ஏற்படுவதுண்டுதான். சமாளித்துக் கொள்ளத் தைரியமும் விவேகமும் தேவை. முக்கியமாக களத்திர சம்பந்தமானால் நைசாக நடக்க தெரிய வேண்டும். இடையிலுள்ளவர்களின் தலையீடுதான் சலிப்பைத் தரும். எதற்கும் திடமான மனம் காப்பாற்றும். குறைந்த காலத்துக்குத்தான் இந்த நிலை. சமாளித்துக்கொள்ளலாம்.

அதிஷ்ட எண்.4



## சிங்கம்

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பாராத லாபமோ உயர்வோ கிடைக்கும்போது தடுமாறாமல் ஏற்றுக்கொள்வது நல்லது. மனம் பேதலிக்கவும் இடமுண்டு. குடும்பத்தில் புதிய உறவு ஏற்படவும் அறிகுறிகள் காணப்படுகின்றன. குழந்தைகளின் படிப்பு விஷயத்தில் முன்னேற்றங்களைக் காணக்கூடும். பிரயாணம் இப்போது வேண்டியதில்லைத்தான். அந்த ஆசையைத் தள்ளிப்போடுவது நல்லது.

அதிஷ்ட எண்.7



## கன்னி

எல்லாக் குடும்பங்களும் ஒரு மாதிரி இருப்பதில்லைதான். எதிர் பாராத விதமான சுற்றத்தவர்களிடையே பகைமை ஏற்படலாம். பொருள்வழிச் சண்டைதான். பின்னர் மாற்றமடைய இடமுண்டு. புதியவர் ஒருவர் திடீர் உறவு ஏற்பட இடமுண்டு. அவசரப் பிரயாணம் ஒன்று எதிர்நோக்கலாம். சகோதரி வழியில் எதிர்பாராத துயரச் செய்தி வந்தால் தைரியத்தைக் கைவிடவேண்டாம்.

அதிஷ்ட எண்.2



## துலாம்

நீங்கள் சம்பந்தப்படாத ஒரு செயலைக் காட்டி உங்கள்மேல் குற்றம் சுமத்தினால் என்ன செய்ய முடியும். சிரித்துவிட்டுப் போங்கள். காலம் அப்படியிருக்கிறது. எதற்கும் அமைதியைக் கைவிடவேண்டாம். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள். வெளிநாட்டுக்குப் போவதற்கு அறிகுறிகள் இருந்தால் ஏற்றுக் கொள்ளலாம் என்று தெரிகிறது.

அதிஷ்ட எண்.5



## விருச்சிகம்

புதிதாக வாகனம் வாங்கக் கிடைத்தது லாபம்தான், ஆனால், செலவையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கத் தெரிய வேண்டுமே. அலைச்சல் அதிகம் என்று எல்லாரும் தான் குறைபட்டுக்கொள்கிறார்கள். காரணம் உங்களுக்கே தெரிய வேண்டும். அயல்தேசத்திலிருந்து புதிய நண்பர் ஒருவர் வரவிருக்கிறார். ஓரளவு சாந்தி கிடைக்கும். குழந்தைகள் முன்னேற்றமடைவார்கள். அதுவே சாந்திக்கு மருந்து.

அதிஷ்ட எண்.4



## தனு

எப்போ பார்த்தாலும் வீட்டுக்குள் முணுமுணுப்பு இருந்துகொண்டே இருப்பது எல்லா வீட்டிலும் அதே வாசற்படிதான். சிலர் இதைப் பெரிதாக்கிக் கொள்வார்கள். எல்லாம் பார்வையைப் பொறுத்தது. எதிர்பாராதவிதமாக கண்ணில் பார்வை குன்றுவதை உங்களில் சிலர் கவனிக்கலாம். தகுந்த சிகிச்சை தேவைப்படும். பிரயாணத்தை இப்போது தள்ளி வைக்கவும்.

அதிஷ்ட எண். 1



## மகரம்

இந்த ராசிக்குரியவர்கள் திடீரென உச்சத்தில் மிதப்பதாக எண்ணக் கூடும். சகடக்கால் போல வரும் லாபம் இது. நண்பர்கள் பலர் உங் களை நாடி வரும்போது ஜாக்கிரதை யாயிருக்க வேண்டும். உங்கள் பேச்சு நாலுபக்கத்திலும் எடுபடும் இந்த நேரத்தை நல்ல வழியில் உபயோகிக்கவும். மனைவியின்உதவி மிக மிக முக்கியமானது.


அதிஷ்ட எண்.9



## கும்பம்

ஒரு பெரியவர் உதவி காத்திருக்கிறது. வெளிதேசத்து நண்பர் வருகையும் லாபகரமானதாக இருக்கப்போகிறது. திருமணப் பொருத்தம் அனேகமாக உத்தமமாகத்தான் இருக்கப்போகிறது. சீதனப் பிரச்னையைச் சமாளிக்க சகோதர உறவின் உதவி கிடைக்கலாம். கொடுத்த கடனைத் திரும்பப் பெறுவதில் சிரமம் ஏற்படலாம்.

அதிஷ்ட எண்.5



## மீனம்

எதிர்பார்த்த அளவு வருமானம் வரவில்லையென்று கவலைப்பட வேண்டாம். எல்லா உறவினர்களும் ஆபத் சகாயர்களல்ல என்பதை உணர நேரிடும். நண்பர்களைத் தான் நம்ப வேண்டும். உடல்நலக் குறைவு ஏற்பட விடாமல் அலைச்

# சந்தானம் சொன்ன ஜோக்

ஒரு நாடகத்தில் ஒருவர் அனுமார் வேடம் போட்டு அபாரமாக நடித்தார். அவருக்கு பாராட்டு விழா நடத்த விரும்பினார்கள். அதை அவரிடம் சொன்னதும், "எனக்கு விழா நடத்துவதை விட எனக்கு மேக்கப் போட்டவருக்குத் தான் நீங்கள் பாராட்டு விழா நடத்த வேண்டும்" என்றார்.

மேக்கப் போட்டவரிடம் சென்று அதைச் சொன்னார்கள். அவர் கூறினார். "நான் அப்படி ஒன்றும் பிரமாதமாக மேக்கப் போட்டு விடவில்லை! வாலை மட்டும்தான் அவருக்கு ஒட்டினேன்!" –நவீனன்

# பக்குவம்

(12ம் பக்கத் தொடர்ச்சி)

யும் வாரிக் கொட்டிக் கொண்டதான ஓர் அனுபவ விகாசம் அவனுள் செறிவு கொண்டது.

தன்னை மறந்தவனாய், சாருகேசி ராகப் பாடலொன்றை முணு முணுத்தபடி, சைக்கிள் பெடலை அழுத்தி மிதித்தான். சைக்கிள் இயல்புக்கு மீறியதான வேகம் கொண்டது. இவனுக்குக் காற்றில் மிதந்தது போலிருந்தது.

# பண்ணிசைப் பாமாலை

பாடியவர்:
திருமதி மாதினி சிறீக்கந்தராசா
ஒலிப்பதிவு: யாழ் ரி.சீலன்
மேலுறை
வடிவமைப்பு: க.கிருஷ்ணராஜா
விலை: £ 3.00

லண்டனில் வாழும் கர்நாடக சங்கீதக் கலைஞர்களிடையே திருமதி மாதினி சிறிக்கந்தராசாவின் பெயரை அறியாத ரசிகர்கள் இல்லையென்று சொல்லலாம். குரல் இனிமையிலும் ராக விஸ்தார முறை யிலும், லய ஒழுங்கிலும் மாதினியைக் கேட்டவர்கள் மிக உயர்ந்த பக்குவம் நிறைந்த பாடகி என்பதை அறிவார்கள். இவருடைய பெயரில் "பண்ணிசைப் பாமாலை" என்ற தலைப்பில் புதியதொரு ஒலிப்பதிவு நாடா வெளிவந்திருக்கிறது. பரம்பரையாகத் திருக்கோவில்களில் அபிஷேக ஆராதனையையடுத்து சோடசோபசாரத்தின்போது "தேவாரம் அருளிப் பாடுவது" சைவ மரபாக வழிவந்திருக்கிறது. சோழ அரசர்கள் ஏற்படுத்தி வைத்த மரபு இது. இந்த மரபைப்பற்றித் தமிழ்நாட்டவர்களைவிட ஈழத் தமிழன்பர்களுக்கு நன்கு தெரியும். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்



லாண்டு, திருப்புராணம், திருப்புகழ் என்ற வரிசைப்படி இறைவனுக்கு அர்ப்பணம் செய்வது மரபு. இதற்கென்று அந்தக் காலத்தில் தேவாரம் ஓதுவதற்கு "ஓதுவார்களை" நியமித்து வந்தார்கள். அந்த மரபு இன்றும் தமிழ்நாட்டுக் கோவில்களில் நிலைத்து வருகிறது. அவர்கள் இப்போது ஒரு தனி இனமாக, ஓதுவார் என்றும் தேசிகர் என்றும் வழங்கப்படுகின்றனர்.

சென்ற ஐம்பது அறுபது வருடங் களுக்கு முன்பு வரை சைவக் கோவில்களில் திருமுறை பாடுவதற் கென்று ஒரு பந்தாவை ஓதுவார்கள் கைக்கொண்டிருந்தார்கள். கர்நாடக சங்கீதக் கச்சேரிகளில் ராகபேதம் லயபேதங்களில் விதவான்கள் ரசி கர்களுக்கு இசையின்பத்தை அளிப்பதைக்கண்ட ஓதுவார்கள் தமது பாடல்களும் கச்சேரி மேடை ஏற வேண்டும் என்ற நோக்கத்தோடு பண்ணிசை ஆராய்ச்சிகள் நடத்தினார்கள். தமிழிசைச் சங்கம் பிறந்தது. இசையறிஞர்கள் ஆராய்ச்சியில் தேவாரப் பண்களுக்குச் சமமான கர்நாடக ராகங்களை இனம் கண்டார்கள. அந்த வகையில் இப்போது ஓதுவார்கள் பலர் கர்நாடக இசையைப் பயின்று சைவத் திருமுறைப் பாடல்களை, ஓரளவு பழைய வடிவ மரபை வைத்துக் கொண்டு புதிய கச்சேரி மரபையும் சேர்த்து, பக்தியோடு ஜனரஞ்சகத்தை இணைத்துக் கச்சேரி செய்து வருவதைக் காண்கிறோம். இந்த வகையில் சமீபத்தில் லண்டனில் சில சைவ அன்பர்கள் அழைப்பின் பேரில் வந்திருந்த திருப்பனந்தாள் ஆதீனத்தைச் சேர்ந்த ஓதுவார் முத்து கந்தசாமி தேசிகர் திருமுறைப் பாரம்பரியத்தை பல மேடைகளில் சிறப்பாகப் பாடிப் பலரது பாராட்டைப் பெற்றார். அவரது ஓதுமுறையைப் பயின்று மாதினி சிறிக்கந்தராசா இந்த ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டிருக்கிறார். இதுவரை நாம் அறிந்த, கேட்ட, கர்நாடகப் பாடல்களில், லண்டனில் வசிப்பவர்களில், மாதினியின் இசை வளத்துக்கு ஒரு தனிச்சிறப்புண்டு என்பதை யாவரும் தெரிந்திருப்பார்கள். அந்த வகையில் இந்த ஒலிப்பதிவு நாடாவில் பாடப்பட்டிருக்கும் திருமுறைப் பாடல்களில் அவருடைய இசை முத்திரை பதிந்திருப்பது தெரிகிறது. இசைச் சுவை குன்றாது வழங்கியிருக்கிறார் மாதினி. அத்தனை உருப்படிகளில் "வீடலால வாயிலாய்" என்று தொடங்கும் சம்பந்தர் தேவாரத்தை மாதினி பாடியிருக்கும் பக்குவத்தைத் தனியாக எடுத்துப் பாராட்ட வேண்டும்.

–பைரவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இவருக்கு 'பாஸ்போர்ட்' ரெடி!

தன் பதினோரு வயது மகனைக் காதைப் பிடித்து இழுக்காத குறையாக அந்த அரசு அதிகாரி ஓட்டலுக்கு அழைத்துச் சென்றார். பசியாறவா? இல்லை. ஒரு தண்டனை கொடுக்க! எப்படி? பிறர் சாப்பிட்ட எச்சில் தட்டுக்களை இரண்டு மணிநேரம் கழுவச் செய்தார். ஏன்? பின் என்ன, வீட்டில் எப்பொழுதும் சினிமா கதாநாயகன் ஆகும் கனவில் அந்தச் சிறுவன் கூத்தும்



கும்மாளமுமாகக் காலத்தைக் கழித்தால் எந்தத் தந்தைக்குப் பிடிக்கும்; அதிலும் படிப்பில் போதிய கவனம் செலுத்தாமல்.

இன்று? அந்தப் பையன் பிரமாதமாகப் படித்துத் தந்தையைப் போல ஒரு பெரிய அதிகாரி ஆகியிருப்பான் என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை! அந்தத் தந்தை இன்று தன் மகனுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறார். மகனுக்குமே மகிழ்ச்சிதான். அவரும் தான் விரும்பியபடியே திரைத்துறையில் பெரிய கதாநாயகன் ஆகிவிட்டார்; அதிலும் ஒரு படத்திற்கு ஒன்றேகால் கோடி ரூபாய் ஊதியம் வாங்கும் அளவுக்கு.

அவர்தான் முன்னணித் தெலுங்கு நடிகர் சிரஞ்சீவி. இந்திப்பட உலகில் கொடிகட்டிப் பறந்த அமிதாப் பச்சன் முக்கால் கோடி மட்டுமே வாங்கி இருக்கிறார். ஒரு கோடியை எட்டும் நிலையில் இருக்கிறார் தமிழ் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த். ஆனால் சிரஞ்சீவி என்ற அந்த இளைஞர் இவர்களையெல்லாம் ஓரங்கட்டி விட்டார்.

சென்னையில் வேறு கல்லூரிப் படிப்பு படிப்பதாகச் சொல்லி அடையாறு திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து 'புனே' திரைப்படக் கல்லூரியில் சேரமுடியாத ஏக்கத்தைத் தீர்த்துக் கொண்டார். "சிவ சங்கர் வரப்ரஸாத்' என்ற இவர் 'சிரஞ்சீவி' என்ற புதிய பெயருடன் திரைப்படத்துறையில் நுழைந்தார்.

சிறந்த, வேகமான அசைவுகள் கொண்ட நாட்டியம்- (அதையெல்லாம் ஆட்டம் என்று சொல்வதே பொருத்தம்!) தனக்குப் பதில் நபர் போட்டுக்கொள்ளாமல் சண்டைக் காட்சிகளில் நடிக்கும் துணிவு, துடிப்பு, திறமை. இவர் தன் முதல் படத்திற்கு வாங்கிய தொகை ரூ 1116; தனது 119-வது படத்தில் இந்த ஊதியத்தைப் பத்தாயிரம் மடங்கு பெருக்கிக் கொண்டார்! மூக்கில் விரலை வைக்க வேண்டியிருக்கிறது அல்லவா?

அந்த அளவுக்குத் திரை உலகை ஆட்டிப் படைத்து ரசிகர்களை ஈர்த்துள்ள இவர் இந்தித் திரைப் படப்பக்கம் எட்டிப் பார்க்க நினைக்கிறார்; இந்தியாவில் எடுக்கப்பட்ட ஒரு ஆங்கிலப் படத்தில் அனாயாசமாக, அட்டகாசமாக நடித்திருக்கிறார். ஆயினும் பார்ப்பதற்கு மிகவும் எளிமையானவர்.



தன் குழந்தைகள், சகோதர சகோதரிகள் குழந்தைகளுடன் பொழுதைப் போக்குவது இவருக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இவருக்கு சுமார் ஆறாயிரம் ரசிகர் மன்றங்கள் ஆந்திராவில் உள்ளன.

படங்களில் பலவிதமான வேடங்களை ஏற்ற இவர் அடுத்த சில வருடங்களில் அரசியலிலும் நுழையலாம். தென்மாநிலங்களில் முதல்வர் ஆகவேண்டும் என்றால் திரைத்துறையிலிருந்து "பாஸ்போர்ட்" பெற வேண்டும். அது இவருக்கு இருக்கிறது. மக்களும் தெரிந்த முகங்களையே அரசுக் கட்டிலில் அமர்த்திப் பார்க்க விரும்புகிறார்கள். அதுவும் இவருக்கு ஒரு அரசியல் ஆதாயமாகலாம். சிரஞ்சீவி சிரஞ்சீவியாக இருக்கட்டுமே.

-ஆரென்

# கேள்வி

(11ம் பக்கத் தொடர்ச்சி)

பாணிகள் இருக்கின்றன. இவை இரண்டுக்குமிடையேயான முக்கிய வேறுபாடுகள் என்ன?

புதுக்கோட்டை தக்ஷிணாமூர்த்தி பிள்ளை என்றொரு பெரிய வித்வான் இருந்தார். அவர் வழிவந்த பாணி புதுக்கோட்டை பாணி. என்னுடைய வாத்தியார் முருகபூபதி இந்த வகையினர்தான். இவர்கள் மிருதங்கத்தில் நாதத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். இதனால் தஞ்சாவூர்ப்பாணியில் நாதம் இல்லை என்பதல்ல. ஆனால் புதுக் கோட்டை பாணியில் அதற்கு முக்கியத்துவம் அதிகம். எங்களது வாத்தியாரும் அப்படியேதான். ஆனால், கோர்வைகள், கணக்கு வழக்குகள் அவையுமிருக்கும்.

என்னுடைய குருகுல வாச காலத்தில் மிருதங்கத்தில் மூவர் மிக உச்சத்திலிருந்தார்கள். பாலக்காடு மணிஐயர், பழநி சுப்பிரமணிய பிள்ளை, மற்றையது எங்களது வாத்தியார். முன்னரெல்லாம் மண் முண்டையாபிள்ளை போன்றவர்கள் ஒரு கோர்வை வாசிப்பதானால் 128 அட்சரம் 148 அட்சரம் இப்படி பெரிதாக இருக்கும். இதை பாலக்காடு மணி ஐயர் குறைத்து, அத்துடன் நளினமாக்வும் அமைத்தார். அது ஒரு பாணியாகிவிட்டது. தஞ்சாவூர் வைத்தியநாதையர் பெரிய வித்வான். பாலக்காடு மணி ஐயர் அவரிடம் கற்றபின் தனக்கென்று ஒரு பாணியை- அந்த அடிப்படையை வைத்துக் கொண்டு- அமைத்தார். அதேமாதிரி பழநி பாணி; முருகபூபதி பாணி மூன்றும் மூன்று தினுசாக இருக்கும். ஆனால் மூன்றும் நன்றாகவிருக்கும்.

மிருதங்கத்தில் கப்பி மிருதங்கம், குச்சி மிருதங்கம் என்று இரண்டு வகை. இவைபற்றி...

கப்பி மிருதங்கத்தில் மிருதங்கத்தின் வலந்தலையில் (வலது பக்கம்) மீட்டுக்கொடுக்கும் பகுதிக்கு அடியில் குருணிகளை திணிப்பார்கள். அப்போது அதில் நல்ல அதிர்வு ஒலி ஏற்படும். குச்சி மிருதங்கத்தில் அந்த இடத்தில் குச்சி வைப்பார்கள். குச்சி வைத்து வாசிக்கும்போது ஆரம்பத்தில் என்ன நாதம் இருக்கிறதோ அது கடைசி வரையில் இருக்கும். ஏனெனில், குச்சி அதிலேயே நிற்கும். ஆனால் கப்பி மிருதங்கத்தில் வாசிக்க வாசிக்க அவை சில உதிரும். அப்போ கச்சேரி நடுவில் அதை மீண்டும் திணிக்க வேண்டும். அது பாடுகின்ற வித்வான்கள் சிலருக்கு பிடிக்காது. அந்தக் காலத்தில் மணி ஐயர் கப்பி போட்டு வாசித்தார். அவர் பெரிய வித்வான். அவர் இடைநடுவில் அப்படிச் செய்தாலும் எவரும் எதுவும் சொல்ல மாட்டார்கள். சிவராமன் முன்னர் கப்பிபோட்டு வாசித்தவர் இப்போது குச்சி வைத்து வாசிக்கிறார். ஆனால் இது அவரவர் பழக்கத்தைப் பொறுத்தது; கை வாகு. என்னுடைய வாத்தியார் குச்சி வைத்தே வாசித்தார். நானும் அப்படியேதான்; பழகிவிட்டது.

ஒரு கச்சேரியிலே தனி ஆவர்த்தனம் எப்படி அமைய வேண்டும்?

இப்போதுதான் சிலகாலமாக- ஒரு எட்டு, பத்து வருடங்களாக- தனியாவர்த்தனத்தை சிலர் நீளமாக வாசிக்கிறார்கள். முன்னரெல்லாம்- இப்போதுங்கூட, ஒரு கச்சேரியிலே இரண்டு 'தனி' இருக்கும். முதலாவது, பாட்டு ஒன்றிலே வரும். மற்றையது பல்லவியில். இந்த முதல் 'தனி' சில கச்சேரிகளில் தனி மிருதங்கமாகவே இருக்கும். சில கச்சேரிகளில் மிருதங்கமும் கடமுமாக இருக்கும். அந்த நாள்களிலே கோதண்ட ராமையார், ஆலங்குடி ராமச்சந்திரன் போன்றோர் பெரிய கட வித்வான்களாக திகழ்ந்தார்கள். பாலக்காடு மணி ஐயர், பழநி, எங்கள் வாத்தியார் ஆகியோரது கச்சேரிகளில் இந்த முதல் 'தனி' வெறும் மிருதங்கம் மாத்திரமாகவேயிருந்தால் 8 நிமிடம் அல்லது 10 நிமிடந்தான் இருக்கும். கூடவே, உபபக்கவாத்தியமான கடமோ, கெஞ்சிராவோ இருந்தால் 12 அல்லது 13 நிமிடம் இருக்கும். ஒரு ஜதி வாசித்து அப்புறம் குறைப்புக்கு சென்றுவிடுவார்கள்.

-இன்னுங் கொஞ்சம் வாசிக்க மாட்டார்களா? அதற்குள்ளே நிறுத்தி விட்டார்களே என்று ஓர் உணர்வை ஏற்படுத்தி இவர்கள் நிறுத்தி விடுவார்கள். இந்த வழக்கம்தான் தொடர்ந்து கொண்டிருந்தது. ஒரு 15 நிமிடத்துக்கு மேல் தனியாவர்த்தனம் வாசித்துவிட்டால் 'என்ன இதுதவில் மாதிரி' என்பார்கள். நாதஸ்வரக்கச்சேரியில் அந்த நாள்களிலே சண்முகம்சுந்தரம்பிள்ளை, சீதாமங்களம் சண்முக வடிவேல், நாச்சியார் கோவில் ராகவன்பிள்ளை, யாழ்ப்பாணம் தக்ஷிணாமூர்த்தி போன்றவர்களுக்கு ஒரு 'ஜொயின்ற்' முடிய குறைந்தது முக்கால் அல்லது ஒரு மணி நேரம் ஆகும். ஆனால் மிருதங்கத்தில் அப்படி வாசிப்பதில்லை.

பொதுவாக, மிருதங்கம் கற்க முற்படுகின்றவர்களுக்கு அநுபவமும், முதுமையும் மிக்க நீங்கள் சொல்வதென்ன?

எந்தக் கலையானாலும், சீக்கிரம் மேடையேறவேண்டும் என்ற நோக்கமின்றி, முதலில் கலையை ஒழுங்காக கற்கவேண்டும். அப்படிக் கற்று பின்னர் மேடையேறுகின்றபோது விட்டுக்கொடுக்காத தன்மை மேடையில் ஏற்படும். கேள்வி ஞானம் க்லைகளுக்கு முக்கியமானது. நேரடியாக பலரின் கச்சேரிகளைக் கேட்க- பார்க்க இயலாத இந்நாடுகளில் ஒலி நாடாக்களை முடிந்தபோதெல்லாம் கேட்கவேண்டும்; தினமும் அப்பியாசிக்க வேண்டும்.

-மேடையேறலாம் என்று மற்றையவர்கள் சொல்ல வேண்டும். இதைத்தான் நான் சொல்வேன்.


நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்து, தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்ட

**லண்டன் மெலொடீஸ்**

இசைக்குழுவினரின்

**பொன் மாலைப் பொழுது**

**25-10-1992 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு**

நடைபெறவுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்

இடம்:
Lloyds Park Theatre
Winns Terrace (Off Forest Road)
Walthamstow, London E17

Nearest Tube: Walthamstow Buses: 69, 96, 123, 315

நிகழ்ச்சிகள்

* தாள லய நாடகம்

"மேலும் கீழும்"

* ஈழத்தின் தலை சிறந்த இளம் கலைஞர்களால் ஒன்று கூடி அமைக்கப்பட்ட லண்டன் மெலொடீஸ் இசைக்குழுவினர் வழங்கும்

"பொன் மாலைப் பொழுது"

* ரசிகர் அவையிலிருந்து

லண்டன் மெலொடீஸ் இசைக்குழுவினரின் இசையில்

"தேனிசை மழை"

குறிப்பு: "தேனிசை மழை" நிகழ்ச்சியில் பங்கு பற்ற விரும்பும் இலை மறை காய் போல் உள்ள பாடகர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளவும்:

அமலன் (தொலைபேசி 081-520 9819) அல்லது ஸ்கந்தமூர்த்தி (தொலைபேசி 081-531 0818)

**அன்பளிப்பு £ 4.00**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பதவி நூலில் பறக்கும்......

(7ம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பானதாகவே இருக்கலாம்; ஆனால் இலக்கியச் சிறப்புக்கான கௌரவம் இதற்கு முன்பே அல்லவா வந்திருக்க வேண்டும்? ஏதோ இப்பொழுதுதான் புதிதாக ஏற்பட்டிருக்கிறது என்றாலே அது பதவியின் காரணமாக என்று சந்தேகிக்க ஓரளவு இடம் உண்டு. ஆனால் ஏற்கனவே இரண்டு முறை நிராகரிக்கப்பட்ட படைப்பு இப்பொழுது கூடுதல் நேரம்- கூடுதல் பணம் என்ற சலுகைகளுடன் ஒப்புதல் தரப்பட்டிருக்கிறது என்றால் அதிகார பலத்தை நரசிம்மராவ் பயன்படுத்தாவிட்டாலும், அவரது அதிகார பலத்தினால் பயன்பெற விரும்புபவர்கள் உள்நோக்கத்துடன் இப்படி ஒப்புதல் தந்திருக்கலாம் என்ற கூற்றை எவராவது முற்றிலுமாக மறுக்க முடியுமா?

சரி, நரசிம்மராவைக் காக்காய் பிடிக்க தூர்தர்ஷன் அதிகாரிகள் முயன்றால் நரசிம்மராவின் அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள், அவரது ஆலோசகர்கள் எவராவது அவரிடம் 'ஐயா', இந்த நேரம் உங்களது படைப்பு ஒளிபரப்பாக வேண்டாம்; தூர்தர்ஷனிடம் சொல்லி விடுங்கள்" என்று அறிவுரை சொல்வதல்லவா நியாயம்? ஏன் அவர்கள் அப்படிச் சொல்லவில்லை?

தொலைவில் இருக்கும் தொலைக் காட்சியாளர் இவ்வளவு தூரம் காக்காய் பிடிக்க முடிகிறது என்றால் பிரதமரின் அருகிலேயே இருப்பவர்கள் கூடுதலாக காக்காய் பிடிக்க விரும்புவதால் இப்படியெல்லாம் கொரவமான ஆலோசனைகளைச் சொல்வதில்லை. மாறாக, ஒரு வேளை, "இதென்ன, பிசுரத்துக்காக, இரண்டே முக்கால் லட்ச ரூபாய்; வாராவாரம் ஒரு லட்சம் என்று தரவேண்டாமோ" என்றபடி பேசக்கூடும்.

அதிகார நாற்காலியின் அருகில் இருப்பவர்கள்தான் அதிகம் காக்காய் பிடிக்கிறார்கள். நாற்காலி ஆட்டம் காணப்போகும் விஷயமும் அவர்களுக்கே முதலில் புரியும். அப்போது சாமர்த்தியமாக விலகி விடுவார்கள். எனவே அவர்களுக்கு பொருள், புகழ் நஷ்டம் எதுவும் கிடையாது. பிறகென்ன, முடிந்த மட்டும் சாமரம் வீச வேண்டியது தான்.

டெல்லி வரை போக வேண்டாம்; சில வருடங்களுக்கு முன்பு சென்னையில் என்ன நடந்தது என்பதை நரசிம்மராவை சுற்றியுள்ள அதிகாரிகள் புரிந்து கொள்ளாவிட்டாலும் அவராவது புரிந்து கொள்வது நல்லது.

திமுக தலைவர் மு.கருணாநிதி ஆட்சிக்கு வந்த வருடம் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இலக்கிய கௌரவமான ராஜராஜன் விருது அவருக்கு வழங்கப்பட்டது. இதற்கு கருணாநிதியை எப்படித் தேர்ந்தெடுத்தார்கள், யார், ஏன், என்ன அளவுகோல் என்பதையெல்லாம் விட்டு விடுவோம். கருணாநிதி ஒரு எழுத்தாளர்; தமிழ் அறிந்தவர் என்பதில் யாருக்கும் எந்த சந்தேகமும் இல்லை. பல வருடங்களாக கருணாநிதி எழுதி வருகிறார். அப்போதெல்லாம் அவரைக் கண்டு கொள்ளாத தமிழ்ப் பல்கலைக் கழகம்,அவர் முதல்வரான பிறகு தான் அதைக் கண்டு கொள்ள வேண்டுமா? அவ்வளவு நாட்கள் தமிழ்ப் பல்கலைக் கழகம் தூங்கிக் கொண்டிருந்ததா? அது அல்ல பிரச்னை. பின்?

கருணாநிதி ஆட்சிக்கு வந்ததும் அவரது துதிபாடிகள் தூண்டிவிட்டு, அல்லது பல்கலைக்கழகத்தினரே துதிபாடிகளாக மாறி- அதுதான் உண்மை- கருணாநிதிக்கு ராஜராஜன் விருதினைக் கொடுத்தார்கள்; அதுவும் எப்படி? அவரது வீட்டுக்கே கொண்டு வந்து கொடுத்தார்கள். பதவி வந்தால் மீதி எல்லாம் வீடுதேடி வரும். கொடுத்தவர்களுக்கு தமிழின் மீதோ, கருணாநிதி மீதோ அக்கறை கிடையாது. முதல்வர் தயவுக்காக, கொடுக்க வேண்டியதைக் கொடுத்தால் பெறவேண்டியதைப் பெறலாமே என்ற நப்பாசை; தப்பாசை.

காக்காய் பிடிக்க இடம் கொடாதபடி கருணாநிதியாவது நடந்து கொண்டிருக்கலாம். விருதின் பணம் லட்ச ரூபாய் ஒரு பொருட்டல்லவா; கருணாநிதி அதற்கு ஆசைப்பட்டார் என்று சொல்லிவிட முடியாது. அவரை அப்போது ஆட்டுவித்தது பொருளாசை அல்ல; புகழாசை. அது சரி, கருணாநிதிக்கு நெருக்கமான அவரது ஆலோசகர்கள், அவர் பதவியில் இல்லாத போதும் இன்னும் அவரது தோள் துண்டைப் பிடித்துக்கொண்டே நடப்பவர்கள் அன்று அவரிடம் என்ன சொல்லியிருக்க வேண்டும்? "ஐயா, உங்களுக்கு இந்த விருது வேண்டாம். இதை மறுத்து விடுங்கள்," என்று சொல்லியிருக்கலாமே!

விருது கொடுக்கப்படுவதற்கு முன்பே அல்லது கருணாநிதியாவது "ஏ, பல்கலைக்கழகமே என் தமிழ்ப் புலமை, திறமைபற்றி உங்களுக்கு இன்றுதான் தெரிந்ததா? உண்மையிலேயே என் புலமையை மதிப்பதாக இருந்தால், நான் பதவியில் இல்லாத போது, வெறும் எழுத்தாளனாக மட்டுமே இருந்த போதல்லவா கொடுத்திருக்க வேண்டும்" என்று கேட்டிருக்கலாமே!

அதுவல்லது, "பதவியில் இருக்கும் பொழுது இந்த விருதினைப் பெறுவது பொருத்தம் இல்லை என்ற காரணத்தினால் இதை நான் நிராகரிக்கிறேன். விருதுபெற எழுத்தாளர் கருணாநிதி பொருத்தமான நபராக இருக்கலாம்- முதல்வர் கருணாநிதியாக அதைப் பெறுவது முறையல்ல" என்று சொல்லியிருந்தால் அவரது பெருமை கௌரவம் எல்லாமே உயர்ந்திருக்கும். அவரை வெறுப்பவர்கள், எதிர்ப்பவர்கள் கூட, அவர் அந்த விருதுக்குப் பொருத்தமானவர் என்று சொல்லி, வேண்டாம் என்ற பெருந்தன்மையைப் புகழ்வார்களே. புகழாசையை நிறைவு செய்து கொள்வதென்றால் கருணாநிதி அப்படிச் செய்திருக்க வேண்டாமோ?

கருணாநிதி அப்படிச் செய்யாது போயினும் பிரதமர் நரசிம்மராவாவது தான் பதவியில் இருக்கும் காலத்தில் தன் படைப்புகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட வேண்டாம் என்று சொல்லலாமே.

பதவியில் இருக்கும் பொழுது பலரும் பொருள், புகழ் இரண்டும் எந்த வழியில் வந்தாலும் பரவாயில்லை என்று நினைப்பதும் இந்தக் கூத்துக்கெல்லாம் ஒரு காரணம்; தவிரவும் பொருள், புகழ் இரண்டுமே நல்ல வழிகளில் தான் வருகின்றன என்று காக்காய்க் கூட்டம் பெரும் பதவிப் பொறுப்புகளில் இருப்பவர்களை நம்பச் செய்கிறது.

எனவே பட்டங்கள், விருதுகள், அவை தரும் புகழ் போதைக்குப் பல பெரிய மனிதர்கள் அடிமையாகிவிடுகிறார்கள். அன்று கருணாநிதி, இன்று நரசிம்மராவ். தென்னகத்தின் இன்னொரு உதாரணம் நரசிம்மராவின் அருகில் இருப்பவர்களுக்குத் தெரியாமல் இருந்தால் நல்லது என்று நினைக்கிறேன். தென்னகப் பல்கலைக்கழகம் ஒன்றில் துணைவேந்தராக இருந்த ஒரு முன்னாள் நீதிபதி அதே பல்கலைக்கழகப் பொன்விழாவில் பத்துபேருக்கு கௌரவ டாக்டர் பட்டம் கொடுத்தபோது தனக்கும் ஒன்று கொடுத்துக் கொண்டார். அப்பொழுதே கௌரவ டாக்டர் பட்டத்தின் மானம் ஆகாய விமானத்தை விட அதிக உயரத்தில் பறந்தது; இதே போக்கில் போனால் இனி பட்டங்கள், விருதுகளின் கௌரவம் என்ன ஆகுமோ?



பிளம்ஸ்ரெட் 'அருண உதயம்' தமிழ்ப் பாடசாலை அண்மையில் நடாத்திய கோடை விடுமுறை சிறார் விளையாட்டுத் திட்டத்தில் மாணவர் அளித்த ஓர் அபிநய நிகழ்ச்சி.


# "நூறு பூக்கள் மலரட்டும்"

ஆதரவாளர்கள் ஆர்வலர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்

# தமிழரங்கம்

## கருத்துப் பரிமாறலும் கலை நிகழ்ச்சியும்

### லண்டனில் தமிழ் அவைக்காற்று கலைகள்

மேலதிக விபரங்கட்கு:
081 459 4335
081 470 7883

இசை, நடனம், நாடகம்

**24.10.1992**

இராப்போசனம் பெற்றுக் கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன

சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியிலிருந்து 6.30 மணிவரை கருத்துப் பரிமாறல்
மாலை 6.30 மணியிலிருந்து 9.30 மணிவரை கலைநிகழ்ச்சிகள்

**WALTHAM FOREST THEATRE**

LLOYD PARK, WINNS TERRACE (OFF FOREST ROAD) NEAREST TUBE: WALTHAMSTOW - BUSES: 123, 69, 96, 315

தமிழர்களால், தற்போது லண்டனில் அடிக்கடி நிகழ்த்தப்படும் கலைநிகழ்ச்சிகள், தமிழர் தம் இருப்பையும் தமது கலாச்சார தனித்துவத்தையும் நிலைநாட்டும் முயற்சிகள் தானா? எமது குழந்தைகளுக்குத் தமிழ் பாரம்பரிய கலைகளைப் பயிற்றுவிப்பதற்கு பின்புலத்தில் உள்ள நோக்கம் என்ன? பங்கு பெறுவோரின் தரம் வளர்ச்சி அடைந்து வருகின்றதா? அரங்கேற்றங்கள் சாதிப்பது என்ன? தரமான நாடக ரசிகர் கூட்டத்தை உருவாக்குவதில் உள்ள பிரச்னைகள் என்ன?

- இது போன்ற பல கேள்விகளுக்குக் களம் அமைத்து ஆக்க பூர்வமான வளர்ச்சிக்கு வழிவகுக்க, வெளிப்படையான கருத்துப் பரிமாறல்கள் அவசியம்.


** தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தினர் இலங்கையிலும் புகலிடங்களிலும் தொடரும் கலை நிகழ்ச்சிகளை விளக்கும் கண்காட்சியும் இடம்பெறும். கண்காட்சியைப் பிற்பகல் 2.00மணியிலிருந்து பார்வையிடலாம். **

தமிழோசையும் தமிழ் அவைக்காற்று கலைக்கழகமும் இணைந்து வழங்கும் நிகழ்வு இது




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்